# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 039 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 20, சனி 04.01.2014

பக்கம் : 32
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை
29 C 24 C




பக்கம் 06
இளையோரே இந்தியாவை வழிநடத்துவர்



பக்கம் 07
அமெரிக்காவை மிரட்டுகின்றது பனிப்புயல்





பக்கம் 22
கொக்குவில் ஸ்ரீ காமாட்சி சுவீகரித்தது கிண்ணத்தை



பக்கம் 23
அண்டர்சன் சாதனையும் ஒருநாள் தகர்க்கப்படும்


# இலங்கைத் தமிழரின் தீர்வுக்காக தொடர்ந்து உழைக்கிறது இந்தியா

## புதுடில்லியில் மன்மோகன் சிங் தெரிவிப்பு

புதுடில்லி, ஜன.4
இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்தியா அக்கறை கொண்டிருக்கவில்லை என்று கூறப்படுவதில் உண்மையில்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசை இணங்கச் செய்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.




மன்மோகன் சிங்கின் 10 ஆண்டுகால ஆட்சியில் மூன்றாவது செய்தியாளர் சந்திப்பு டில்லியில் நேற்று நடைபெற்றது. அதன்போது, இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் இந்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்காதது ஏன் என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மன்மோகன்சிங், இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக இந்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேசும்

21 ஆம் பக்கம் பார்க்க

# மண்டையோடுகளில் துவாரம் தடயப்பொருள்களும் சிக்கின

## மன்னார் புதைகுழியில் நேற்றும் 4 எலும்புக் கூடுகள் மீட்பு



மன்னார், ஜனவரி 4
மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை மீட்கப்பட்ட மண்டையோடுகளின் மேற்பகுதியில் துவாரங்கள் இருந்தமை தெரியவந்துள்ளது. அத்துடன் சில தடயப்பொருள்களும் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தோண்டும் பணிகள் நேற்று மீண்டும் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது மேலும் நான்கு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. ஏற்கனவே மீட்கப்பட்ட 11 எலும்புக் கூடுகளுடன் சேர்த்து இதுவரை 15 எலும்புக் கூடுகள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரட்ண ஆகியோர் முன்னிலையில் நேற்றுக் காலை 8 மணி முதல் பிற்பகல் 2.15 மணி வரை குறித்த புதைகுழியைத் தோண்டும் பணிகள் இடம்பெற்றன. இதன்போது நான்கு எலும்புக் கூடுகள் மீட்

21 ஆம் பக்கம் பார்க்க

## போக்குவரத்துப் பொலிஸிலும் இனிமேல் தமிழ் பேசுவோர்

யாழ்ப்பாணம், ஜன.4
யாழ். குடாநாட்டில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவிலும் தமிழ் பேசும் பொலிஸாரை அதிக அளவில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் ஜயதிலகவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

யாழ். குடாநாட்டில் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸில் தமிழ்ப் பொலிஸாரோ, தமிழ் பேசும் பொலிஸாரோ மிகக் குறைந்த அளவிலேயே பணி புரிகின்றனர். வாகனங்களில் செல்வோர் போக்குவரத்து விதிமுறைகளை மீறினால்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு - கிழக்கில் நேற்று தாதியர்கள் போராட்டம்

### ஆளணியை நியமிக்குமாறு கோரி





யாழ்ப்பாணம், ஜன.4
யாழ்.போதனா வைத்திய சாலை உட்பட வடக்கு-கிழக்கு வைத்தியசாலைகளுக்கென நியமனம் செய்யப்பட்ட பின்னர் மீள அழைக்கப்பட்ட தாதியர்களை மீண்டும் வடக்குக்கே நியமனம் செய்யுமாறு கோரியும், வடக்கில் உள்ள தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு வலியுறுத்தியும் தாதியர்கள் நேற்று நண்பகல் ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து வைத்தியசாலை

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாவில் போராடும் இலங்கை

கொழும்பு, ஜன.4
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எதிர்வரும் மார்ச்சில் இலங்கைக்கு எதிராக விடுக்கப்படும் சவால்களை முறியடிக்க தாம் இறுதி வரை போராடவுள்ளதாக இலங்கை

21 ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு மீள்குடியமர்வை ஜனாதிபதியே முடிவு செய்வார்

### யாழ். செயலகத்தில் கூறினார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன.4
வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பில் என்னால் எதுவும் கூறமுடியாது. அது தொடர்பில் ஜனாதிபதியே முடிவு செய்வார் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்களை மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து தனியார் வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும்,

21 ஆம் பக்கம் பார்க்க

## மூன்றாவது தடவையும் மஹிந்தவே ஜனாதிபதி

### யாழ்ப்பாணத்தில் அமைச்சர் குணரட்ண

யாழ்ப்பாணம், ஜன.4
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் ஜனாதிபதி [illegible] ஜனாதிபதித் தேர்தலிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே மூன்றாவது முறையாகவும் போட்டியிடவுள்ளார். அவரே அடுத்தமுறையும் ஜனாதிபதி என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக் கொள்கிறேன் என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன்.

21 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலின் போது ராணுவத்தை கட்டுப்படுத்த அதிகாரமில்லை

### கைவிரித்தார் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, ஜன.4
இலங்கைத் தேர்தல் ஆணையாளருக்குப் போதிய அதிகாரம் வழங்கப்படவில்லை என்பதை நேற்று ஒப்புக்கொண்ட தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, இதற்கு வடக்கு மாகாணசபைத் தேர்தலை உதாரணம் காட்டிப் பேசியுள்ளார்.

வடக்குத் தேர்தலில் இராணுவத்தின் வன்முறையைத் தடுப்பதற்கான அதிகாரம் தனக்கு வழங்கப்படவில்லை என்று அவர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் பகிரங்

21 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாயில் மீளக் குடியமர்ந்த 48 குடும்பங்களுக்கு உதவிகள்

## அமைச்சர் குணரட்ண வீரக்கோன் வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜன.4
மீளக் குடியமர்த்தப்பட்ட 48 குடும்பங்களுக்குப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கோப்பாய் அக்கரைப் பிரதேசத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சசர் குணரட்ண வீரக்கோன், நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் எனப் பலர் கலந்துகொண்டனர்.



இதன்போது மீள்குடியேற்றப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 12 கூரைத் தகரங்களும், சிமெந்துப் பைக்கற்றுகளும் வழங்கப்பட்டன.
அத்துடன் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு அணையும் உடைத்து அகற்றப்பட்டது. இதனை மீள்குடியேற்ற அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.
(த-21)

# பூந்தோட்டத்தில் சமூக அமைப்பு

வவுனியா, ஜன.4
வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உதவும் கரங்கள் என்ற சமூக அமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.
இதனை பூந்தோட்டம் ஜென்ஸ் விளையாட்டுக் கழகமும், அவ்வூர்இளைஞர்களும்இணைந்து அமைத்துள்ளனர்.
பூந்தோட்டம் மற்றும் வவுனியா கிராமங்களில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் வறிய மக்களுக்குத் தேவையான உதவிகளை இந்த அமைப்பு வழங்கி வருகின்றது. (க-402)

# உலக இளைஞர் மாநாடு மே மாதம் கொழும்பில்

கொழும்பு, ஜன. 4
உலக இளைஞர்கள் மாநாடு எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி கொழும்பில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.
உலகளாவிய ரீதியில் இளைஞர்கள் ஒன்றிணைந்து இளைஞர்களது பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கான மாநாடாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 157 நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர்.
வேலையில்லாப் பிரச்சினை, மன உளைச்சல், பாலியல் ரீதியான வன்முறைப் பிரச்சினைகள், சமுதாயம் சார்ந்த பிரச்சினைகள், இளைஞர்களின் முன்னேற்றத்துக்கு தடையாகவுள்ள பிரச்சினைகள், சமுதாயத்திலிருந்து எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகள் என அவரவர் தாம் சார்ந்த நாடுகளின் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான மாநாடாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டுக்கான வேலைத் திட்டங்களை மாவட்ட ரீதியாக இளைஞர் சேவைகள் மன்றங்கள் முன்னெடுத்து வருகின்றன.
(த-14)

# திருடனைத் துரத்தியவர் காலில் காயமடைந்தார்

தென்மராட்சி, ஜன. 04
திருடனைச் துரத்திச் சென்றவர் மோட்டார் சைக்கிளால் மோதுண்டதில் காலில் பாதிப்பு ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமத்தில் இடம்பெற்றது.
கொடிகாமம் நகர்ப்பகுதியில் உள்ள போண் விற்பனை நிலையத்திற்கு சென்ற இளைஞன் அங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசியைத் திருடிக் கொண்டு வெளியேறிய போது அங்கு நின்றவர்கள் அவனைத் துரத்திப் பிடித்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.
பொலிஸ் நிலைய வாசலுக்கு முன்னால் சைக்கிளை நிறுத்துவது போல் பாசாங்கு செய்து விட்டு திருடன் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அவ்வேளையில் அங்கு நின்றவர்கள் அவரைத் துரத்திச் சென்ற வேளையில் திருடனைப் பிடிக்க ஓடியவர் எதிரே வந்த மோட்டார்

> **“பொலிஸ் நிலைய வாசலுக்கு முன்னால் சைக்கிளை நிறுத் துவது போல் பாசாங்கு செய்து விட்டு திருடன் அங்கிருந்து தப்பி யோடியுள்ளார்.**

சைக்கிளில் மோதுண்டு காயமடைந்தார். இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.
கச்சாய் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி சுதாகரன் (வயது - 26) என்பவரே காலில் பாதிப்புக்கு உள்ளானவராவார்.
இதேவேளை துரத்திப் பிடிக்கப்பட்ட திருடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். இதன்போது அவரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
(த-9)

# சந்தேகநபருக்கு விளக்க மறியல்

கொடிகாமம் இரட்டைக் கொலை வழக்கின் சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தர விடப்பட்டது.
கொடிகாமத்தில் தாயும் மகளும் வெட்டிக் கொலை செய்தது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெண்ணின் கணவரையே தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (த-9)

# 8க்கு மேற்பட்ட இடங்களில் ஒவ்வொரு வாரமும் திருட்டுகள்

யாழ்ப்பாணம், ஜன. 4
யாழ்.குடாநாட்டில் ஒவ்வொரு வாரமும் 8 இற்கும் மேற்பட்ட இடங்களில் திருட்டுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. கடந்த வாரமும் 8 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார்.
யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தெல்லிப்பழை பன்னாலையில் வீட்டுக் கதவு உடைத்து 6 லட்சத்து 68 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. கொடிகாகமம், கச்சாய் வடக்கில் வீட்டுக் கதவு உடைத்து ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.
யாழ்.நகர் யமுனா வீதியில் கடை உடைத்து 20 ஆயிரத்து 230 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. யாழ்.நகரில் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.சுன்னாகத்தில் 12 ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.
வட்டுக்கோட்டையில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடு திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் மூளாய், காரைநகர் பிரதேசங்களைச் சேர்ந்த 2 போ கைது செய்யப்பட்டுள்ளனர்.
மானிப்பாயில் பெறுமதிமிக்க இரண்டு பித்தளைக் குத்து விளக்குகள் திருடப்பட்டுள்ளன.
சுதுமலை வடக்கில் பெறுமதி மிக்க நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது. இந்தத் திருட்டுகள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை - என்றார். (த-4-86)

# இந்திய மீனவர் மன்னாரில் கைது

மன்னார், ஜன.4
இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டதாக 10 இந்திய மீனவர்களை மன்னார் தாழ்வுப்பாடு பகுதியில் வைத்து மன்னார் கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.
இந்தியாவிலுள்ள இராமநாதபுரம் தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 10 மீனவர்களே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீன் பிடித் தொழிலுக்குப் பயன்படுத்திய இரண்டு இழுவைப் படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றினர்.
கைது செய்யப்பட்ட 10 மீனவர்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபபட்டனர்.
பின்னர் நேற்றுக் காலை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்திடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.
குறித்த 10 இந்திய மீனவர்களின் வாக்கு மூலங்கள் பெறப்பட்ட பின்னர் அவர்கள் மன்னார் மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ். மெராண்டா தெரிவித்தார்.
(த-400-56)

# கொடிகாமம் சிறுமி கடத்தல்; சந்தேக நபர் விளக்க மறியலில்

வலி.வடக்கு, ஜன. 4
சிறுமியைக் கடத்திய சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கொடிகாமம் இடைக்குறிச்சியைச் சேர்ந்த 15 வயது நிரம்பிய சிறுமி ஒருவரை வரணியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 24ஆம் திகதி இரவு கடத்தியதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வல்வெட்டித்துறைப் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கடந்த 27ஆம் திகதி கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதியிடம் முன்னிலைப் படுத்தினர்.
இதன்போது குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் என யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எ.நிஹால் பெரேரா நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். (த-400-4-86)

# முல்லைத்தீவு செல்லாதவாறு இ.போ.ச. பஸ்கள் தடுப்பு

கிளிநொச்சி, ஜன. 4
கிளிநொச்சி - முல்லைத்தீவு இடையே போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் கிளிநொச்சி இ.போ.ச. பஸ் சேவையை முல்லைத்தீவு தனியார் பஸ் சங்கத்தினர் தடுத்து நிறுத்தியதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.
கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவுக்குப் பயணிகள் சேவையில் ஈடுபடும் கிளிநொச்சிச் சாலைக்குச் சொந்தமான இ.போ.ச. பஸ்களை, முல்லைத்தீவு தனியார் பஸ் சங்கத்தினரும், பஸ் உரிமையாளர்களும் சேர்ந்து நேற்றுத் தடுத்து நிறுத்தினர் என இ.போ. ச. பஸ் சாரதிகளும், நடத்துநர்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.
இது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்ட போதும் அது குறித்து எந்த வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் கூறினர்.
இதனால் அரச அலுவலர்கள், பருவகாலச்சீட்டுக்களைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை - முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது கிளிநொச்சி - முல்லைத்தீவுக்கான சேவையைக் கிளிநொச்சி இ.போ.ச. பஸ்கள் மேற்கொள்ளுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதனைக் குழப்பும் வகையிலேயே தனியார் பஸ் சங்கத்தினரும், உரிமையாளர்களும் இத்தகைய அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளதாக இ.போ.ச. பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் குற்றம் சாட்டியுள்ளனர். (த-400)

> **“முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது கிளிநொச்சி முல்லைத்தீவுக்கான சேவையைக் கிளிநொச்சி இ.போ.ச. பஸ்கள் மேற்கொள்ளு வது எனத் தீர்மானிக்கப்பட்டது.**

# நீதிமன்ற அனுமதியுடன் அகற்றப்பட்டது ஆலயம்

யாழ்ப்பாணம், ஜன. 4
நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் நுழைவாயிலுக்கு அருகில் வீதியோடு அண்மித்து இருந்த வைரவர் ஆலயம் நீதிமன்ற அனுமதியுடன் கடந்த வியாழக்கிழமை அகற்றப்பட்டுள்ளது.
இது தொடர்பாக ஆலய பிரதம குருவும் ஆதீனகர்த்தாவுமான கமல்ராஜ் குருக்களிடம் கேட்டபோது,
வீதி அகலிப்புப் பணிகளின் போது குறித்த ஆலயம் வீதிக்கு மிகவும் அண்மித்ததாக உள்ள நிலையை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஆலய நிர்வாகத்தினருக்கு தெரியப்படுத்தியிருந்தனர். இந் நிலையில் குறித்த ஆலயத்துக்குப் பதிலாகப் புதிய வைரவர் ஆலயம்



40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு 2 வருடங்களுக்கு முன்னர் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இருந்த போதிலும் பழைய வைரவர் ஆலயத்தின் மீதான வழக்கு நீதிமன்றில் நடைபெற்று வந்தமையால் ஆலயத்தை அகற்ற முடியவில்லை.
இந்நிலையில் ஆலயத்தின் நன்மை கருதி நீதிமன்றிற்கு எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து பழைய வைரவர் ஆலயத்தை அகற்ற அனுமதி வழங்கப்பட்டது. இது வரை காலமும் ஆலயத்தின் தேர், சம்பறம் போன்ற உற்சவங்களில் பழைய வைரவர் ஆலய இடப்பரப்பால் நிலவிய நெரிசல் நிலை இனி வரும் காலங்களில் ஏற்படாது என்றார். (த-10-20)

# ரயில் பாதையைக் கடப்பதில் இடர்களுக்கு ஆளாகும் மக்கள்

கிளிநொச்சி நகரிலிருந்து திருமுறிகண்டி வரையான ரயில் பாதையைக் கடப்பதில் பொது மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
திருமுறிகண்டிக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் உள்ள பகுதியில் 21 இடங்களில் மக்கள் ரயில் பாதையை கடக்க வேண்டிய நிலையில் உள்ளனர். ஆனால் ஏழு இடங்களில் மட்டுமே பாதையைக் கடக்கக் கூடிய வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ரயில் பாதையைக் கடப்பதால் இடர்கள் ஏற்பட்டு வருகின்றன.
எனவே ரயில்வேத் திணைக்களத்தினர் மக்களின் இடர்களைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மதுப்பாவனை 337 பேருக்கு அபராதம்

*கிளிநொச்சி மாவட்டத்தில்*

யாழ்ப்பாணம். ஜன.4

கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மதுப் பாவனைக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 337 பேருக்கு 16 இலட் சத்து 23 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் கடந்த வருடம் அறவிடப்பட்டுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி ஆ.எஸ்.ராஜு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் உத்தி யோகத்தர்களது கண்காணிப்பு நடவடிக்கைகளின்போது சட்ட விரோதமாக மதுப் பாவனைக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 337 பேருக்கு எதிராக கடந்த வருடம் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது.

**"-" மதுவரிக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 337 பேருக்கு எதிராக கடந்த வரு டம் வழக்குத் தாக்கல் செய் யப்பட்டுள்ளது.**

வட்டக்கச்சி, உருத்திரபுரம், கண்டாவளை போன்ற பிர தேசங்களில் அதிகமாக இந்தக் குற்றச்செயல்கள் இனங்காணப் பட்டன. அவற்றில் கசிப்பு உற் பத்தியில் ஈடுபட்ட ஒருவரும், கோடா வைத்திருந்த 5 பேரும், கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 35 பேரும், அரச சாராயத்தை அனுமதி இல்லாமல் விற் பனை செய்த 8 பேரும், வீடு களில் வைத்து கள் விற்பனை செய்த 247 பேரும், அனுமதி இல்லாமல் பியர் விற்பனை செய்த ஒருவரும், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 40 பேரும் என 337 பேருக்கு எதிராக கிளிநொச்சி, முல்லைத்தீவு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது 16 இலட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் அறவிடப் பட்டுள்ளது என்றும் தெரிவித் தார். (வ-14)

# செயற்கைமுறைச் சினைப்படுத்தல் தற்காலிகமாக இடை நிறுத்தம்

*கால்வாய் நோய்த் தாக்கம் காரணமாக*

அச்சுவேலி, ஜன.4

யாழ்.மாவட்டத்தில் கால் நடைகளுக்கான கால்வாய் நோய் தாக்கம் காணப்படும் கோப்பாய், தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஆடு, மாடுக ளுக்கான செயற்கைமுறைச் சினைப்படுத்தல் வேலைத் திட்டம் ஜனவரி இரண்டாம் திகதியில் இருந்து இடை நிறுத் தப்பட்டுள்ளது. நோய்த் தாக் கம் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டதும் மீளவும் நடை முறைப்படுத்தப்படும்.

கால்வாய் நோய்த் தாக்கம் உள்ள கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஆடு, மாடுகளை வெளியான இடங் களில் மேய விடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் நோய்க்கான மருந்துகளை உரிய முறையில் பயன் படுத் தினால் 5-6 தினங்களில் நோய் தாக்கம் குறைவடை யும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் சம் பந்தப்பட்ட நான்கு பிரிவுக ளைச் சேர்ந்த கால்நடை வைத்தியர்க ளுக்கும் பிரதேச கால்நடை அபிவிருத்தி போதனாசிரி யர் களுக்கும் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கோப்பாய், வட்டுக் கோட்டை, சங்கானை ஆகிய கால்நடை வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளில் ஆடு, மாடுகளுக்கு கால்வாய் நோய் தாக்கம் அவதானிக்கப் பட்டதை அடுத்து ஆடு, மாடு களுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் 2 ஆம் திகதி யில் இருந்து இடை நிறுத்தப் பட்டுள்ளது.

**"-" ஆடு, மாடுகளுக்கு கால்வாய் நோய்தாக்கம் அவதானிக் கப்பட்டதை அடுத்து ஆடு, மாடு களுக்கான செயற்கை முறை சினைப்படுத்தல் 2 ஆம் திகதியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப் பாளர் சி.வசிகரன் தகவல் தெரிவிக்கையில்;

நான்கு கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளில் கால் நடைகளுக்கு கால்வாய் நோய்த் தாக்கம் அவதானிக் கப்பட்டதை அடுத்து செயற்கை முறைச் சினைப்படுத்தல் வேலைத் திட்டம் தற்காலிக மாக இடைநிறுத்தப்பட்டுள் ளது. பிரதேச கால்நடை வைத் தியர்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் கள் கால்வாய் நோய் தடை மருந்துகளை வழங்குவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நோய்த் தாக்கம் காணப்படும் காலப் பகுதியில் கால்நடை களை வெளியான இடங்களில் மேய விடாமல் உரிய முறை யில் மருந்துகளை பயன்படுத் தினால் 5-6 தினங்களில் நோய் குணமடைந்து மாடு, ஆடுகள் இயல்பு நிலைக்கு வரும். கால்வாய் நோய்த் தாக் கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சகல தரப்பினரும் ஒத்து ழைக்க வேண்டும்-என்றார். (வ-11)

# மீண்டும் சொந்த இடத்தில் சாவகச்சேரி நீதிமன்றம்

*எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் செயற்படும்*



தென்மராட்சி, ஜன.4

30 வருட கால இடைவெளி யின் பின்னர் சாவகச்சேரி நீதி மன்றம் தனது சொந்த இடத் தில் புதிய கட்டடத்தில் இயங்க வுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 160 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட சாவகச்சேரி நீதிமன்ற வளாகத் தொகுதி எதிர் வரும் 9 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு உத்தி யோகபூர்வ மாக திறந்து வைக்கப்படவுள் ளது.

கட்டடத் திறப்பு விழாவுக்கு விருந்தினர்களாக நீதி அமைச் சர் ரவூப் ஹக்கீம், பொருளா தார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ , பிரதம நீதிய ரசர் மொஹான் பீரிஸ் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ள னர்.

சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதி கடந்த 30 வருடங்க ளுக்கு முன்னர் எரியூட்டி அழிக்கப்பட்டதை அடுத்து தனியார் வீடுகளில் நீதிமன்றச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக் கது. அன்றைய தினம் நண் பகல் மல்லாகம் நீதிமன்றக் கட் டடமும் பிற்பகல் ஊர்காவற் றுறை நீதிமன்றக் கட்டடமும் திறந்து வைக்கப்படவுள்ளமை யும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் கற்பித்தலுடனான செயலமர்வுகள்

*விடுமுறை தினங்களில் நடத்தப்படும் என்கிறார் கல்வி அமைச்சர்*

தென்மராட்சி,ஜன.4

வடமாகாணக் கல்வி அமைச் சால் பாடசாலைகளின் ஆசிரி யர்கள், உதவிக் கல்விப் பணிப் பாளர்கள், சேவைக்கால ஆசி ரிய ஆலாசகர்கள் ஆகியோ ருக்கான கற்பித்தலுடனான அனைத்துச் செயலமர்வுக ளும் மார்ச் மாதத்தின் பின்னர் நடத்தப்படவுள்ளன. அவை சனி, ஞாயிறு மற்றும் விடு முறை தினங்களில் மட்டும் நடத்தப்படும் என்று மாகா ணக் கல்வி அமைச்சர் த.குரு குலராஜா தெரிவித்தார்.

செயலமர்வுகளின் நேரம் காலை 8.30 மணியிலிருந்து பி.ப.2.30 மணியுடன் நிறைவு பெறக்கூடிய வகையில் அமைக் கப்பட வேண்டும். வழங்கப் படும் பயிற்சிகளைப் பெறும் ஆசிரியர்கள் செய லமர்வின் முழுமையான பயனைப் பெற்று மாணவர்களுக்குப் புகட்ட வேண்டும்.

அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளின் உச்ச பயன் பாட்டை மாணவர்கள் பெறு கின்றனரா என்பதை அதிபர் கள் கண்காணிக்க வேண் டும். சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடை பெற்ற தென்மராட்சி கல்வி வலயத்தின் நல்லதொரு ஆரம்ப நிகழ்வில் அவர் இவ் வாறு தெரிவித்தார். (வ-9)

# சங்கானைப் பகுதிக்குள் கசிப்பு உற்பத்தி இல்லை

*கடந்த வருடத்தில்*

யாழ்ப்பாணம், ஜன.4

சங்கானை மதுவரித் திணைக் களத்துக்கு உட்பட்ட பகுதிக ளில் கடந்த வருடம் கசிப்பு உற் பத்திகள் இடம்பெற வில்லை. முடிந்தளவு கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று சங்கானை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கசிப்பு உற்பத்தியாளர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டப் பணம் அதிகரிக்க ப்பட்டதன் விளைவாகவும், மதுப் பிரியர் கள் அரச சாராயத்தை பெரு மளவு நாடுவதாலும் கசிப்பு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த வரு டம் அவ்வாறான குற்றச் செயல் கள் எவையும் இடம்பெற வில்லை. அத்துடன் 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்யும் வர்த்தக நடவடிக்கைகளும் கைவிடப்பட்டுள்ளன.

எனினும் அரச சாராயத்தை அனுமதி பெறாமல் வீடுகளில் வைத்து விற்பனை செய்யும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. அவர்களைக் கண்காணித்து நீதிமன்றங்க ளில் வழக்குத் தாக்கல் செய் யும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என் றும் அவர் தெரிவித்தார். (வ-14)

## நவீனமயமாகின்றன தென்மராட்சி கள்ளுத் தவறணைகள்

தென்மராட்சி, ஜன.4

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கள்ளுத் தவறணை களை நவீனமயப்படுத்தப் பட்ட முறையில் நிரந்தரக் கட்ட டங்களில் அமைக்கும் பணி கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வருடம் கள்ளுத் தவற ணைகளுக்கான வியாபார உரிமத்துக்கு விண்ணப்பித்த போது நிரந்தரக் கட்டட வசதி, மலசலகூட வசதி போன்றவை இல்லாததால் சுகாதாரப் பிரிவினர் பரிந்துரை செய்ய மறுத்தனர்.

அதை அடுத்து அந்தக் குறை பாடுகளை நிவர்த்தி செய்யு மாறு பிரதேச சபையினர் அறிவித்துள்ளதையடுத்து நிரந்தரக் கட்டடங்கள் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின் றன.

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தால் மட்டுவில்- முகறி, சரசாலை ஆகிய இடங்களி லும் கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் மந்து விலிலும் புதிய கள்ளுத் தவற ணைகளுக்கு நிரந்தரக் கட்ட டங்கள் அமைக்கப்பட்டு வரு கின்றன என்று தெரிவிக் கப்பட்டது. (வ-9)

# சுருவில் றோ.க.த.கவில் நேற்று முதல் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன.4

கடந்த 28 வருடங்களாக செயலிழந் திருந்த சுருவில் றோ.க.த.க.வித்தியால யம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் மீண்டும் இயங்க ஆரம்பித் துள்ளது.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் சிறு பிள்ளைகள் துறையூர் மற்றும் வேலணை நடராஜா வித்தியால யத்துக்குச் செல்ல வேண்டியிருந்தாலும் குறிப்பிட்ட இரண்டு பாடசாலைகளிலும் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியை கவனத் தில் கொண்டும் இந்தப் பாடசாலையை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறந்து வைத்தார்.

அதிபர் எஸ்.சிறிசெல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுருவில் பங்குத்தந்தை வண.மரியதாஸ், கோட் டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சோம சேகரம், தீவக வலயக் கல்வி உத்தி யோகத்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தரம் ஒன்று மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் தற்போது இடம்பெறும். முப்பதுக்கும் அதிகமான மாணவர்கள் தற்போது பாடசாலையில் இணைந்துள் ளனர். (வ-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் விடயத்தில் அலட்சியமாக செயற்படுகிறது இந்திய அரசு

## *பா.ம.க. கண்டனம்*

தமிழக மீனவர்களை மீட்காத இந்தியஅரசுக்குபாட்டாளிமக்கள் கட்சிகண்டனம்தெரிவித்துள்ளது. பா.ம.க. தலைமைப் பொதுக் குழுக் கூட்டம் சென்னை காம ராஜர் அரங்கத்தில் நேற்று முன்தினம்காலைநடைபெற்றது. அதில், கடலில்மீன்பிடிக்கச்செல் லும் மீனவர்களின் வாழ்க்கை கண்ணீரில் தான் கரைகிறது. நாகப்பட்டினம் முதல் இரா மேஸ்வரம் வரையுள்ள மாவட்டங்களின் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென் றால், மீண்டும் கரை திரும்பு வார்களா?என்பதுநிச்சயமில்லை. அந்த அளவுக்கு இலங்கைக் கடற்படையினரின் அட்டகா சம் அதிகரித்து வருகிறது. அவர் களால் இதுவரை 800 இற் கும்அதிகமானதமிழகமீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளனர். கடந்த 2013 ஆம் ஆண்டில் மட்டும் 600 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். இப்போதைய நிலையில் 267 தமிழக மீன வர்கள் இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 86 விசைப் படகுகள் இலங்கை அரசால் நாட்டுடைமையாக்கப்பட் டுள்ளன. இதனால், மீனவர் களின் குடும்பங்கள் வாழ் வாதாரத்தை இழந்து தவிக் கும் நிலையில், அவர்களை மீட்கவோ, அவர்களின் குடும் பங்களுக்கு உதவவோ இந் திய மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக் கையும் எடுக்க வில்லை. மாறாக மீனவர்கள் பேரா சைக்காரர்கள் என்று முத்திரை குத்தும் முயற்சி களில் தான் மத்திய அரசு ஈடுபட்டிருக்கிறது. மீனவர்கள் பிரச்சி னையில் மத்திய, மாநில அரசுகளின் பொறுப் பற்ற அணுகு முறையை இப்பொதுக் குழு வன் மையாகக் கண்டிக்கிறது. இலங்கைச் சிறையில் வாடும் 267 மீனவர் களையும், பறி முதல் செய்யப்பட்ட 86 படகு களையும் உடனடி யாக மீட்க வேண்டும், எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவி ருக் கும் தமிழக, இலங்கை மீனவர்கள் இடையி லான பேச்சுக் களின் போது,இப்பிரச்சினைக்கு நிரந்தத் தீர்வு காண மத் திய, மாநில அரசுகள் நடவடிக்கைஎடுக்கவேண் டும். இவ்வாறு தீர்மா னம் நிறைவேற்றப்பட் டுள்ளது. (வ)

# திருச்சி சிறப்பு முகாமில் இலங்கை அகதிகள் உள்ளிருப்புப் போராட்டம்



திருச்சி, ஜன.4

திருச்சியில் அகதிகளுக்கான சிறப்பு முகாமில் அடிப்படை வசதி கோரி இலங்கை அக திகள் கடந்த ஆறு நாள்களாக உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருச்சி மத்திய சிறை வளா கத்தில் அகதிகளுக்கான சிறப்பு முகாம் உள்ளது. அந்த முகாமில் உள்ள இலங்கை அகதிகள் 19 பேர் உணவுப் படியை இந்திய ரூ. 150ஆக உயர்த்த வேண்டும். சனி, ஞாயிறு விடுமுறை நாள்க ளில் உறவினர்களைச் சந் திக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரி கடந்த 29 ஆம் திகதி முதல் உள்ளிருப்பு போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி உதவி ஆளுநர் நடராஜன், இலங்கை அகதிகளிடம் பேச்சு நடத் தினார். இதில் உடன்பாடு ஏற்படாததை அடுத்து அகதிகள் தொடர் உள்ளிருப்புப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர். (வ)

## துப்புரவு செய்யப்படாத காணிகளில் நுளம்புகளின் பெருக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல தனியார் மற்றும் அரச காணிகள் துப்புரவு செய்யப்படாத நிலையில் காணப்படுவதால் நுளம்புகள் பெருகிக் காணப் படு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பச்சிலைப்பள்ளி பிரதேச செய லர் இது தொடர்பாக கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். மீளக்குடியமர்ந்த குடும்பங் கள் தமது காணிகளைத் துப்பு ரவு செய்துவருகின்றன. ஆனால் அயலில் உள்ள காணிகள் துப்புரவு செய்யப்படாத நிலை யில் காணப்படுவதால் நுளம்பு களின் பெருக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பாக உள்ளது. (க-18)

## ஆசிரியர்களே!

பாலர், தரம் 4, 5 புலமைப்பரிசில்,
தரம் 10, 11 சாதாரணதரம், தரம் 12, 13 உயர்தரம்
ஆகிய மாணவர்களின் ஜனவரி மாத கல்வித் தரத்தைப்
பரிசோதிப்பதற்கு ஒளி அரசி ஊடாக ஒரு வாய்ப்பு...
வாங்கிவிட்டீர்களா உங்கள் ஜனவரி மாத ஒளி அரசியை...

OLI ARAZI மாத சஞ்சிகை
ஒளி அரசி
இல்லத்தரசிகளின் தோழி

உங்கள் பிள்ளைகளின் மேலதிக திறமைகளை வளர்ப்பதற்கும் (கவிதை எழுதல், பழக்க வழக்கங்களை மேம்படுத் தல், ஆங்கில பாடல் அறிதல், வர்ணம் தீட்டுதல், சொற்றொடர் ஆக்கத்திறன், ஒப்பீடு செய்யும் திறன், தரம் 05 மாணவர் களுக்கான தரமான 10 வினாக்களுக்குப் பயிற்சி அளிக்கும் திறன், மூளைக்கு வேலை, கணித புதிர், விளையாட்டு, அறிவுத்திறன், பொது அறிவு, பொது விவேக, சமய அறிவுப் போட்டி, பாலர் களுக்கான ஆறு பக்க விசேட ஆக்கங்கள், சாதாரண தர மாணவர்களுக்கான தரமான வினாத்தொகுப்பு, வர்த்தக, கணித, விஞ் ஞான உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கான தரமான வினாத்தொகுப்பு) உங்களின் குடும்ப அறிவைப் பெருக்குவதற்கும் ஏற்றவகையில் **"ஒளி அரசி"** எனும் சஞ்சிகை ஒவ்வொரு மாதமும் சுடர்ஒளி கல்விப் பிரிவினரால் வெளியிடப்படுகிறது. ஜனவரி மாத இதழ் பல சுவாரசியமான அம்சங்களுடன் தற்போது வெளிவந்துள் ளது. 60/= விலையுடைய அரசியல், பாலியல் கலக்காத ஓர் பரிமாணப்படைப் பான கையேட்டை ஒரு தடவை வாங்கிப் படித்தால் அதன் பயன் அறிந்து மகிழ்வீர் கள். உங்கள் சகல வயதுப் பிள்ளைகளின தும் அறிவு விருத்திக்கு இது கைகொடுக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

**உங்கள் பிரதிகளை அருகிலுள்ள பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

மேலதிக தொடர்புகளுக்கு :
கொழும்பு - 071 4273035
யாழ்ப்பாணம் -
077 6569617 / 071 8182182

# தொடர்கிறது மீனவர் கைது வியாழனன்றும் 26 பேர் கைது

தமிழகத்தைச் சேர்ந்த மேலும் 26 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன் தினம் கைதுசெய்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம், நாகப்பட் டினம் உள்ளிட்ட தமிழக கட லோரப் பகுதிகளிலிருந்து செல்லும் மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்வதும், தாக்குதல் நடத்துவதும் தொடர் கதை யாகி வருகிறது. ஏற்கனவே 216 தமிழக மீன வர்கள் நீண்ட காலமாக இலங்கைச் சிறை யில் துய ருறும் நிலையில், கடந்த 29 ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் 22 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அடுத்த நாளே (டிச.30) பாம் பனைச் சேர்ந்த நாட்டுப் படகு மீனவர்கள் 18 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்க ளுடன் சேர்த்து தமி ழகத்தைச் சேர்ந்த 256 மீனவர்கள் இலங்கை கடற் படையினரால் சிறை பிடிக்கப்பட்டு உள்ள னர். அவர்களுடைய 81 மீன் பிடி படகுகளும் பறிமுதல் செய்து வைக் கப்பட்டுள்ளன. இதனால் மீனவர்கள் மத்தி யில் கொந்தளிப்பு நிலவுகிறது.

இலங்கை கடற்படையினரின் அட்டூழியத்தை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து மத் திய அரசை வலியுறுத்தி வந்த போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள் ளப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று முன் தினம் மேலும் 26 மீனவர் களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். (வ)

## பாடசாலைக் காணியிலிருந்து வெளியேறின குடும்பங்கள்

அக்கராயன் ஆரம்ப வித்தியா லயத்துக்குரிய காணியில் குடியிருந்த குடும்பங்கள் வெளி யேறியுள்ளன.

பாடசாலையில் அண்மையில் மறைந்த முன்னாள் அதிபர் ப.கணேசலிங்கம் எடுத்த பெரும் முயற்சி காரணமாக சோஆ நிறுவனத் தின் உதவியு டன் கரைச்சி பிரதேச செயல கம் வழங்கிய காணிகளில் தற்காலிக வீடுகள் வழங்கப் பட்டு இந்தக் குடும்பங்கள் குடியமர்த் தப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைக் காணி யில் வசித்த குடும்பங்களை வெளியேற்ற வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி அரச அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர், வடமாகாண கல்வி அமைச் சர் ஆகியோரிடம் பெற்றோர்கள் முறைப்பாடு தெரிவித்தி ருந்தனர். (க-18)

**ஐஸ்கிறீம் வாகனம் விற்பனைக்குண்டு**
நல்ல நிலையில் உள்ள ஐஸ்கிறீம்
விற்பனை செய்யும் வாகனம்
விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 8445445

2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்
அழையுங்கள். 0779086737 லப்டொப்/டெஸ்க்டொப்
GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.
Computer Repair Laptop DeskTop

**நம்ப முடியவில்லையா??? அதிசயம் ஆனால் உண்மை !!!**
நீங்கள் கருமை நிறம் உடையவரா? or சற்று நிறம் குறைந்தவர்களா?
உங்கள் கன்னங்கள் குழிவிழுந்தவையா? or கரு வளையம், பருக்கள் நீண்ட கால தழும்புகள், கரும்புள்ளிகள், பாலுண்ணிகள் உடையவரா?
உங்கள் உடல் பருமனாக அமைப்பில்லாமல் இருக்கின்றதா? or மெலிவான தோற்றமா? கவலையை விடுங்கள்!!!
முடி உதிர்வு, பொடுகு, பேன், செம்படை போன்றவற்றால் அவஸ்தைப்படுகிறீர்களா? மற்றும் அழகிய முக அமைப்பை பெற விரும்புகிறீர்களா?
10 நாட்களில் தீர்வு நிச்சயம் முதற் பதிவு அவசியம் அழையுங்கள் 0777351954
இவற்றிற்காக நீங்கள் பல இடங்களில் சிகிச்சை பெற்றும்
தீர்வு இல்லாமல் பணத்தையும் நேரத்தையும் வீண்செய்தீர்களா? கவலையை விடுங்கள்
"எம்மை நாடுங்கள்"
முற்றிலும் ஆயுள்வேத சிகிச்சைகள் பக்கவிளைவுகளற்றவை
We care Always
சானியா கேபல் கெயர்
262, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை
நல்லூர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### மாதர் ஆறுமுகம்



அனலைதீவைப் பிறப்பிட மாகவும், புங்குடுதீவை வசிப் பிடமாகவும் கொக்கு விலில் வசித்து வந்தவருமான மாதர் ஆறுமுகம் நேற்று (03.01.2014) வெள்ளிக் கிழ மை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் நாளை (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 54 கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்
021 2226094

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் சுகாதாரம் பேண அறிவுறுத்து

## டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக

யாழ்ப்பாணம், ஜன.4

இலங்கையில்டெங்குநோய்தீவிரமாகப்பரவிவருவதாகஅறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து பாடசாலைகளில் டெங்கு நுளம்புகளின் உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு பாடசாலை சமூகங்களை சுகாதாரத் திணைக்களத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். பாடசாலைகளில் தண்ணீர் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களில்நீர் தேங்கி நிற்பது, பாடசாலைகளில் காணப்படும் வடிகால்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாமை, பாடசாலைகளில் பயன்படுத்தப்படும் சமையலறைகளைத் துப்புரவாகவைத்திருக்காமை, அங்கு பயன்படுத்தப்பட்ட உலக உணவு நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட மீன் ரின்களின் வெற்றுற் ரின்கள் கண்ட இடங்களில் வீசப்பட்டுள்ளமை, பாடசாலை வளாகத்தில் காணப்படும் பற்றைகள் மற்றும் பொலித்தீன் பைகள் அப்புறப் படுத்தாமை போன்றவற்றினால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டு பாடசாலைசமூகத்தினர்பாடசாலை வளாகங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வைத்திருக்குமாறும் சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர். (வ-9)

### வயோதிபரை மோதியவர் தப்பிச் சென்றார்


வலி.வடக்கு, ஜன.4

மோட்டார் சைக்கிளால் மோதுண்டு வயோதிபர் உயிரிழந்த போதிலும், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் தப்பி ஓடிய சம்பவம் புதன் கிழமை இரவு நல்லூர் கல்வியங்காட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கல்வியங்காட்டுச் சந்தைக்கு அண்மையாக இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் திருநெல்வேலியைச் சேர்ந்த த.யோகநாதன் (வயது -66) என்பவராவார்.

விபத்தில் சிக்கிய குறித்த வயோதிபர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார். குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (வ-86)



கடந்த 20 வருடங்களாக அதிகார சபையாக இயங்கி வந்த இலங்கை சமுர்த்தி அதிகார சபை நேற்று முதல் வாழ்வெழுச்சித் திணைக்களம் என்ற பெயரில் செயற்படத் தொடங்கியுள்ளது. இதற்கான யாழ்.மாவட்ட நிகழ்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் க.மகேஸ்வரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. (வ-7)

### கசிப்புக் காய்ச்சியவர் பிணையில் விடுதலை

வலி.வடக்கு, ஜன.4

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் மல்லாகம் நீதிமன்றத்தால் ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் விடப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியவிளான் பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு காய்ச்சப்படுவதாக இளவாலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து இளவாலை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அ.அனுர நிஹப்பிட்டி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ததுடன் அவரிடம் இருந்து எட்டுப் போத்தல் கசிப்பு, மற்றும் ஒரு தொகுதி கோடா, அதனைக் காய்ச்சப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றினர்.

சந்தேக நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (வ-86)

### விசேட முற்பண கொடுப்பனவு வழங்க சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், ஜன.4

அரச உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு இந்த வருடத்துக்குரிய விசேட முற்பணக் கொடுப்பனவுத் தொகையான 2 ஆயிரத்து 500 ரூபா வழங்குவதற்கான சுற்றறிக்கை அரச பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

விசேட முற்பணக் கொடுப்பனவை எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அமைச்சின் செயலாளர் பீ.வீ.அபேகோன் அறிவித்துள்ளார்.

அரச ஊழியர்களுக்கு வருடா வருடம் விசேட முற்பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டு பத்து தவணைகளில் குறைந்த வட்டியுடன் மீள அறவிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## தவறணையை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

வலி.வடக்கு, ஜன.4

ஈவினை கிழக்கு இந்து மயானத்துக்குஅருகில்உள்ளகள்ளுத் தவறணையை அந்த இடத்தில் இருந்து அகற்றக் கோரி அந்தப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கையொப்பம் இட்டு வலி.தெற்கு உடுவில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாசிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.

குறிப்பிட்ட பகுதியில் உள்ள கள்ளுத்தவறணை கடந்த இருபதுவருடங்களுக்குமேலாக அந்தப் பகுதியில் இயங்கி வருகின்ற போதிலும், தற்போது அங்கு மக்கள் குடியேற்றம் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அந்தப் பகுதியில் இருந்து கள்இறக்கும்தொழிலை மேற்கொண்டவர்கள் தற்போது அங்கு இல்லாத நிலையிலும் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்தில் கள்ளுத் தவறணை இயங்குவதால் அந்தப் பகுதியில் வேண்டத் தகாத நிகழ்வுகள் இடம் பெறுகின்றன.

இதனால் அந்தப் பகுதியில் பாதிப்புக்கள் ஏற்படுவதால் கள்ளுத் தவறணையை அகற்றி வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-86)

## பனைசார் உற்பத்தியாளரிடமிருந்து ரூ.90 லட்சம் பொருள் கொள்வனவு

### பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

கடந்த வருடம் பனைசார் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட 90 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை பனை அபிவிருத்திச் சபை கொள்வனவு செய்துள்ளது.

இதனூடாக வடக்கு கிழக்கைச் சார்ந்த 1800 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்குகிழக்கில் பனைசார் உற்பத்திப் பொருள்களை தயாரிப்பதற்கு 93 பயிற்சி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்களில் கடந்த வருடம் 1800 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பனை அபிவிருத்திச் சபை கிராமிய ரீதியாக மகளிர் குழுக்களை சிறுசுவடுகள் அமைப்பின் ஊடாக ஒன்றிணைத்து கைவினைப் பொருள்களைத் தயாரிப்பதற்கான பயிற்சியை வழங்கி வருகிறது.

பயனாளிகளால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களை பனை அபிவிருத்திச் சபை கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

கடந்த வருடம் 90 இலட்சம் ரூபா பெறுமதியான உற்பத்திப் பொருள்கள் பயனாளிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்று தெரிவித்தார். (வ-14)

### வேலணை பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கு பயிற்சி

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கான கைவிரல் அடையாளம் பெற்றுக் கொள்ளும் முறைகள் குறித்து (எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை) இருதினங்கள் வேலணை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கும் நிகழ்வு வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் அறிவித்துள்ளார்.

இதன் வளவாளர்களாக பொலிஸ் திணைக்கள குற்றப்பதிவுப் பிரிவின் குற்றச் செயல் நடைபெறும் இடங்களைப் பரீட்சிக்கும் உத்தியோகத்தர் அல்லது இந்தத் திணைக்களத்தின் இதற்காகப் பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வர். (வ-7)

## மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்

### வேலணை சமுர்த்தி மன்றத்தால்

யாழ்ப்பாணம், ஜன.4

வேலணை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக் கிழமை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் இடம்பெற்றது.

வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 123 மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

முன்னதாக நிகழ்வில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட யாழ்ப்பாணம் சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

விருந்தினர்களை வரவேற்று இடம்பெற்ற நடனம், உரைகளைத் தொடர்ந்து தலைமையுரை, சிறப்பு விருந்தினர்கள் உரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்றன.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களுக்கும், பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஆற்றிய அளப்பரிய சேவைகள் குறித்து வேலணை பிர தேச செயலர் திருமதி மஞ் சுளா தேவி சதீசன் விளக்கமளித்தார்.

முன்பள்ளிச் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் கலந்து கொண்டவர்களின் பாராட்டுக்களைப் பெற்றன.


பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பை மற்றும் கற்றலுக்கான உபகரணங்களை விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் பெருமளவிலானோர் கலந்து கொண்டனர். (வ-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரே இந்தியாவை வழிநடத்துவர்

## மீண்டும் பிரதமராக பதவியேற்கேன்- மன்மோகன்



புதுடில்லி. ஜன.4


இந்தியாவை எதிர்காலத்தில் இளையோரே வழிநடத்துவார்கள். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பிரதமராகப் பதவியேற்கும் எண்ணம் எனக்கு இல்லை - என்று தெரிவித்துள்ளார் பிரதமர் மன்மோகன் சிங். புதுடில்லியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே மன்மோகன் சிங் இவ் வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்தால் எனக்கு மீண்டும் பிரதமராகும் எண்ணமில்லை. எதிர்காலத்தில் நாட்டை இளைய தலைமுறையினர் வழிநடத்துவார்கள். காங்கிரஸ் கட்சியின் பிரதமர் வேட்பாளர் உரிய நேரத்தில் அறிவிக்கப்படுவார். காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்திக்கு பிரதமர் ஆகும் தகுதிகள் அனைத்தும் இருக்கின்றன.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்க அரசு பல நடவடிக் கைகளை எடுத்துள்ளது. கடந்த 9 ஆண்டுகால ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில், அரசு பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

நான் எப்போதும் போல் தான் இருக்கிறேன். பிரதமர் பதவி என்னை மாற்றவில்லை. நேர்மையாகவும், விசுவாசமாகவும் நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எனது கொள்கை. நான் பலவீனமான பிரதமர் அல்ல. பிரதமர் பதவியில் அமர்ந்து நான் திறம்பட பணியாற்றி உள்ளேன் என்றே இப்போதும் கருதுகிறேன்" என்று தெரிவித்துள்ளார். (ற)

> "நான் பலவீனமான பிரதமர் அல்ல. பிரதமர் பதவியில் அமர்ந்து நான் திறம்படப் பணியாற்றி உள்ளேன் என்றே இப்போதும் கருதுகிறேன்."
>
> மன்மோகன் சிங்.



மகாராஷ்டிர மாநிலத்தில் கடந்த வியாழக்கிழமை லொறியுடன் மோதி பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 27 பேராக அதிகரித்துள்ளது. லொறியுடன் மோதிய பஸ் 400 அடி பள்ளத்தில் வீழ்ந்து உருக்குலைந்தது.

# மன்மோகன் சிங்கின் முடிவு நாட்டுக்கு நன்மை பயக்கும்

## பொன். இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



திருச்சி, ஜன.4

மீண்டும் பிரதமராகும் எண்ணமில்லை என்ற மன்மோகன் சிங்கின் முடிவு நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.க மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன்.

திருச்சியில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியைச் சந்திக்கும் என்பது பிரதமர் மன்மோகன் சிங்குக்குத் தெரியாதது அல்ல. தோற்கக் கூடிய காங்கிரசுக்கு தலைமை ஏற்க மன்மோகன் சிங் தயாராக இல்லை. அவர் தற்போது எடுத்துள்ள முடிவு அவருக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்கும்.

பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் மோடி குறித்து அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் சரியானவை அல்ல. அந்தக் கருத்துக்களை அவரது கருத்துக்களாகக் கருத முடியாதுள்ளது" என்று தெரிவித்தார்.

நரேந்திர மோடி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்த பிரதமர் மன்மோகன் சிங், "மோடி பிரதமரானால் இந்தியா பேரழிவைச் சந்திக்கும்" என்று தெரிவித்திருந்தார். (ற)

# கூட்டணியில் சேர்வதற்கு நிபந்தனை விதிக்கக் கூடாது

## இல. கணேசன் கூறுகின்றார்

சென்னை, ஜன.4

தேர்தல் கூட்டணியில் சேர்வதற்காக அரசியல் கட்சிகள் நிபந்தனைகள் விதிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார் பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் இல.கணேசன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்.

"மக்களவைத் தேர்தலுக்கான பிரசாரத்தை பா.ஜ.க. தொடங்கி விட்டது. தமிழகத்தில் அ.தி.மு.க., தி.மு.க. அல்லாத மோடி தலைமையை ஏற்கும் கட்சிகளுடன் பா.ஜ.க. கூட்டணி அமைக்கும். தே.மு.தி.க.வுடன் கூட்டணி குறித்து அதிகாரபூர்வமற்ற பேச்சு நடத்தி இருக்கிறோம். விரைவில் அதிகாரபூர்வ பேச்சு நடைபெறும்."

### நிபந்தனை கூடாது

"தமிழகத்தில் யார் தலைமையில் கூட்டணி அமைப்பது என்ற கேள்விக்கு இடமில்லை. நாடு முழுவதும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ஜ.க.வும் அங்கம் தான் வகிக்கிறது. இதனால், தமிழகத்திலும் தே.மு.தி.க., ம.தி.மு.க., பா. ம.க. போன்ற கட்சிகள் கூட்டணியில் சேர்ந்தால் அங்கம் வகிக்கத்தான் முடியும். பா.ஜ.க.வுடன் நிபந்தனையின்றி கூட்டணியில் சேர்வதாக வைகோ அறிவித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. கூட்டணியில் சேர்வதற்கு நிபந்தனை விதிக்கக் கூடாது."

### மோடிக்கு கிராக்கி

"நரேந்திர மோடியை மக்கள் விரும்புகின்றனர். சந்தையில் தனித்துவமான பொருளுக்கு கிராக்கி இருக்கும். அதைப் போன்று நரேந்திர மோடி தனித்துவமான அடையாளமாக இருக்கிறார். எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் 272 தொகுதிகளுக்கும் கூடுதலாக பா.ஜ.க. வெற்றி பெறும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# திரும்ப பெறப்பட்டது கெஜ்ரிவால் மீதான வழக்கு



புதுடில்லி, ஜன.4

புதுடில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது தொடரப்பட்டிருந்த தேசத் துரோக வழக்கு மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சட்டக்கல்லூரி மாணவர் ஒருவரால் தொடரப்பட்டிருந்த இந்த வழக்கு தற்போது புதுடில்லியில் முதலமைச்சராக கெஜ்ரிவால் பதவியேற்றதை அடுத்தும், அவர் மக்களுக்கு திறம்பட ஆற்றும் சேவையை அடுத்தும் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்தச் சட்டக் கல்லூரி மாணவர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனுவில், "2012ஆம் ஆண்டு காசியாபாத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில், நாடாளுமன்றத்தில் கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களுமே உள்ளனர் என்று அரவிந்த் கெஜ்ரிவால் கூறியிருந்தார்எனவே அவர்மீது வழக்கு பதிவு செய்யுமாறு பொலிஸுக்கு உத்தரவிட வேண் டும்" என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த நிலையில், நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகிய மனுதாரர், "புதுடில்லியின் புதிய முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள கெஜ்ரிவால் சிறந்த முறையில் செயல்படுகின்றார். அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தீவிரமாகப் பாடுபடுகின்றார். அவருக்கு எதிராகத் தொடர்ந்த தேசத்துரோக வழக்கை மீளப் பெற்றுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார்.

அதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் வழக்கை மீளப் பெற அனுமதியளித்தது. (ற)

# வீடற்றவர்களுக்கு இரவுக் காப்பகங்கள்

## அதிரடித் திட்டங்களை அறிமுகப்படுத்துகிறார் கெஜ்ரிவால்

புதுடில்லி, ஜன.4

அனைத்துக் குடும்பங்களுக்கும் மாதம் 20,000 லிற்றர் இலவசக் குடிநீர், மின் கட்டணம் பாதியாகக் குறைப்பு ஆகிய மக்கள் நல திட்டங்களுக்கு அடுத்தபடியாக வீடற்றோருக்கு இரவுக்காப்பகங்கள் என்று புதிய திட்டத்திற்கு உத்தர விட்டுள்ளார் அரவிந்த் கெஜ்ரி வால்.

டில்லியின் கடுங்குளிரில் சாலையோரங்களில் படுத்துறங்கும் மக்களின் வாழ்க்கை நிலை பற்றிய கணக்கெடுப்புக்கு முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்து, அரசு அதிகாரிகளும் தொண்டு நிறுவனங்களும் நடத்திய கணக்கெடுப்பில் டில்லியின் 45 பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள், கொட்டும் மழையிலும், பனியிலும் நனைந்தவாறு மேற்கூரை ஏதுமின்றி நடைபாதைகளில் படுத்து உறங்குவது தெரிய வந்தது.

தற்போதுள்ள காப்பகங்கள் குளிரைத் தாங்காத தரப்பாள்களால் செய்யப்பட்டுள்ளமை குறித்தும் அதிகாரிகளால் அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதையடுத்து அந்தக் காப்பகங்களுக்கு பதிலாக எளிதில் குளிர் தாக்காத இரவுக் காப்பகங்களை அந்த இடங்களில் உடனடியாக அமைத்துக் கொடுக்கும்படி கெஜ்ரிவால் உத்தரவிட்டுள்ளார். (ற)

# தெலுங்கானாவுக்கு எதிர்ப்பு; சீமாந்திராவில் கடையடைப்பு

ஹைதராபாத், ஜன.4

தெலுங்கானா சட்டத்திருத்தம் மீது ஆந்திர சட்ட சபையில் நேற்று ஆரம்பமாகிய விவாதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சீமாந்திரா பகுதியில் முழுக்கடை அடைப்பு நடைபெற்றது. அதனால் அங்கு இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

ஆந்திர சட்ட சபையில் ஆந்திர மாநில மறுசீரமைப்பு சட்டத் திருத்தம் தொடர்பாக நேற்று விவாதிக்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆந்திர மாநில அரசு ஊழியர்கள் சங்கம் மற்றும் அனைத்துக் கட்சிகள் சார்பில் சீமாந்திராவில் உள்ள 13 மாவட்டங்களிலும் ஒரு நாள் முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது.

முழு அடைப்பையொட்டி சென்னையில் இருந்து ஆந்திராவுக்கு இயக்கப்படும் பஸ் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. (ற)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கம்போடியாவில் ஊதிய உயர்வு கோரி போராட்டத்தில் ஈடுபட்ட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் வன்முறைகளில் இறங்கியதை அடுத்து பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன. வன்முறைகளை அடுத்து பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். அதையடுத்துப் பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ள நிலையில் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

## பனியில் சிக்கிய கப்பலில் இருந்தோர் மீட்பு

ஹொபோர்ட், ஜன.4
தென்துருவ கடற்பரப்பில் பனிக் கட்டிகளில் சிக்கிய கப்பலில் இருந்த பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்கள்.
இந்தக் கப்பல் கடந்த 24ஆம் திகதி முதல் பனிக்கட்டிகளில் சிக்கி நகர முடியாத நிலையில் இருக்கின்றது.
அந்த ரஷ்யக் கப்பலில் 74 பேர் பயணம் மேற்கொண்டிருந்தனர். அவர்களில் விஞ்ஞானிகள், சுற்றுலா பயணிகள் என்போர் அடங்கலாக 52 பேர் ஹெலிகொப்டர்கள் மூலம் ஆஸ்திரேலிய அரசுக்குச் சொந்தமான கப்பலுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். தற்போது மாலுமிகள் மாத்திரமே ரஷ்யக் கப்பலில் எஞ்சியுள்ளனர்.
குறித்த கப்பல் ஆஸ்திரேலியாவின் தாஸ்மேனியா மாநிலத்தின் தலைநகர் ஹொபோர்ட்டில் இருந்து சுமார் ஆயிரத் 500 கடல் மைல் தூரத்தில் தென்திசையில் அமைந்துள்ள கடற்பரப்பில் சிக்கியுள்ளது. (ற)

## முஷாரப் ஆதரவாளர்கள் பிரார்த்தனை

இஸ்லாமாபாத், ஜன.4
மாரடைப்புக் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப், நலமடைய வேண்டி அவரது ஆதரவாளர்கள் பிரார்த்தனை நடத்தியுள்ளனர்.
ராவல்பின்டியில், முஷாரப் அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைக்கு முன்பு கூடிய ஆதரவாளர்கள், அவருக்கு ஆதரவாகமுழக்கங்களைஎழுப்பினார்.
தேசத்துரோகக் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் முன்னிலையாக இருந்த முஷாரப்புக்கு மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்தநிலையில் வழக்கு விசாரணையை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு நீதிமன்று ஒத்தி வைத்துள்ளது. (ற)

# அமெரிக்காவை மிரட்டுகின்றது பனிப்புயல்

### *நியூயோர்க்கில் அவசர நிலை பிரகடனம்*



நியூயோர்க், ஜன.4
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் முதல் வீசத் தொடங்கியுள்ள பனிப் புயலின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதையடுத்து அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
நியூயோர்க் நகரத்திலும் அதன் வடக்குப் புறநகர்ப் பகுதிகளிலும் குளிர்காலப் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து மூன்று முக்கியநெடுஞ்சாலைகள் நேற்று மூடப்பட்டன. நகர ஆளுநர் ஆண்ட்ரூ குயோமோ நேற்று நியூயோர்க்கில் அவசரநிலையைப் பிரகடனம் செய்துள்ளார்.
நியூயோர்க் நகரின் பெருநகரப் போக்குவரத்து ஆணையம் தங்களுடைய ஊழியர்களையும், பயணிகளையும் பாதுகாக்கும் நோக்கில் சில பஸ் சேவைகளையும், ரயில் சேவைகளையும் நிறுத்த இருப்பதாகத் தெரிவித்தது. அந்த நகரின் போக்குவரத்து ஆணையமும், மாநில நெடுஞ்சாலைப் போக்குவரத்தும் மாநிலம் முழுவதும் சாலைகளில் சேரும் பனியை அப்புறப்படுத்தத் தேவையான கருவிகளை அரச அலுவலகங்களிலும் தயார் நிலையில் வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன. (ற)

# புகலிடக் கோரிக்கையாளர்களை காப்பாற்றியது இத்தாலியக் கடற்படை

ரோம், ஜன.4
இத்தாலியின் தீவுப்பகுதியான சிசிலிக்குத் தென்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இத்தாலிக் கடற்படையினர் சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர்கள் 233 பேரை மீட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
வழமையான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த இத்தாலிக் கடற்படையினர் 10மீற்றர் நீளம் கொண்ட படகு ஒன்றில் 233 பேர் மத்தியத் தரைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். அதையடுத்து அவர்கள் அனைவரையும் காப்பாற்றிய கடற்படையினர் சிசிலியின் கிழக்குக் கடற்கரை அருகே உள்ள சிராகியுஸ் என்ற துறைமுகத்தில் அவர்களைத் தங்க வைத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.
காப்பாற்றப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் எரிட்ரியா, நைஜீரியா, சோமாலியா, சாம்பியா, மாலி மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. (ற)

# தீவிரமடைகின்றது தாய். போராட்டம்

### *தலைநகரை முடக்கப் போவதாக எதிர்க்கட்சிகள் அறிவிப்பு*

பாங்ஹொக், ஜன.4
தாய்லாந்தில் அரசுக்கு எதிரான தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தும் விதமாக தலைநகர் பாங்ஹொக் முழுவதையும் கைப்பற்றி, பணிகளை முடங்கச் செய்யப் போவதாக எதிர்க்கட்சியினர் அறிவித்துள்ளனர்.
எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் மின் மற்றும் தண்ணீர் இணைப்புகள் துண்டிக்கப்படும் எனவும் போக்குவரத்து முற்றிலுமாக முடக்கப்படும் எனவும் எதிர்கட்சி தலைவர் அறிவித்துள்ளார்.
பிரதமர் தலைமையிலான அரசு பதவி விலகி, தேர்தலுக்கான திகதியை ஒத்தி வைக்கும் வரை போராட்டத்தைத் தொடரப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



அதேவேளை அரசுக்கு ஆதரவான ரெட் ஷர்ட் இயக்கம், பிரதமருக்கு ஆதரவாகப் பேரணிகளை நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. அதையடுத்து அங்கு வன்முறைகள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

## ஆர்ஜென்ரீனாவில் கடும் வெப்பம்: 7 பேர் சாவு

லண்டன், ஜன.4
வடக்கு ஆர்ஜென்ரீனாவில் அதிக வெப்ப காலநிலை காரணமாக ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். வடக்கு ஆர்ஜென்ரீனாவில் 45 செல்சியஸ் வெப்பநிலை நிலவுகின்றது. 1906ஆம் ஆண்டுக்கு பின்னர் மிக அதிகளவில் பதிவாகியுள்ள வெப்பநிலை இதுவாகும்.
வெப்ப காலநிலையில் இருந்து தப்புவதற்காக பொதுமக்கள் நீர்தேக்கங்கள் மற்றும் பூங்காக்களை நோக்கிப் படையெடுக்கின்றனர். அதுதவிர வடக்கு ஆர்ஜென்ரீனாவில் மின்சாரத் தடையும் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அதையடுத்து மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ற)

## யூரோ வலயத்தில். இணைந்தது லத்வியா

லண்டன், ஜன.4
யூரோ வலயத்தில் புதிதாக இணைந்துகொண்டுள்ள லத்வியாவுக்கு யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன் மூலம் பொதுவான நாணய அலகு ஒன்றை லத்வியா பயன்படுத்துவதால், அதன் பொருளாதாரத்தில் முக்கிய பல மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

# *கியூபாப் புரட்சியின் 55ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு*

ஹவானா, ஜன.4
கியூபாவில் கம்யூனிச ஆட்சி மலரக் காரணமான கியூபா புரட்சியின் 55ஆவது ஆண்டு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.
புரட்சி தினத்தை அனுசரிக்கும் விதமாக தலைநகர் ஹவானாவில் உள்ள மோர்ரோ கோட்டையில் ராணுவ வீரர்கள் 21 துப்பாக்கிக்குண்டுகளை வான் நோக்கிச் சுட்டனர்.
புரட்சி தினத்தையொட்டி சான்டியாகோ டி கியூபா நகரில் உரையாற்றிய அதிபர் ரௌல் காஸ்ட்ரோ, முதலில் ஆர்ப்பாட்டம், கடத்தல் மற்றும் கொலைக் கும்பல்களின் கூடாரமாக கியூபா திகழ்ந்து வந்தது. புரட்சிக்குப் பின்னர் மனிதநேயம், சுதந்திரம் மற்றும் கண்ணியத்தின் அடையாளமாக கியூபா உருவெடுத்துள்ளது. இந்தப் புரட்சி தொடரும் என்று கியூப மக்களுக்கு உறுதியளிக்கின்றேன் என்று தெரிவித்தார்.



1959ஆம் ஆண்டு சான்டியாகோ டி கியூபா நகரில் புரட்சியாளர் ஃபிடல் காஸ்ட்ரோ, கியூபாவின் சுதந்திரத்தை பிரகடனம் செய்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்த சேவையிலுள்ள பாதித்தோரின் முறையீட்டில் கவனம் செலுத்தக் கோரிக்கை

## அரச பொது ஊழியர் சங்கம் அம்பாறை அரச அதிபருக்கு மனு

அம்பாறை.ஜன.4

அம்பாறை மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்தில் பாதிக்கப்பட்டுள்ள இணைந்த சேவை சார்ந்தவர்களின் மேன் முறையீடுகள் உரிய முறையில் கவனத்துக்கு கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் அம்பாறை மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் மேற்படி கோரிக்கை வலி யுறுத்தப்பட்டுள்ளது.

சங்கத்தின் சார்பில் தலைவர் எஸ். லோகநாதன், பொதுச் செயலாளர் எம். எம்.ஏ.வகாப் ஆகியோர் ஒப்பமிட்டு இந்த மனுவை மாவட்ட செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

> "பாதிக்கப்பட்டுள்ள வர்கள் மிக மனவேதனை யுடன் எமது தொழிற் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்."

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

மத்திய அரசின் இணைந்த சேவை யின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, தொழில் நுட்ப அலுவலர் சேவை, சாரதிகள் சேவை, அலுவலகப் பணியாளர் சேவை சார்ந்தவர்களுக்கு 2014 இற்கான வருடாந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்றப்பட்டியலை அவதானிக்கும் போது இட மாற்றச் சபை அமர்வில் கலந்து கொண்ட தொழிற்சங்கங்களின் முன்னிலையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கும் வெளியிடப்பட்டுள்ள அலுவலர்களுக்குரியஇடமாற்றஇடங்களுக்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எந்த வொரு அலுவலரும், ஊழியர்களும் பாதிக்கப்படா வண்ணம் அவர்கள் சேவை புரியும் இடத்துக்கு அருகிலுள்ள இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டுமென்றதொரு செயற்பாட்டில் தொழிற்சங்கங்கள் செயற்பட்டன.

ஆனால் மாவட்டத்தின் வட பக்க எல்லைப் பிரதேச அலுவலகத்திலுள்ள ஓர் அலுவலருக்கு இம் மாவட்டத்தின் தெற்கு மேற்குப் பக்க எல்லையிலுள்ள அலுவலகத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளவர்கள் இவ் விடயத்தை மிக மனவேதனையுடன் எமது தொழிற் சங்கத் தின் கவனத்துக்குக்கொண்டுவந்துள்ளனர்.

இதற்கென தாபன விதிக்கோவை 111/5 இற்கு அமைவாகவும் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் மேன் முறையீட்டுச் சபை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த மேன்முறையீட்டு சபையானது இடமாற்றத் திட்டத்துக்கு முரணான இடமாற்றம், சூழ்நிலைக்கு ஏற்ப நியாயப்படுத்தத் தக்க காரணங்கள், மாறுதல்கள் தொடர்பிலும் தனிப்பட்ட, கடுமையான பொருளாதாரக் கஷ்டங்கள் மற்றும் பிணியால் பாதிக்கப்பட்டவர்கள் விடயத்திலும்கருணைகொண்டுதாபன விதிமுறைமைகளுக்கு அமைவாக உதவவேண்டும் என்று கோருகின்றோம். - என்றுள்ளது. (வ-30)

# ஆனையிறவு ரயில் நிலையத்துக்குச் சிங்களப் பெயர்; மொழி உரிமையை மீறும் செயலாகும்.

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு.ஜன.4

ஆனையிறவு ரயில் நிலையத்தின் பெயரை மாற்றி சிங்களப் பெயர் வைப்பது மொழி உரி மையை மீறும் செயலாகும். இதனை கடுமையாக எதிர்க் கின்றேன் என்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒரு மைப்பாடு அமைச்சர் வாசு தேவ நாணயக்கார தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மொழி அமுலாக்கலை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்கின்றேன். ஆனால், எதுவுமே வெற்றிபெறவில்லை. இதனால் மனவேதனையுடனேயே உள்ளேன்.

வெள்ளவத்தை தமிழ் சங்கம் அமைந்துள்ள வீதியின் பெயரை தமிழ் சங்க வீதி யென பெயரிடுவதற்கான முயற்சிகள் தடுக்கப்பட்டன.

பின்னர் இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசினேன். ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுடன் பேசினேன். அவரும் இப்பெயர் பலகையை நிறுவுவது தொடர்பில் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கு அறிவித்தார். அவர் மாகாண செயலாளருக்கும் அறிவித் தார்.

ஆனால், இது தொடர்பில் கொழும்பு மாநகர சபை தமது தீர்மானத்தை தனக்கு அறிவிக்க வேண்டுமென தெரிவித்தார். பின்னர் அதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டேன்.

ஆனால், இன்றுவரை நான் எடுத்த எந்த முயற்சியும் நிறைவேறவில்லை. இது சிறிய தொரு விடயம். ஆனால், ஏன் இவ்வளவு இழுபட்டு செல்கின்றது என்பது புரியவில்லை.

மீண்டும் இவ்விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வேன்.

ஆனையிறவு ரயில் நிலையத்தின் பெயரை மாற்றி சிங்களப் பெயர் வைப்பதென்பது கடுமையான மொழி உரிமை மீறலாகும். இதனைக் கடுமையாக எதிர்க்கின்றேன். இதனை எதிர்த்து போக்குவரத்து அமைச்சருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளேன்.

ஆனால், இம்முயற்சி வெற்றி பெறுமா? இல்லையா? என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)


## வடமராட்சியில் பறக்கும் பட்டங்கள்

வடமராட்சி, டிசெ. 4

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம் விடும் சீசன் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. வானத்தில் விதவிதமான பட்டங்களை காணக்கூடியதாக இருக்கிறது.

சதுரம், பெட்டி, கொக்கு, வெளவால், மீன், பாம்பு, நட்சத்திரம் மனிதன் (ஆள்) உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் பட்டங்களைப் பறக்கவிடுவதில் சிறுவர் முதல் பெரியோர் வரை அதீத அக்கறை காட்டி வரு கின்றனர். (ஒ-173)

# பொதுச்சொத்துக்களைச் சேதமாக்கல் மட்டு.அரச அதிபர் கண்டனம்



மட்டக்களப்பு, ஜன.4

மட்டக்களப்பு நகரில் பொதுச் சொத்துகள் மீது இளைஞர் குழுக்கள் இரவு வேளைகளில் மேற்கொள்ளும் தாக்குதல்கள் தொடர்பில் மட்டக் களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

அண்மைக்காலமாக மட்டக் களப்பு நகரில் உள்ள பொது இடங்களில் இளைஞர்கள் கூட்டம் பொதுச் சொத்துக் களை சேதப்படுத்துவதுடன் அவற்றைக் களவாடிச் செல்லும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, ஊறணி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள லீனார்ஸ் பார்க் பகுதிக்குள் ஒன்று கூடிய சிலர், அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இருக்கைகளை உடைத் துள்ளதுடன் அழகுபடுத்த அமைக் கப்பட்டிருந்த மின்குமிழ்கள் சிலவற்றையும் களவாடிச் சென்ற சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பொதுமக்கள் பயன்பெறும் [illegible] அமைக்கப்பட்டுள்ள பகுதியில் அத்துமீறல் நடவடிக்கைகள் அதிகரித்து வருவது தொடர்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த வேலைப்பளுக்கள் மத்தியில் உள்ள மக்களின் நலன் கருதி தேசத்துக்கு மகுடம் திட்டத்தின் கீழ் நகரை அழகுபடுத்தும் வகையிலான வேலைகளின் கீழ் நகரில் இவ்வாறான பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இதுவரையில் இவை மக்களின் பாவனைக்கு விடப் படாத நிலையில் அவை சேதமாக்கப்பட்டுள்ள சம்பவமானது மாவட்டத்தின் எதிர்கால நிலையைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

குறிப்பாக மக்களின் ஆற்றல் மேம்படுத்துகைக்காக அமைக் கப் பட்டுள்ள பூங்காப் பகுதியில் இரவு வேளை களில் இளைஞர் குழுக்கள் மேற் கொள்ளும் இவ்வாறான அத்து மீறிய செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக் கள் கடும் அசௌகரியங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற் கொள்ளுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

இதேவேளை இவ்வாறான இளைஞர்களின் செயற் பாடுகள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் செயற் படவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப் பிடத்தக்கது. (வ)

வீடு வாடகைக்கு
517/7, ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் சகல வசதிகளுடன் (5 அறைகள் உட்பட) வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:077 959 0692 (41957) (4.6.3)

வாடகை
Attached bathroom உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு.
(ஒரு நாள் 500/=)
Hotel Villa City,
422 Galle Rd, Colo 6
இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்
0722 552 222

காணி விற்பனை
கரவெட்டி மத்தி சரஸ்வதி வித்தியாலய வீதியில் அமைந்திருக்கும் 18 பரப்பு காணி (100 பனை மரங்கள் உண்டு) இந்தக் காணிக்கு 2 பக்கமும் பாதைகள் உண்டு
தொடர்பு :
0773 515 294

தையல் வகுப்பு
மகளிருக்கான மாலை நேர தையல் பயிற்சி வகுப்புக்கள்
குழந்தைகள் சட்டை, சாறி பிளவுஸ், சுரிதார், பாவாடை சட்டை உட்பட சகல விதமான ஆடைகளும் வெட்டித்தைப்பதற்குப் பயிற்றுவிக்கப்படும்.
517, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(41933)(4.6.3)
(ஓட்டுமடத்துக்கு இடையில்)
தொடர்பு:077 815 6288

CEYLON THEATRES
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
MAJESTIC CINEPLEX AT
Cargills SQUARE யாழ்ப்பாணம்
(Opposite Jaffna Teaching Hospital)
Silver 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
குடும்பத்தோடு பார்க்கவேண்டிய யதார்த்த த்ரில்லர்
CEL வெளியீடு
JSK FILM CORPORATION
J. SATISH KUMAR Presents
விக்ரம் சுகுமாரன் (U)
FLEX Graphic
www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

CEYLON THEATRES
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
முதல் முறையாக யாழ்நகர்
MAJESTIC CINEPLEX
திரையரங்கில்
3Dயில்
பார்த்து அனுபவியுங்கள்




THOR
THE DARK WORLD
MAJESTIC CINEPLEX - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)
Platinum 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசதிகள் இல்லாத நிலையில் மன்னார் கிராம மக்கள்

மன்னார், ஜன.4

மன்னார் மாவட்டத்தின் வெள்ளாங்குளம், கணேசபுரம் மற்றும் சேவா கிராமங்களில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகள் எவையும் இல்லாத நிலையில் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணேசபுரம் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்களும், சேவா கிராமத்தில் 38 குடும்பங்களும் போரின் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ளன.

இந்த நிலையில் இந்தக் கிராமங்களின் வீதிகள் எவையும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. மேலும் போதிய போக்குவரத்து வசதிகளும் இல்லாத நிலையே இங்கு காணப்படுகின்றது.

“–”

**கணேசபுரம் கிராமத்தில் சுமார் 300 குடும்பங்களும், சேவா கிராமத்தில் 38 குடும்பங்களும் போரின் பின்னர் மீளக்குடியமர்ந்துள்ளன.**

இங்கு வசிக்கும் பாடசாலை மாணவர்கள் சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவிலுள்ள வெள்ளாங்குளம் பாடசாலைக்கு கால்நடையாகச் சென்று திரும்ப வேண்டிய நிலையில் உள்ளனர்.

அத்துடன் ஒவ்வொரு குடும்பமும் குடிதண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

இதனைவிட இந்தப் பகுதியில் தொழில் வாய்ப்புக்களும் இல்லாததால் வருமானத்தைப் பெற முடியாத நிலையில் பொருளாதார நெருக்கடியையும் இந்த மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

தமது அவல நிலை தொடர்பாக எவரும் கவனம் செலுத்தவில்லையெனவும், இந்தக் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-55)

# கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு பாரபட்சம் காட்டவில்லை

## *தெரிவிக்கிறார் வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர்*

வவுனியா, ஜன.4

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடமையாற்றிய பல ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் இட மாற்றம் செய்யப்பட்டனர். இத்தகைய ஆசிரியர்கள் தமக்கு வழங்கப்பட்ட காலம் முடிவடைந்து மீள வரும் போது அவர்கள் முன்பு கடமை யாற்றிய பாடசாலைகளில் அல்லது வசதி யான வேறு பாடசாலைகளில் மீளவும் இணைக்கப் படுவார்கள் என்ற ஒப்பந்தத்தின் அடிப் படையிலேயே இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இவர்கள் மடு, வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் தமது சேவைகளைப் பூர்த்தி செய்திருந்தனர்.

இவர்களை வவுனியா தெற்கு வலயத்திலுள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கே மீண்டும் இணைக்கும் நடவடிக்கைகளில் வவுனியா தெற்கு கல்வி வலயம் ஈடுபட்டுள்ளதாக இந்த ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

“–”

**மூன்று வருடங்களாக கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றிய தமக்கு மீண்டும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளை வழங்குவது எந்த வகையில் நியாயமானது எனவும் அந்த ஆசிரியர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.**

கல்வி வலயத்தின் இந்த நடவடிக்கையினால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மடு வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு உரிய காலத்தைப் பூர்த்தி செய்து மீளத் திரும்பிய ஆசிரியர்கள் அவர்கள் முன்பு கடமையாற்றிய பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளதுடன், நகரப் பகுதியிலுள்ள வசதியான பாடசாலைகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மூன்று வருடங்களாக கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றிய தமக்கு மீண்டும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளை வழங்குவது எந்த வகையில் நியாயமானது எனவும் அந்த ஆசிரியர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். எனவே தம்மைத் தாம் முன்பு கடமை யாற்றிய பாடசாலைகளில் இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; பாடசாலைகளில் காணப்படும் ஆளணி, இடமாற்றம் பெற்று வரும் ஆசிரியர்களின் குடும்ப நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பாரபட்சமற்ற வகையில் பாடசாலைகளில் அவர்கள் நியமிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

ஒப்பந்த அடிப்படையில் கஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் சேவையைப் பூர்த்தி செய்து திரும்பும் ஆசிரியர்களுக்கு பாடசாலைகளை வழங்குவதில் வவுனியா தெற்கு வலயம் பாரபட்சம் காட்டுவதாக ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளமை தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (க-400)

# கடல் மீன்கள் கிடைக்காத வவுனியா கிராம மக்கள்

வவுனியா, ஜன.4

வவுனியாவிலுள்ள கிராமப் புறங்களில் நடமாடும் மீன் வியாபாரிகளிடமிருந்து கடல் மீன்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் மன்னாரில் இருந்து வவுனியா நகருக்கு பெரு மளவான கடல் மீன்கள் எடுத்துவரப்பட்டு மீன் வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

“–”

**வவுனியா நகருக்கு பெருமளவான கடல் மீன்கள் எடுத்துவரப்பட்டு மீன் வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வந்தன.**

இதேவேளை குளத்து மீன்களையும் நடமாடும் வியாபாரிகள் விற்பனை செய்து வந்தனர். கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் வவுனியா மாவட்டக் குளங்களில் இருந்து மீன்களைப் பெற முடியவில்லை. இதனால் குறைந்த விலையில் குளத்து மீன்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு கிராம மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் மன்னாரில் இருந்து கொண்டுவரப்படும் மீன்களையே அவர்கள் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் தரமான மீன்களை அதிகளவில் வியாபாரிகள் தற்போது கொண்டு வருவதில்லை. குறைந்த அளவு மீன்களையே அவர்கள் எடுத்து வருகின்றனர்.

இதனால் அவற்றின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது. சில தினங்கள் மீன்களையே பெற முடியாத நிலைக் குத் தாம் தள்ளப்பட்டுள்ளதாக வும் இந்த மக்கள் தெரிவிக் கின்றனர்.

(க-402)



வவுனியா சூடுவெந்தான் பகுதியில் வசிக்கும் குடும்பமொன்றின் குடிசை காற்றினால் சேதமடைந்துள்ளது. இதனையறிந்து அங்கு தமது குழுவினருடன் விரைந்த வவுனியா இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.சூரியராஜ் கூரை விரிப்புக்களை வழங்கினார். (க-402)

# கடையை நொறுக்கின யானைகள்

வவுனியா, ஜன.4

வவுனியா இளம் மருதங்குளம் பகுதியில் அமைந்துள்ள கடையொன்று காட்டுப் பகுதியிலிருந்து வந்த யானைகளால் அடித்து நொறுக்கப்பட்டது.

இதனால் அச்சமடைந்த கடை உரிமையாளர் அந்த இடத்தை விட்டு வெளியேறி அயல் ஊரில் தஞ்சம் புகுந்துள்ளார்.

வவுனியா இளம் மருதங்குளப் பகுதிக் காடுகளில் இருந்து பெருமளவு யானைகள் தினமும் ஊர் மனைக்குள் வருவதால் அந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். வெடிச் சத்தத்துக்கும் அஞ்சாத இந்த யானைக் கூட்டம் ஊர்மனைக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்து வருகின்றன. அண்மையில் கடையொன்றை இந்த யானைகள் அடித்து நொறுக்கின.

இந்த யானைகள் வவுனியா வடக்குக் காடுகளில் நடமாடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இந்த யானைகள் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கு விடப்பட்டதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சேமமடு, மருதங்குளம், இள மருதங்குளம், நெடுங்கேணி, ஓமந்தை ஆகிய பகுதிகளில் இந்த யானைகளைக் காண முடிகின்றது.

இந்த யானைகளால் இங்கு செய்கை பண்ணப்பட்ட பயிர்களுக்குப் பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருகின்றது. இதனால் விவசாயிகள் நட்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

(க-402)

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் முத்துலிங்கம்



மட்டுவில் தெற்கு, வேரக் கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமான திருமதி பூரணம் முத்துலிங்கம் 02.01.2014 வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் முத்துலிங்கத்தின் ஆருயிர் மனைவியும், காலஞ்சென்ற சின்னையா -சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், சதாசிவம்-பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அன்னம் செல்லப்பா, பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நிர்மலராணி (Sweeta), புஸ்பராணி (கனடா), பிரபானந்தன் (கனடா), சுவர்ணராணி(கனடா), நித்தியானந்தன்(கனடா), காலஞ்சென்ற தயானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புலேந்திரன் (VMK), சற்குருநாதன்(கனடா), சாந்தா(கனடா), சிறிகுமரன் (கனடா), சாந்தினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாதங்கி, பிரசாந்த், கோகுலராஜன், சோலேந்திரன், விஜிந்தன், தர்ஷா, நீதன், நிஷனா, நிலக்ஷன், பிரவீனன், பிரணவி, ஹர்ஷன், வர்ஷினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் நாளை (05.01.2014)ஞாயிற்றுக்கிழமை 1591 Eliginmills Road East, Richmond Hillஇல் அமைந்துள்ள Eliginmills Cemeteryயில் மாலை 5 மணி தொடக்கம் 9 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் திங்கட்கிழமை (06.01.2014) காலை 9 மணி முதல் 11 மணி வரை அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 11.30 மணியளவில் தகனம் செய்யப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

சுவர்ணா (மகள்-கனடா) 905-477 6555,416-566 6885
புஷ்பா (மகள்-கனடா) 416 383 0620
பிரபா (மகன்-கனடா) 416 400 6658
Sweeta (மகள்-சாவகச்சேரி) 011-942 122 70215
நித்தி (மகன்-கனடா) 416 701 0761

(41900)(3.6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருள்களைக் கொண்டு கூட்டுப்பசளை தயாரிக்கப்பட்டு வருவதாக மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

# நெற் பயிரைத் தாக்கும் மஞ்சள் கோரையினம்

மட்டக்களப்பு.ஜன.4

மட்டக்களப்பில் பெரும்போக விவசாயச் செய்கை அரம்பித்தது முதல் மழை மிகவும் குறைவாகக் காணப்படுவதனால், விவசாயச் செய்கை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மஞ்சள்க் கோரைப் புல்லின் தாக்கம் அதிகரித்துள்ளது.

மழை அற்ற நிலையில் பெரும்பாலான நெற் பயிர்கள் கருகிக் போயுள்ளதுடன், களைநா சினி வீசியபோதும் மழை இல்லாததால் புற்கள் களைநாசினிக்கு கட்டுப்படாமையால் நெற்பயிரை மூடிக்காணப்படுகின்றன.

மழை இல்லாததால் 50 வீதமான நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடன்பட்டு விவசாயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தாங்கள் இட்ட முதலை முழுமையாக இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (வ)

# மட்டு.நகர் வாவியில் அதிகளவு முதலைகள்



மட்டக்களப்பு.ஜன.4

மட்டக்களப்பு நகர் வாவியில் முதலைகள் காணப்படுகின்றன.

நேற்று முன்தினம் காலை 2 முதலைகள் வாவியில் காணப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் கரை வலை வீச்சில் ஈடுபட்ட மீனவர்கள் மற்றும் கையால் இறால் பிடிப்பில் ஈடுபட்ட மீனவர்கள் அச்சத்தில் வெளியேறினர்.

இந்த இரண்டு பெரிய முதலைகளில் ஒன்று வாவிக் கரையிலும் மற்றையது சற்றுத் தொலைவிலும் காணப்பட்டன.

வீதியால் சென்ற மக்கள் குறித்த முதலைகளை கூட்டமாக நின்று பார்வையிட்டனர்.

# கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கிய நிதி திறைசேரிக்கு திரும்பிச் சென்றதா?

## தெளிவுபடுத்துமாறு கோருகிறார் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர்

அம்பாறை. ஜன.4



கிழக்கு மாகாண சபைக்கென மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதியில் 410 மில்லியன் ரூபா மீளவும் திறைசேரிக்கு சென்றுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் உண்மை நிலையை கிழக்கு மாகாண முதலமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு, கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் கூறினார்.

ஏறாவூர் மீரா முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா, ஏறாவூர் அல். அரபா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சமுர்த்தி உத்தியோகத்தர் பி.றகீம் தலைமையில் விழா நடைபெற்றது.

மாகாண சபையின் பிரதித் தவிசாளர் சுபைர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கிழக்கு மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படாது 410 மில்லியன் ரூபா நிதி திறைசேரிக்கு மீளவும் சென்றுள்ளதாக சில இணையத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் 410 மில்லியன் ரூபா திறைசேரிக்குத் திரும்பிச் சென்றுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகங்களையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயத்தில் பொறுப்புள்ள மாகாண முதலமைச்சர் மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

மக்கள் மத்தியில் இதற்கான தெளிவுகள் வெளிப்படுத்தப் படவில்லையானால், மாகாண சபை பிரதிநிதிகள் மீது வீண் சந்தேகங்களும், மக்கள் கேள்விகளைத் தொடுக்கும் நிலையும் உருவாகும்.

அந்த வகையில் மத்திய அரசால் மாகாண சபைக்கென (மாகாண அமைச்சுகளுக்கு) ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக வந்தடைந்ததா? என்ற கேள்விக்கும்,

அதேபோல் குறித்து ஒதுக்கப் பட்ட நிதி மாகாண முதலமைச்சராலும் ஏனைய அமைச்சுகளாலும் அபிவிருத்திப் பணிகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தப்பட்டனவா? அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடித்தார்களா?

மத்திய அரசின் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் அந்தந்த அமைச்சினால் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டதா? அல்லது தாமதமேற்பட்டதா?

ஒதுக்கப்பட்ட நிதியில் முழுமையான அனைத்துத் தொகையும் கிடைக்கப் பெற்றதா?

எந்தெந்த அமைச்சில் நிதிகள் பயன்படுத்தப்படவில்லை? என்பன போன்ற கேள்விகளுக்கான விவரங்களை பொறுப்புள்ள முதலமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்.

இத்தகைய கேள்விகளை மக்கள் எம்மிடம் தொடுத்துக் கொண்டிருக்கின்றனர்-என்றார். (வ-30)

# காணாமற்போனோர் குறித்த முறைப்பாடு ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கையளிப்பு

திருமலை. ஜன.4



மூதூர் பிரதேசத்திலிருந்து காணாமற்போனவர்கள் சம்பந்தமாக 90 முறைப் பாடுகள் மூதூர் பீஸ் ஹோம் அமைப்புக்கு கிடைத்துள்ள நிலையில் அந்த முறைப் பாடுகள் ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி ஆணைக்குழுவிடம், மூதூர் பீஸ் ஹோம் அமைப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த முறைப் பாடுகளைக் கையளித்துள்ளது.

காணாமற்போனவர்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் அனுமதியோடு, மூதூர் பீஸ்ஹோம் அமைப்பு காணாமற் [illegible] தொடர்பான முறைப்பாடு களை சேகரிக்கும் பணியில் கடந்த இரு வாரங்களாக ஈடுபட்டிருந்தது.

“ ” மூதூரில் காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை சேகரிக்கும் பணி கடந்த இரு வாரங்கள் இடம்பெற்றன.

மூதூர் பிரதேசத்திலிருந்து காணாமற்போனவர்களின் உறவினர்கள் பலர் ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுகளை செய்வதற்கு ஆர்வம் காட்டாத நிலையிலேயே, பீஸ் ஹோம் அமைப்பு பொதுமக்களுக்கு அது குறித்து தெளிவூட்டி முறைப்பாடுகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டு வந்திருந்தது. (வ)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



## அமரர் கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்)

கடந்த 07.12.2013 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.01.2014) சனிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் எதிர்வரும் 06.01.2014 திங்கட்கிழமை இலக்கம் 99, திருநகர் வடக்கு, கிளிநொச்சி இல்லத்திலும் நடைபெறும். அன்றையதினம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

99, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

(29724)(3.6.4)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு தங்கம் கடத்த முயன்ற நபர் கைது

தங்கம் கடத்துவதற்கு முயன்ற ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் 22 மில்லியன் ரூபா பெறுமதியான தங் கத்தை இலங்கையில் இருந்து இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முயன்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

சென்னை நோக்கிப் பயணிக்க விருந்தொரு நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனத் தெரிவித்த சுங்கப் பிரிவினர் கைது செய்யப்பட்வரிடம் இருந்து 4.5 கிலோ கிராம் தங்க பிஸ் கட்கள் மூன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர் பம்பலபிட்டியைச் சேர்ந்தவர் என சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். (ஒ-சி)



பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர்கள் 2700 பேருக்கு நியமனம் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

## பொலிஸ் கொன்ஸ்டபிளை கடித்துக் குதறிய இளைஞர்

கொழும்பு.ஜன.4

கொழும்பு, காலி முகத்திடலில் வைத்துப் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரின் கை மற்றும் வயிற்றுப் பகுதியைக் கடித்து விட்டு அங்கிருந்து ஓட முற்பட்ட இளைஞர் ஒருவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காலி முகத்திடலில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் பாகங்களைத் திருடிக்கொண்டிருந்தபோது மேற்படி பொலிஸ் கொன்ஸ்டபிள், சந்தேகநபரை கையும் களவுமாகப் பிடித்துள்ளார்.

இருப்பினும், தப்பிச் செல்ல முற்பட்ட சந்தேகநபர், கொன்ஸ்டபிளின் கையையும் வயிற்றுப் பகுதியையும் கடுமையாகக் கடித்துள்ளார். இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து நேற்று நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது இவரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-சி)

## காலி பொலிஸ் உத்தியோகத்தர் மூவர் சேவை இடைநிறுத்தம்

காலி பிராந்தியத்திற்குட்பட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடமைகளைப் புறக்கணித்த காரணத்தால் அவர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித் தார்.

ரத்கம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர், பொத்தல, பொலிஸ் நிலைய சார்ஜன்ட் மற்றும் உடுகம பொலிஸ் நிலைய கொன்ஸ்டபிள் ஆகியோரே இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.



புறக்கோட்டை பகுதியில் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபோது, நடைபாதைக்கு இடையூறுஏற்படுத்தும்வகையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த சிலரை அகற்றுவதற்கு நடவடிக்கைஎடுக்காமையேபொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவை இடை நிறுத்தத்திற்கு காரணமாக அமைந்துள்ளது என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

# கட்சித் தாவல் ஆரம்பமானதால் அதிரடி முடிவில் தலைமைகள்

### மேல், தென் மாகாணங்களில் பெரும் பரபரப்பு

கொழும்பு.ஜன.4

மேல் மற்றும் தென்மாகாண சபை கள் ஜனவரி 12 இல் கலைக்கப்பட்டு அவற்றுக்கு மார்ச் இறுதிவாரத்தில் தேர் தல் நடைபெறவுள்ள நிலையில், தற் போதே கட்சி தாவும் படலம் ஆரம்பித் துள்ளதால் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், அரசும் பிரதான எதிர்க் கட்சியும் தமது கட்சி உறுப்பினர்களை சாந்தப்படுத்தும் முயற்சியில் அதிரடியாக ஈடுபட்டு வருகின்றன.

இதன்பொருட்டு அதிருப்தியில் இருக்கும் தரப்பினருக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அவர்களுக்குச் சாதகமான வகையில் பரிசீலிக்கவும், தொகுதி மட்டத்தில் முக்கிய பதவிகளை வழங்குவது தொடர் பிலும் கட்சிகள் பரிசீலித்து வருகின்றன என அறிய முடிகின்றது.

> “-”
> அரசும் பிரதான எதிர்க்கட்சியும் தமது கட்சி உறுப்பினர்களை சாந்தப்படுத்தும் முயற்சியில் அதிரடியாக ஈடுபட்டு வருகின்றன.

குறிப்பாக, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்துகொண்டே அக்கட்சியின் தலைமைப் பீடத்தை கடுமையாக விமர்சிக்கும் இரண்டு மாகாண சபை உறுப்பினர்களுக்கு, நடைபெறவுள்ள மேல் மற்றும் தென்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிப்பது சம்பந்தமாக ஐ.தே.க. சாதகமாக பரிசீலித்து வருகிறது.

அத்துடன், அரசு மீது அதிருப்தியில் இருக்கும் அமைச்சர்களின் நெருங்கிய உறவுகளுக்கு இம்முறை போட்டியிடுவதற்கு வாய்ப்பளிக்க அரசு தீர்மானித்துள்ளது. அதிருப்தியில் இருக்கும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் அரசு தற்போது நேசக்கரம் நீட்டியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப் படுகின்றது.

அதேவேளை, ஏனைய சில எதிர்க் கட்சிகளும் கட்சித் தாவல்களை கட்டுப்படுத்தும் காய்நகர்த்தலில் ஈடுபட்டுள்ளன. இதற்குப் புறம்பாக தேர்தல் கூட்டு அமைக்கும் முயற்சிகளும், பேரம் பேசும் படலமும் இவ்விரு மாகாண அரசியல் களங்களிலும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

# மன்னார் மனிதப் புதைகுழியை மூடி மறைக்க வேண்டாம்

### நீதியான விசாரணை தேவை என்கிறார் சண். குகவரதன்

கொழும்பு.ஜன.4

மன்னார் மனிதப் புதை குழி தொடர்பாக அரசு நேர்மையான - நீதியான சுயாதீனமான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் சர்வதேசத்தின் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டில் சிக்கியுள்ள அரசின் நிலைமை மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்படும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் உதவிப்பொதுச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், திட்டமிடல் அபிவிருத்தி மற்றும் பொதுவசதிகள் தொடர்பான நிலையியற் குழுக்களின் தலைவருமான சண். குகவரதன் தெரிவித்துள்ளார்.



புனித திருக்கேதீஸ்வர ஆலய நுழைவாயிலிலே மனிதப் புதைகுழியென்றால் போர் நடந்த ஏனைய பிரதேசங்களின் நிலைமை என்னவென்பதை சர்வதேசம் சிந்திக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


இறுதிக்கட்டப் போரின் போது காணாமல் போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் தொடர்பாக இலங்கை அரசு சுயாதீனமான விசாரணைகளை நடத்தவில்லையென சர்வதேச நாடுகள் குற்றம் சுமத்துவதோடு, ஐ.நா மனித உரிமைகள் பேரவை மாநாட்டிலும் அரசுக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்முறை எந்தவிதமான 'சாக்குப் போக்குக்' கதைகளைக் கூறி குழுக்களை அமைத்து காலத்தைக் கடத்தும் நாடகங்களை அரங்கேற்றி அரசு தப்பித்து விட முடியாது.

மனித உயிர்கள் இவ்வாறு காவுகொள்ளப்பட்டு புதைக்கப்பட்டன. இதன் பின்னணி என்ன? யார் இதனைச் செய்தார்கள்? என்பவற்றைக் கண்டறிய நீதியான விசாரணை தேவை.

அத்தோடு இந்தியா மற்றும் சர்வதேச சமூகமும் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஒ-சி)

31 ஆம் நாள் நினைவஞ்சலி
அமரர் கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை
தோற்றம்
1925.10.31
மறைவு
2013.12.05
ஏமது இதய தீபம் அமரர் கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும், மதிய போசனமும் இன்று (04.01.2014) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
குடும்பத்தினர்.
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பூமராங் போன்று திரும்ப வந்து தாக்கும் போக்கு மத்திய கிழக்கில்

ஈராக்கின் மேற்குப் பகுதியிலுள்ள இரு நகரங்கள் அல் - குவைதா ஆதரவுத் தீவிரவாத ஆயுதக் குழுக்களின் கட்டுப் பாட்டின் கீழ் வந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மேற்கு ஈராக்கிலுள்ள அன்வர் நகரிலும் மற்றும் பலுஜா, ரமதி ஆகிய பகுதிகளிலும் பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன.

தீவிரவாத ஆயுதக் குழுக்களுக்கும் ஷியா முஸ்லிம்களின் ஆதிக்கத்திலுள்ள ஈராக் அரசபடைகளுக்கும் இடையில் சண்டைகள் இடம்பெற்று வருகின்றன. ஆயுதக் குழுக்கள் வீதிகளில் முகாம்களை அமைத்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

தனக்குப் பணிந்து நடக்க மறுத்த சதாம் ஹுசேய்னை ஒழித்துக் கட்டுவதற்காக ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக பொய்க்குற்றச்சாட்டுச் சுமத்தி படையெடுப்பு மூலம் அவரைப் பதவி கவிழ்த்து தூக்கிலிட்டு பழி தீர்த்தன அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளான மேற்கு நாடுகளும்.

ஆனால் சதாம் ஹுசேய்னின் வீழ்ச்சிக்குப் பின்னர் தாம் பதவியில் இருத்திய ஷியா முஸ்லிம்களின் ஆட்சியைப் பாதுகாப்பதில் கடுமையான சவால்களை எதிர்நோக்குவது அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் மத்திய கிழக்குக் கொள்கைக்குக் கிடைத்த பெரும் தோல்வி எனலாம்.

ஈராக்கில் சதாம் ஹுசேய்னை ஒழித்துக்கட்டிய பின்னர் எகிப்தில் முபாரக்கையும், லிபியாவில் கடாபியையும், சிரியாவில் அஸாத்தையும் ஒழித்துக்கட்டுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. எகிப்தில் முபாரக் சிறையில் அடைக்கப்பட்டார். கடாபி கொல்லப்பட்டார். சிரியாவில் போர் தொடர்ந்து நடக்கிறது. சதாம் ஹுசேய்னின் பின்பும், முபாரக்கின் பின்பும், கடாபியின் பின்பும் அந்த நாடுகளில் அமெரிக்க விரோத, தீவிரவாத இஸ்லாமிய அடிப்படைவாதச் சக்திகளின் கை ஓங்கி வருகிறது. அதனால் சிரியாவில் அஸாத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதில் அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் தீவிரம் குறைந்து வருகிறது. ஆட்சியில் உள்ளவர்களைப் பதவி கவிழ்த்தால் தமக்குச் சார்பான அரசுகளை அமைக்கமுடியும் என்று மேற்கு நாடுகள் எதிர்பார்த்தன. ஈராக்கிலும் லிபியாவிலும் அதனடிப்படையிலேயே அரசுகள் அமைக்கப்பட்டன.

ஆனால் இந்த இரண்டு நாடுகளிலும் அல் - குவைதா இயக்கத்தின் கை ஓங்கி வருகிறது. ஈராக்கில் பதவியிலுள்ள அமெரிக்க ஆதரவு ஷியா முஸ்லிம் அரசு படிப்படியாகத் தனது பலத்தை இழந்துவருகிறது. ஷியா முஸ்லிம்களுக்கு எதிராக சுனி முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டி விடுவதில் அல் - குவைதா வெற்றிகண்டு வருகிறது.

கடந்த ஆண்டு ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் பல பள்ளிவாசல்கள் மீது குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அந்தத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். தற்பொழுது பதவியில் உள்ள ஷியா முஸ்லிம் அரசுப் பிரதமர் நூரி அல் - மாலிகியின் அரசைக் கவிழ்ப்பதில் அல் - குவைதா வெற்றிபெறுமானால் அமெரிக்காவுக்கு இதனைவிட மோசமான பின்னடைவு எதுவுமே இருக்கமுடியாது.

வட ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் தனது பலமான வலைப்பின்னலை வைத்துள்ளது அல் - குவைதா. இந்த அமைப்பு பின்லேடனின் மரணத்துக்குப் பின்பும் பலம்பெற்று வருவது அமெரிக்காவுக்குப் பெரும் சவாலாகும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.

பாகிஸ்தானின் எல்லைக் கிராமம் ஒன்றில் பின்லேடன் கொல்லப்பட்டபோது, அல் - குவைதாவின் கதை முடிந்துவிட்டது என்றே அமெரிக்கா கருதியது. ஆனால் பின்லேடனின் மறைவுக்குப் பின்னர் அல் - குவைதாவின் பலம் அதிகரித்து வருகிறது.

பல நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் அல் - குவைதா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இஸ்ரேலுக்கு எதிரான நாடுகளை அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பலவீனப்படுத்துவதே அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் நோக்கம்.

ஆனால் எதிர்காலத்தில் அல் - குவைதா போன்ற தீவிரவாத ஆயுதக் குழுக்களிடம் இந்த நாடுகளின் அதிகாரம் கைமாறுமானால் இஸ்ரேல் மிகவும் மோசமான அச்சுறுத்தல்களை எதிர்நோக்கலாம்.

மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் இன்று இடம்பெறும் அரசியல் மாற்றங்களை நோக்கும்போது, அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கொள்கை தோற்றுவிட்டது என்பதே யதார்த்தம். தனது எதிரிகளை ஒழித்துக்கட்டும் முயற்சியில் ஈடுபட்டு மிகவும் மோசமான எதிரிகள் உருவாக அமெரிக்காவின் நடவடிக்கைகள் வழிவகுத்துள்ளமையே அதற்குப் பிரதான காரணம். மன்னாதி மன்னனும் தர்மத்தையும் அரசியல் நியமனத்தையும் மதிக்காது, மீறிச் செயற்பட முனைந்தால், விளைவு "பூமராங்" போன்று திரும்ப வந்து தாக்கும்.

# வேறுபாடுகளால் அவலப்படும் தமிழர்கள்

ராஜராஜன்

இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழர்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்னல்களுக்கு எல்லாம் அவர்களிடம் காணப்படும் வேறுபாடுகளே முக்கிய காரணமென அடித்துக் கூறமுடியும்.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் தோன்றிய இந்த வேற்றுமைகள், இறுதிப் போரின்போது வரலாறு காணாத துன்பங்களை அனுபவித்த பின்னரும் மறைந்ததாகத் தெரியவில்லை. முதன் முதலில் ஜனநாயக ரீதியான கட்சி அரசியல் முறை இங்கு ஏற்படுத்தப்பட்ட போது தமிழர் தரப்பினரால் கட்சி அடிப்படையில் பிளவுபட்டு கச்சை கட்டிக்கொண்டு ஒருவரையொருவர் வசை பாடுவதிலேயே காலத்தைக் கடத்த முடிந்தது. இவ்வாறு சுமார் 30 ஆண்டுகள் கடந்தன.

### முரண்பாடுகள் வாய்ப்பாகின

தேர்தல்களின்போது போட்டிபோட்டுக் கொண்டு மேடைகள் அமைத்து வீராவேசமான வசனங்களை அள்ளி வீசுவதிலும், ஒருவருக்கொருவர் வசைமாரி பொழிவதிலும் அன்றைய அரசியல்வாதிகள் வல்லவர்களாகக் காணப்பட்டனர். நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதே இவர்களின் குறிக்கோளாகவும் விளங்கியது. ஏமாந்த மக்கள் கூட்டம் இருந்ததும் இவர்களுக்கு வசதியாக அமைந்து விட்டது.

ஒருவர் சமஷ்டி என்றால் மற்றவர் ஒற்றையாட்சி என்று முழங்குவார். வேறொருவர் உரிமை என்ற வார்த்தையைப் பயன்படுத்தினால் அவருக்கு எதிரானவர் சலுகைதான் பெரியது என உரத்துக் குரல் கொடுப்பார். இவர்களுக்கிடையே தோன்றிய முரண்பாடுகள் பெரும்பான்மையின அரசுத் தலைவர்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

### உணர்ச்சி பொங்கிய அரசியல்வாதிகளின் உரைகள்

மேலும் அப்போதைய அரசியல்வாதிகள் தமது நிலையில் ஏதாவது தொய்வு ஏற்படுமாயின், மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தக்கூடிய நெகிழ்ச்சியான வீர வசனங்களை அவிழ்த்து விடுவார்கள். கட்சி ரீதியில் பிளவுபட்டிருந்த மக்கள் இவற்றை வேத வாக்காகவே கொண்டனர்.

இதற்கு உதாரணமாக பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும். யாழ்ப்பாணம் முற்றவெளியில் பிரதான தமிழ்க் கட்சியொன்றின் மே தினக் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் இளைஞர்கள் பலர் கூடியிருந்தனர். அவர்களைக் கண்டதும் உணர்ச்சி வசப்பட்ட அந்தக் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் 'அடுத்த வருடம் எமது கட்சியின் மே தினம் தமிழர்களின் தனி நாட்டில்தான் இடம்பெறும்' என உரத்த குரலில் தெரிவித்தார். இதனைக் கேட்டதும் அங்கு கூடியிருந்த இளைஞர்கள் உணர்ச்சிப் பிழம்புகளாக மாறிவிட்டனர். பலத்த கரகோசங்கள் அவர்களிடமிருந்து வெளிப்பட்டன. அரசுக்கு எதிரான கண்டனக் குரல்களும் எழுந்தன. ஆனால் அந்தத் தலைவரின் உரையிலுள்ள விடயம் சாத்தியமாகுமா என எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. தமிழ் இளைஞர்கள் 30 வருடங்களாக ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு தமிழ்த் தலைவர்களின் இது போன்ற உரைகளே உந்து சக்தியாக அமைந்தன என்பதை எவருமே மறுக்க முடியாது.

### தமக்குள்ளே மோதிக்கொண்டன

இதே தினம் வேறொரு தமிழ்க் கட்சியின் தலைவர்கள் பெரும்பான்மையினத்தவரின் அரசுகளுடன் இணைந்திருப்பதன் மூலமாகவே தமிழர்கள் அற்ப சலுகைகளையாவது பெற முடியுமெனக் கருத்துத் தெரிவித்தனர். இதனால் பெரும் குழப்பத்துக்கு ஆளாகியவர்கள் தமிழ் மக்களேயொழிய தலைவர்கள் அல்ல.

அரசியல் ரீதியில் இப்படியென்றால் போராட்டத்தின்போதும் வேற்றுமைகள் தலைதூக்கி நின்றன. இங்கு தோன்றிய பல இயக்கங்கள் ஒரே கொள்கைக்காகவே போராடுகின்றோம் என்று கூறிக்கொண்டு தமக்குள்ளேயே முரண்பட்டு முட்டி மோதிக் கொண்டன.



அவ்வப்போது உயிரிழப்புக்களுக்கும் குறைவு இருக்கவில்லை.

பொது எதிரியுடன் மோதிக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த இயக்கங்கள் போராட்டத்தின் ஆரம்பத்திலேயே புரிந்துகொண்டு ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்பட்டிருந்தால் முள்ளிவாய்க்கால் அவலத்தைத் தவிர்த்திருக்க முடியும் அல்லது தள்ளிப் போட்டிருக்க முடியும்.

### புலிகளின் தோற்கடிப்புக்கு ரணிலே காரணம்

இறுதிப் போரின்போது விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டபோதிலும் அந்த இயக்கத்தினுள் தோன்றிய முரண்பாடுகளும், பிளவுகளுமே முக்கியமானவை என்பதை மறுக்க முடியாது. இறுதி நேரத்தில் வஞ்சகமான வகையில் புலிகள் இயக்கம் துண்டாடப்பட்டதுக்குத் தாமே பொறுப்பு என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மார்தட்டிக் கூறும் அளவுக்கு புலிகள் இயக்கத்தின் பிளவு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

போர் முடிந்த பின்னராவது தமிழர்கள் தமது கடந்த காலத் தவறுகளை உணர்ந்து திருந்தியிருக்க முடியும். ஆனால் முடியவில்லை. அரசியல் ரீதியிலும், சமூக ரீதியிலும், கொள்கை அடிப்படையிலும் அவர்கள் பிரிந்த நிலையிலேயே காணப்படுகின்றனர். மாகாண சபைத் தேர்தலின்போது இது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. ஐந்து கட்சிகள் இணைந்து அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டமைப்பாகத் தெரியவில்லை. ஒவ்வாதவர்களின் ஒரு கூட்டாகவே அது காட்சி தந்தது. வேட்பாளர் தெரிவு, அமைச்சர் தெரிவு என்பவற்றின்போது அவர்களின் சுயரூபம் வெளிப்பட்டது. பதவி மோகம் காரணமாகவே இவர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்று மக்கள் இழிவாக நினைக்கும் அளவுக்குச் சில கட்சிகள் நடந்து கொண்டன. எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் மக்கள் வாக்களித்துள்ளனர் என்ற நினைப்பு இந்த அரசியல்வாதிகளிடம் தோன்றிய தாகவும் தெரியவில்லை.

### யானை தன் தலையிலே மண்ணைக்கொட்டிய நிலை

அடுத்த முறை மக்களிடம் வாக்குக் கேட்பதற்கான புதிய புதிய காரணங்களைக் கண்டுபிடிப்பதிலேயே எஞ்சிய காலத்தை இவர்கள் கழிப்பார்கள் என்பது மட்டுமே மறுக்க முடியாத உண்மை.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வசமுள்ள பிரதேச சபைகள் சிலவற்றில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பிணக்குகள் காணப்படுகின்றன. சில சபைகளின் வரவு- செலவுத் திட்டம் ஆளும் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டுள்ளன. மக்களுக்குச் சேவை புரிவதை விடுத்து இவர்கள் இவ்வாறு அநாகரிகமாக நடந்து கொள்வதை இனியும் மக்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

யானை தன் கையாலேயே தன்மீது மண்ணை அள்ளிப் போடுவதைப் போன்று தமிழர் தரப்பினரும் தமக்குள் பிளவுபட்டு நின்று தமக்குத் தாமே சமாதி அமைத்துக் கொள்கின்றனர்.

இனியாவது இலங்கைத் தமிழர்கள் தவறுகளை உணர்ந்து, தமக்கிடையேயான பேதங்கள் யாவற்றையும் மறந்து செயற்படுவதிலிருந்து விலகியிருப்பார்களாயின் அவர்களது நிலைமை மென்மேலும் மோசமானதொரு கட்டத்தை எட்டிவிடும் என்பதில் சந்தேகமே இல்லை.

> கடந்த காலத் தவறுகளை உணர்ந்து திருந்தியிருக்க முடியும். ஆனால் முடியவில்லை. அரசியல் ரீதியிலும், சமூக ரீதியிலும், கொள்கை அடிப்படையிலும் அவர்கள் பிரிந்த நிலையிலேயே காணப்படுகின்றனர். மாகாண சபைத் தேர்தலின்போது இது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. ஐந்து கட்சிகள் இணைந்து அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டமைப்பாகத் தெரியவில்லை. ஒவ்வாதவர்களின் ஒரு கூட்டாகவே அது காட்சி தந்தது. வேட்பாளர் தெரிவு, அமைச்சர் தெரிவு என்பவற்றின்போது அவர்களின் சுயரூபம் வெளிப்பட்டது. பதவி மோகம் காரணமாகவே இவர்கள் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்று மக்கள் இழிவாக நினைக்கும் அளவுக்குச் சில கட்சிகள் நடந்து கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறை இல்லாத வாழ்க்கை அழகானது



**நமது எண்ணங்களில் வன்மம் இல்லாமல் இருந்தால்தான், நம்மால் அகிம்சையின் ஆதரவாளராகவும், வன்முறைக்கு எதிரானவராகவும் செயற்பட முடியும். அகத்தில் இருப்பது முகத்தில் தெரியும் என்பார்கள். இப்போது நாம் அதில் கில்லாடிகளாகி, அகத்தில் வன்மம் இருந்தாலும், முகத்தில் அன்பு நிறைந்தவர்கள்போல் சிரிப்பு முலாம் பூசத் தெரிந்து வைத்திருக்கிறோம். அது போல் பேசும் கலையிலும் வல்லவர்களாகிவிட்டோம்.**

அனுஜன்

அகிம்சையை எல்லோரும் போற்றுகிறோம். அதைப்பரப்பவும்தொடர்ந்து முயற்சிக்கிறோம். ஆனால் வன்முறைதான் நாம் விரும்பாமலே வளர்ந்து கொண்டிருக்கிறது. உலகில் ஆண்டு தோறும் 15 லட்சம் மக்கள் வன்முறையால் உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள்.

வன்முறை எங்கு ஆரம்பிக்கிறது? எங்கு முடிகிறது? என்ற கேள்வியைக் கேட்டால், இரண்டிற்கும் பதில் ஒன்றுதான்! வன்முறை தனிமனிதனான நமது மனதில்தான் ஆரம்பிக்கிறது. நமது மனதில்தான் முடிகிறது. ஆத்திரம், பழி உணர்ச்சி, காமம், கோபம், பேராசை, அகங்காரம் போன்ற வடிவங்களில் எமது மனதில் அடி ஆழத்தில் அந்த வன்முறை விதை விழுகிறது.

அது வளர்ந்து, வேரூன்றி, விஸ்வரூபம் எடுக்கும்போது போராகவும், போராட்டமாகவும், மோதலாகவும் வெளிப்படுகிறது. வன்முறை என்றாலே அது வெளியே இருந்து மற்றவர்களால் நமக்குத் தரப்படும் வலி நிறைந்த துன்பம் என்று பரவலாக நினைக்கிறோம்.

ஆனால், தனக்குத்தானே பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டோ, தனக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினை என்ன என்று தெரியாமலோ இன்று பலர் தற்கொலை செய்துகொள்கிறார்கள். தனக்குத்தானே இப்படிப்பட்ட கோர முடிவினைத் தேடிக்கொள்வதும் பெரும் வன்முறைதான். இதில் நாம் இன்னும் விழிப்புணர்வு பெறாமல் இருக்கிறோம்.

அதனால்தான் தற்கொலைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. வன்முறையாளர்களால் மற்றவர்கள்தான் பாதிக்கப்படுவதாக நாம் நினைக்கிறோம். உண்மையில் யார் வன்முறையில் ஈடுபடுகிறாரோ அவர், முதலில் தனக்குத்தானே துக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு பாதிக்கப்படுகிறார்.

வேதனையில், துக்கத்தில், வலியில் இருக்கும் அவர் வன்முறை மூலம் மற்றவர்களுக்கும் அந்த வலியை, துக்கத்தை கொடுக்க முன்வருகிறார். நாம் கோபமாக இருக்கும்போது மற்றவர்கள் மீதும் கோபத்தைக் காட்டி எரிந்துவிழுவோம். முதலில் அந்தக் கோபம் நம்மைப் பாதிப்பதால் தான் எதிரியிடம் அதைக் கொடுக்க நினைக்கிறோம்.

கோபம் ஒரு முட்செடி. அது நமக்குள் இருக்கும் வரை நம்மைக் குத்திக்கீறி வலியைத் தந்துகொண்டேதான் இருக்கும். கோபம் அளவுக்கு மீறி நம்மிடம் இருந்துகொண்டே இருந்தால், அது எம்மை அறியாமலே எம்மை வன்முறைக்குள் தள்ளிவிடும்.

**எண்ணங்களில் வன்மம்**

வன்முறை என்பது அடுத்தவரை அடிப்பது மட்டுமல்ல, அடுத்தவரைப் பற்றிய வன்ம உணர்வு எமது மனதுக்குள் வந்துவிட்டாலே, அது வன்முறைதான். எமது எண்ணங்களில் வன்மம் இல்லாமல் இருந்தால்தான், எம்மால் அகிம்சையின் ஆதரவாளராகவும், வன்முறைக்கு எதிரானவராகவும் செயல்பட முடியும்.

அகத்தில் இருப்பது முகத்தில் தெரியும் என்பார்கள். இப்போது நாம் அதில் கில்லாடிகளாகி, அகத்தில் வன்மம் இருந்தாலும் முகத்தில் அன்பு நிறைந்தவர்கள்போல் சிரிப்பு முலாம் பூசத் தெரிந்து வைத்திருக்கிறோம். அது போல் பேசும் கலையிலும் வல்லவர்களாகிவிட்டோம்.

கசப்பும், கடுமையும் மனதில் இருந்தால், அவைதான் வன்மம் கலந்த எண்ணங்களாக உருமாறுகின்றன. ஒரு வீட்டுக்கு அத்திபாரம்போல், மனிதர்களின் சிந்தனை, செயல் அத்தனைக்கும் அத்திபாரம் எண்ணங்கள்தான். ஆனால் அந்த எண்ணங்களின் முக்கியத்துவத்தை நாம் உணராமல் இருக்கிறோம்.

வார்த்தைகளில் இனிமை பூசினாலும், செயல்களில் மென்மைகாட்டினாலும், எண்ணங்களில் வன்மம் இருந்தால், அந்த வன்மம் அதிகரித்துக்கொண்டேதான் செல்லும். கண்களுக்குத் தெரியாது. அடுத்தவர்களால் கண்டு உணரவும் முடியாது என்பதால், நமது எண்ணங்களைப் பற்றிப் பெரும்பாலும் நாம் கவலைப் படுவதில்லை.

**மற்றவர்களைக் குறை கூறும் தவறான எண்ணங்கள்**

மற்றவர்களைக் குறைசொல்வது நமக்கு மிகவும் பிடிக்கிறது. மற்றவர்களது நடத்தையை உற்றுப்பார்க்கிறோம். அவர்களது நடை, உடை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் எல்லாவற்றையும் உற்றுப்பார்த்து குறை கண்டுபிடிக்கிறோம்.

எப்போது இன்னொருவர் செய்வது தவறு என்று நினைக்கிறோமோ, அப்போதே அவரைப் பற்றிய தவறான எண்ணம் நமக்குள் உருவாகிவிடும். அடுத்து அவரிடம் போய், நீ அப்படிச் செய்யாதே..! இப்படிப் பேசாதே..! என்றுமிக உரிமையோடுசொல்வோம். அவரது நலனுக்காகத்தான் சொல்கிறோம் என்று கூறிக்கொண்டு வார்த்தைகளில் இனிமையை காட்டுவோம்.

ஆனால் உண்மை என்னவென்றால், அவரது நடத்தையும், செயலும் தவறு என்ற எண்ணத்தை எப்போது உருவாக்கினோமோ அப்போதே நமது விமர்சன வாள் அவரை நோக்கிப் பாய்ந்து அவரிடம் காயத்தை எண்ண ரீதியாக உருவாக்கிவிடுகிறது. அது தான் உண்மை.

இப்படி ஒருவரைப் பற்றி நாம் உருவாக்கும் தவறான எண்ணங்களின் தொகுப்புதான் வன்மமாக மாறுகிறது. அதுவே வன்முறையின் தொடக்கமாகி விடுகிறது. அந்த வன்முறை எண்ணங்களை அகற்ற நமக்குத் தேவை, அகிம்சை !

**நம்மை நாமே மன்னிக்கக் கற்றுக் கொள்வோம்**

அகிம்சைதான் அனைத்திலும் உயர்ந்த தர்மம் என்பது இதன் அர்த்தம். அகிம்சை என்பதன் உள் அர்த்தத்தை நாம் உணர்ந்துகொண்டால்தான், அதை நடைமுறைப்படுத்த முடியும். எந்த ஜீவராசிக்கும் துன்பம் கொடுக்காமல் இருப்பதுதான் அகிம்சை என்று பொதுவாகக் கருதப்பட்டு வருகிறது.

அப்படிக் கருணையுடன் நடந்து கொண்டால் அதன் மூலம் நமக்கு என்ன கிடைக்கும்? என்ற இன்னொரு கேள்வி எழுகிறது. அகிம்சையை நாம் கடைப்பிடித்தால் நமக்கு மகிழ்ச்சியும், அமைதியும் கிடைக்கும்.

நாம் அகிம்சையாளராக மாறவேண்டும் என்றால், முதல் கட்டமாக நமக்குள் இருக்கும் கவலைகளை அகற்ற வேண்டும். மீண்டும் நமக்கு நாமே துன்பங்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் இருக்க வேண்டும். அதற்காக சூழ்நிலை, செயல், வார்த்தை, மனிதர்கள் யாராலும் நமக்குத் துன்பம் நேராத வண்ணம் நமது எண்ணங்களை வலிமைப்படுத்த வேண்டும்.

நாம் எம்மைத் தாக்கும் ஆயுதங்கள் மற்றவர்களிடம் இருப்பதாகத்தான் நம்பிக்கொண்டிருக்கிறோம். உண்மையில் எம்மைத் தாக்குவதற்கு மற்றவர்கள் ஆயுதம் கொண்டுவர வேண்டிய தேவையில்லை. நம்மைக் கொல்ல நாமே ஆயுதங்களை உருவாக்குகிறோம்.

குற்றஉணர்வு, ஏமாற்றம், விரக்தி, ஆத்திரம், பழிவாங்கும் உணர்வு போன்றவைதான் நமக்குள்ளே இருந்து நம்மைக் கொல்லும் ஆயுதங்கள். அவை நமக்குள்ளே இருந்து நம்மைத் தொடர்ந்து சித்திரவதை செய்துகொண்டே இருக்கும்.

சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், வாழ்க்கையில் எது நடந்திருந்தாலும், தன்னையே மன்னிக்க முடியாதவர்களால், மற்றவர்களை மன்னிக்க முடியாது. அதனால் முதலில் நம்மை நாமே மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

# பிள்ளைகளைத் தட்டிக் கொடுத்து வளருங்கள்..!

சு.சாரு



உன் நண்பன் யாரென்று சொல். நீ யாரென்று சொல்கிறேன் என்று சொல்வார்கள். அதனால் உங்கள் குழந்தைகள் எப்படிப்பட்ட நண்பர்களுடன் பழகுகிறார்கள் என்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள். அவர்கள் போக்குத் தவறாக இருந்தால் அவர்களுக்குப் புரியும் வகையில் பக்குவமான முறையில் எடுத்துச் சொல்லுங்கள்.

முக்கியமாக,உங்கள் பிள்ளைகளை மற்றவர்கள் முன்னிலையில் குறை சொல்வதைத் தவிர்க்கவேண்டும். உங்களது குழந்தைகளை மேதைகளாக ஆக்க முடியாவிட்டாலும், குடிபோதை, போதை மருந்து, புகை, சிகரெட் போன்ற கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமை ஆகிவிடாதவாறு பெற்றோர் கவனமாகக் குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

பெரும்பாலான வீடுகளில் பிள்ளைகள் பெற்றோர்களிடம் வெளிப்படையாகப் பேசுவதே இல்லை. பெற்றோர்களும் அவர்களிடம் எதையும் கேட்பதே இல்லை. இதனால் தான் அவர்களுக்குள் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகின்றன. இந்த வயதில் உள்ளவர்களை பெற்றோர்கள் தங்கள் நண்பர்களாகப் பாவித்து வளர்க்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்குள் ஒரு சமூக அக்கறை வரும்.

மீன் கொடுப்பதை விட, மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கு அதுபோல் எந்த ஒரு விடயத்தையும் அடிப்படையில் இருந்து தெளிவாகக் கற்றுக்கொடுங்கள். அவர்களுக்கு எந்த துறையில் அதிக ஆர்வம் உள்ளதோ, அந்தத் துறையில் அவர்கள் திறன் வளர ஊக்கப்படுத்துங்கள். படிப்பிலும் சரி, விளையாட்டுக்களிலும் சரி உங்கள் குழந்தைகளுக்கு அவ்வப்போது உற்சாகத்தை ஏற்படுத்தும் வகையில் அவர்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே இருங்கள்.

தாய் என்பவள் அன்பு காட்டுபவராக மட்டும் இல்லாமல், அறிவூட்டுபவராகவும் இருக்க வேண்டும். தொலைக்காட்சி பார்ப்பது, தோழிகளுடன் அரட்டை போன்ற பொழுது போக்குகளை கொஞ்சம் உங்கள் குழந்தைகளுக்காக தியாகம் பண்ணுங்கள். தாய்மையின் பெருமையை உணருங்கள்.

இயற்கை ஆணைவிட பெண்ணுக்கே அதிக பொறுப்பைக் கொடுத்திருக்கிறது. அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று அன்னைக்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சொர்க்கம் எங்கே இருக்கிறது என்று தேடுபவனிடம் உன்னைப் பெற்ற தாயின் காலடியில் என்று சொல்கிறது ஒரு பழமொழி. அதிக தவறுகளைத் தெரிந்தும், தெரியாமலும் செய்து விட்டு, அதற்கான பாவங்களைக் கழுவக் கோவில், குளம் என்று செல்வதில் பயன் ஒன்றுமில்லை. ஒவ்வொருவரும் அவரவர் மனசாட்சிப் படி நேர்மையாக நடந்து கொண்டால் போதும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்**: பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத் தொல்லை விலகும்.

**மிதுனம்**: தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்**: எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். அரசு காரியங்ளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்**: சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**கன்னி**: நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**துலாம்**: தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**விருச்சிகம்**: எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு**: சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரிய மானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்து கொள்வார்கள்.

**மகரம்**: முன்கோபத்தால் பகை உண்டாகும். வேலைச் சுமையால் பதற்றமடைவீர்கள். யாரும் உங்களைப் புரிந்துகொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விடயங்களில் தலையிட வேண்டாம்.

**கும்பம்**: தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளைப் போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**மீனம்**: சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள்.

# நால்வகை யோக நெறிகள்



## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

விடுதலை அடைவதே நமக்குள்ள முக்கியப் பிரச்சினை. நம்மை நாம் பிரம்மம் என உணரும் வரை நாம் முக்தி பெற முடியாது. இந்த மெஞ்ஞான நிலையை அடையப் பல நெறிகள் உள்ளன. இந்த நெறிகளுக்கு 'யோகம்' என்னும் பொதுப் பெயர் உண்டு. யோகம்– சேர்த்தல்; (நம்மை நமது உண்மை நிலையில் சேர்த்தல்.) இவை பலவாகப் பிரிக்கப் பட்டிருந்தாலும் சிறப்பாக நான்கு நெறிகளாக இவற்றை வகுக்கலாம். இவை ஒவ்வொன்றும் நம்மை இறைவனிடம் அழைத்துச் செல்லும் வழியே. எனினும் மனிதர்களின் இயல்புக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், ஒன்றை நாம் நினைவில் வைத்துக்கொள்வது அவசியம்; சாதாரண மனிதன், தனது முயற்சியால் உண்மை மனிதனாகிய பிரம்மமாகிறான் என்று கூறுவதே தவறு. ஏனெனில் பரப்பிரமத்திடம் ஆகுதல் என்பது இல்லை. அது எப்போதும் விடுபட்டதாக, நிறைநிலை பெற்றதாகவே இருக்கிறது; ஆனால், அதன் இயல்பை மறைத்துள்ளது போன்ற அஞ்ஞானம் நீக்கப்பட வேண்டும்.

யோக நெறிகள் எல்லாவற்றுக்கும் உள்ள முழு நோக்கமும் (ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு முறையைக் குறிக்கின்றன) இந்த அஞ்ஞானத்தை நீக்கி, ஆன்மா தனது சொந்த இயல்பை மீண்டும் பெறச் செய்வதே. இதற்குப் பயிற்சியும் வைராக்கியமுமே சிறந்த துணைகள். வைராக்கியம் என்பது வாழ்க்கையில் பற்றற்ற தன்மை. ஏனெனில் வாழ்க்கையில் – இன்ப நுகர்ச்சியில் விருப்பமே பந்தத் தொடர் அனைத்துக்கும் காரணம். பயிற்சி என்பது யோகங்களில் ஒன்றை இடைவிடாது பழகுவதே.

கர்மயோகம்: செயலின் மூலம் மனத்தைத் தூய்மையாக்குதலே கர்மயோகம். நல்லதாயினும் கெட்டதாயினும் செய்த வேலை அதற்கேற்ற பயனைத் தந்தே தீரும். செயல் என்ற காரணம் இருக்கும் வரை அதன் விளைவை எந்த ஆற்றலும் தடுக்க முடியாது. எனவே நற்செயல்களால் விளையும் நற்பயனிலும், தீய செயல்களால் விளையும் தீய பயனிலும் கட்டுண்டு, விடுதலையில் சற்றும் நம்பிக்கையில்லாமல் ஆன்மா எப்போதும் கட்டுப்பட்டே இருக்கும். ஆனால், செயல் என்பது உடலுக்கும் மனத்துக்குமே; ஒரு போதும் ஆன்மாவுக்கு இல்லை. ஆன்மாவை மறைக்கும் ஒரு திரையை மட்டுமே செயலால் உண்டாக்க முடியும். தீய செயலால் வரும் திரை அறியாமை ஆகும். நற்செயல் ஒழுக்கச் சக்திகளை வலிமைப் படுத்தி பற்றற்ற தன்மையை உண்டாக்குகிறது. அது தீய செயல்களை நோக்கிச் செல்லும் தன்மையை அழிக்கிறது; அதன் மூலம் மனத்தைத் தூய்மையாக்குகிறது. ஆனால், ஒரு செயலை இன்ப நுகர்ச்சிக்காகச் செய்தால் அது அந்த இன்பத்தை மட்டும் தருகிறது; சித்தத்தை அது தூய்மைப் படுத்துவதில்லை. எனவே செயலின் பயனை அனுபவிக்கும் ஆசையின்றிச் செயல் புரிய வேண்டும். இவ்வுலகிலோ மறு உலகிலோ இன்பம் நுகரும் எல்லா ஆசைகளையும் எல்லா அச்சங்களையும் கர்மயோகி விட்டு விட வேண்டும். மேலும், பயன் கருதாமல் செய்யப்படும் இந்தச் செயல்கள் எல்லாத் தளைகளுக்கும் வேரான தன்னலத்தை அழித்துவிடும்.

கர்மயோகியின் கொள்கை 'நானல்ல; நீயே,' என்பதே; தன்னல மறுப்பு எவ்வளவிருந்தாலும், அவனுக்கு அது பெரிதல்ல. ஆனால், இதைச் செய்யும் போதும் சுவர்க்கத்துக்குச் செல்லும் விருப்பமோ, பெயர் புகழ் நாட்டமோ, இந்த உலகில் வேறெந்த நன்மையைத் தேடும் எண்ணமோ அவனிடம் இருப்பதில்லை. இந்தத் தன்னலமற்ற செயலின் விளக்கமும் நியாயமும் ஞான யோகத்தில் தான் காணப்படும் எனினும், மனிதனிடம் உள்ள இயல்பான தெய்வத்தன்மையால் அவன் எந்தக் கொள்கையையும் கருத்தையும் உடையவனாயிருந்தாலும் பிறரது நன்மைக்காகவும் வேறொரு முடிவான நோக்கத்தைக் கொள்ளாமலும் முழுத் தியாகத்தை விரும்புவான். இன்னும் பலருக்குப் பணத்தால் உண்டாகும் பந்தம் மிகப் பெரியதாகும்; பொருள் ஆசையை ஒட்டித் தொற்றிக் கொண்டுள்ள அனைத்தையும் உடைத்தெறிவதற்குக் கர்மயோகம் அவர்களுக்கு முற்றிலும் இன்றியமையாததாகும்.

## நாளை

மார்கழி-21

ஞாயிற்றுக்கிழமை 05.01.2014

திதி: சதுர்த்தி மு.ப.08.40 வரை

நட்சத்திரம்:


சதயம் பி.இ.04.14 வரை

சுபநேரம்:

09.31- 11.01 வரை

இராகுகாலம்:05.01-06.31 வரை

# குப்பைக் குவியலில் பாம்பின் கூட்டம்



சுவிஸின் குப்பை அகற்றும் ஆலை ஒன்றில் ஐந்து உயிருள்ள பாம்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சுவிஸின் சூரிஜ் மாகாணத்தில் குப்பை அகற்றும் ஆலையின் பெண் தொழிலாளி ஒருவர் பிளாஸ்டிக் பை ஒன்றில் ஐந்து பாம்புகள் உயிருடன் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்.

அல்பேல்டெர்னில் உள்ள கழிவு அகற்றத் தளத்தில் யாரோ ஒருவரால் இந்த பாம்புகள் நிறைந்த பிளாஸ்டிக் பை போடப்பட்டுள்ளது.

இதுகுறித்து சூரிஜ் மண்டல பொலிஸ் அதிகாரி கூறுகையில் இதில் எல்லாப் பாம்புகளும் நல்லாரோக்கியத்துடன் உள்ளன என்றும் இதை வளர்த்தவர்கள் தான் இதனை வெளியே விட்டிருக்கக் கூடும் என்றார். மேலும் இவ்வகைப் பாம்புகளின் நீளம் 1.8 மீற்றராகும். இவை வட அமெரிக்காவில் கார்ன் பாம்புகள் என அழைக்கப்படும் விஷத் தன்மையற்ற பாம்புகள்.

இவைகள் பார்க்கக் கவர்ச்சியான தோல் அமைப்பைக் கொண்டுள்ளதுடன் வீடுகளிலும் வளர்க்கப்படுகின்றன.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | | 1 | 4 |
| | | 9 | 6 | | | | | 2 |
| | 5 | | 1 | | 4 | 3 | | |
| | 9 | | | 5 | | 4 | 7 | |
| 5 | | 1 | | 8 | | 2 | | 6 |
| | 2 | 4 | | 1 | | | 3 | |
| | | 6 | 8 | | 5 | | 2 | |
| 4 | | | | | 7 | 5 | | |
| 9 | 8 | | | | | | | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 1 | 4 | 7 | 2 | 6 | 3 | 8 |
| 8 | 3 | 2 | 9 | 6 | 1 | 7 | 4 | 5 |
| 4 | 7 | 6 | 3 | 8 | 5 | 2 | 1 | 9 |
| 6 | 5 | 7 | 2 | 4 | 3 | 9 | 8 | 1 |
| 2 | 4 | 8 | 1 | 9 | 7 | 3 | 5 | 6 |
| 9 | 1 | 3 | 8 | 5 | 6 | 4 | 7 | 2 |
| 3 | 6 | 5 | 7 | 2 | 8 | 1 | 9 | 4 |
| 7 | 8 | 4 | 6 | 1 | 9 | 5 | 2 | 3 |
| 1 | 2 | 9 | 5 | 3 | 4 | 8 | 6 | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] ஜப்பானியச் [illegible] 1986 இல் ஜப்பானிய நிறுவன நிக்கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திரும்பத் திரும்ப பயன்படுத்தும் அச்சுத்தாள்

எழுத்துக்களைத் திரும்பத் திரும்ப பயன் படுத்தக்கூடிய அச்சுத்தாளை உருவாக்கியிருப்பதாக தாய்வான் நாட்டு விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர் .ஐ2ஆர் ஈபேப்பர் என்ற இந்தத் தாளில் பக்ஸ் இயந்திரத்தில் பயன்படுத்தக்கூடியதைப் போன்ற தெர்மல் பிரிண்டர் கொண்டு அச்சிடப்படுகின்றது.
குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு, அச்சிடப்பட்ட விடயம் தேவைப்படாதபோது, அதற்குரிய இயந்திரத்தில் எழுத்துகளை அழித்து மீண்டும் பயன்படுத்தலாம். இவ்வாறு ஒரு தாளை மீண்டும் மீண்டும் 260 முறை பயன்படுத்தலாம் என்கிறார்கள்.
இந்தத் தாளை உருவாக்கியிருக்கும் தாய்வான் நாட்டுத் தொழிலகத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சியாளர்கள். சுவரொட்டிகள், அறிவிப்புகள் போன்றவற்றுக்குப் பயன்படுத்துவதற்கு இது மிகவும் ஏற்றது என்று கூறுகின்றனர்.
தற்போதைய அச்சிடும் முறையைப் போல இல்லாமல் இந்தத் தாளில் குறைவான செலவில் அச்சிடலாம் என்றும் உறுதி தெரிவிக்கின்றனர்.
இந்தத் தாள் மிகவும் மென்மையானது, எடை குறைவானது. திரும்பத் திரும்ப அச்சிடக்கூடியது. இது ஓர் உண்மையான ஈ- பேப்பர் என்று மேற்கண்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைத் தலைவர் ஜான் சென் கூறுகிறார்.
இந்தத் தனித்தன்மையான தாளில், கொலஸ்டேரிக் லிக்விட் கிரிஸ்டல் என்ற வேதிப்பொருள், ஒருவகை பிளாஸ்டிக் படலத்துடன் பூசப்பட்டுள்ளது. இது தான் இந்தத் தாளை திரும்பத் திருப்பப் பயன்படுத்த உதவியாக உள்ளது.
தற்போது காகித உற்பத்திக்கு என உலகெங்கும் ஆயிரக்கணக்கான மரங்களை வெட்ட வேண்டியுள்ளது. அந்த வகையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்தப் பேப்பர், பெரும் வரவேற்புப் பெறும் என்று இதன் கண்டுபிடிப்பாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

# ஒரே பிரசவம்

## வெவ்வேறு ஆண்டுகளில் பிறந்த இரட்டையர்கள்!

அமெரிக்காவில் 2 பெண்களுக்கு நடைபெற்ற வெவ்வேறு பிரசவங்களில் இரட்டைக் குழந்தைகளில் ஒன்று 2013-ஆம் ஆண்டிலும், மற்றொன்று 2014-ஆம் ஆண்டிலும் பிறந்துள்ளன.
கடந்து சென்ற டிசெம்பர் 31ஆம் திகதி நள்ளிரவு இந்த பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன.
அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் உள்ள மெட்ஸ்டார் வொஷிங்டன் வைத்தியசாலையில் 31ஆம் திகதி நள்ளிரவு 11.58 மணிக்கு லொர்ரெய்ன் யாலெனி பெகாசோ என்ற பெண்ணுக்கு நடைபெற்ற தலைப் பிரசவத்தில் அழகிய பெண் குழந்தை பிறந்தது.
அதை தொடர்ந்து, அடுத்த 3 நிமிடங்களில் 2014 ஜனவரி மாதம் முதலாம் திகதி நள்ளிரவு 12.01 மணிக்கு இரண்டாவதாக அழகிய ஆண் குழந்தை ஒன்றும் பிறந்தது.
இந்த இரட்டைக் குழந்தைகளின் பிறப்பில் உள்ள கால இடைவெளி வெறும் 3 நிமிடங்கள் மட்டும்தான் என்றபோதிலும், முன்னதாக பிறந்த பெண் குழந்தையின் பிறந்த தேதி 31-12-2013 என்றும், அடுத்ததாக பிறந்த ஆண் குழந்தையின் பிறந்த தேதி 1-1-2014 எனவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதேபோல், டொரொண்டோ நகரில் உள்ள கிரெடிட் வேல்லி வைத்தியசாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட லிண்ட்ஸே ஸல்குவெரியோ என்ற பெண்ணுக்கு 31-12-2013 பின்னிரவு 11.52 மணிக்கு அழகிய பெண் குழந்தை பிறந்தது. இதனையடுத்த 8 நிமிடங்களில் 1-1-2014 அதிகாலை 12 மணி 38 வினாடிக்கு மற்றொரு பெண் குழந்தையையும் அவர் பிரசவித்தார்.




# முதலையின் வாய்க்குள் சிக்கிய மகனை தந்தை போராடி மீட்டார்



சிம்பாப்வேயில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் தபாட்ஷ்வா கசேர். இவரது 11 வயது மகன் தபிவா. கிறிஸ்மஸ் பண்டிகை அன்று தந்தையும், மகனும் தங்கள் கிராமத்துக்குச் செல்ல ஆற்றைக் கடந்தனர். அப்போது ஒரு முதலை தபிவாவை வாயால் கவ்விப் பிடித்தது.
முதலை, தனது வாய்க்குள் சிக்கிய அவனை அப்படியே கடித்து தின்ன முயன்றது. இக்கொடூர சம்பவத்தை நேரில் பார்த்த அவனது தந்தை தபாட்ஷவாவிடம் ஆயுதம் எதுவும் இல்லை.
இருந்தாலும் ஆக்ரோஷத்துடன் முதலை மீது பாய்ந்தார். அதன் முதுகில் அமர்ந்து அதன் தாடையை அகற்ற முயன்றார். ஆனால் முடியவில்லை. தலையில் தனது கையால் ஓங்கிக் குத்தினார்.
இறுதியில் அதன் கண்ணில் ஓங்கி குத்திக் கிழித்தார். இதனால் நிலை தடுமாறிய முதலை தனது வாயைத் திறந்தது. அதைத் தொடர்ந்து முதலை வாய்க்குள் சிக்கிய சிறுவன் தபிவா மீட்கப் பட்டான்.
ஆனால் முதலை கடித்ததில் அவனது ஒரு கால் துண்டானது. தபாட்ஷ்வாவின் கையிலும் ரத்தக் காயம் ஏற்பட்டது. இவர்கள் இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பிரிட்டனின் சிறந்த அழகியாக கேத் மிடில்டன் தேர்வு!




பிரிட்டனில் உள்ள ஓர் இணையத்தளம் 2013ஆம் ஆண்டின் சிறந்த அழகிய பெண்மணி என்ற வாக்கெடுப்பை தனது இணையத்தளத்தில் சென்ற வாரம் நடத்தியது. இதில் அரச குடும்பத்துப் பெண்கள், நடிகைகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்த வாக்கெடுப்பில் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் சமீபத்தில் குழந்தை பெற்ற இங்கிலாந்து இளவரசி கேத் மிடில்டன் முதலிடம் பெற்றுள்ளார்.
இந்த வரிசையில் பிரிட்டன் மாடல் அழகி Cara Delevingne என்பவர் 10வது இடத்திலும், நடிகை ஏஞ்சலினா ஜோலி 6 ஆவது இடத்திலும் உள்ளனர். இந்த வருடத்தின் மிக முக்கிய நிகழ்வாக இங்கிலாந்து நாட்டு அரச குடும்பத்தில் குழந்தை பிறந்த சம்பவம் இடம்பெற்றதாகவும், குழந்தை பெற்றதால் கேத் மிடில்டன் உலக அளவில் பேசப்பட்டதாகவும் அந்த கருத்துக்கணிப்பில் கூறப்பட்டுள்ளது.



# அறுவைச்சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட இரட்டைக் குழந்தைகள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினர்

ஒட்டிப் பிறந்து சிக்கலான அறுவைச்சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட இரட்டைக் குழந்தைகள் சாதாரண குழந்தைகள் போன்று இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி அவர்களது பெற்றோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளனர்.
அமெரிக்க நியூயோர்க் நகரைச் சேர்ந்த கிரேக் மற்றும் ஷெல்லி தம்பதிக்கு பிறந்த இரட்டையர்களான அமெயிலாவும் அலிஸன் டக்கருமே இவ்வாறு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர்.
இந்த குழந்தைகள் பிறக்கும் போது வயிறு மற்றும் மார்பு பகுதியில் இணைந்த நிலையில் பிரசவமாகின. தொடர்ந்து 8 மாத சிக்கலான செயற்பாடுகளையடுத்து மேற்படி இரு குழந்தைகளும் சிக்கலான அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப் பட்டனர்.
பிலடெல்பியா சிறுவர் மருத்துவமனையைச் சேர்ந்த 40 மருத்துவர்களைக் கொண்ட குழு இந்த அறுவைச் சிகிச்சையில் பங்கேற்றது. தற்போது உடல் நலம் தேறியுள்ள அக்குழந்தைகள் வழமையான குழந்தைகள் போன்று சுறுசுறுப்பாகக் காணப் படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொதுக் கூட்டம்

வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்க 2014 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டு ஜனவரி முதல் புதிய கட்டணங்களை சங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

◆◆◆

அளவெட்டி அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில், அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கல்லூரியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட உள்ளதுடன், நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெறவுள்ளது. (ந-86)

### கூட்டம் பிற்போடப்பட்டது

வலி.வடக்கு மீளக்குடியேற்றம் புனர்வாழ்வுச் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்தது.

இந்தக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி. வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன் விழாக் கொண்டாட்டம் சனிக்கிழமை கல்லூரியின் பதியுதீன் மஹ்மூத் மண்டபத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக முன்னாள் கல்லூரி அதிபர் எம்.ஏ.ஆர்.ஏ.றஹீம், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் ஐ.அஸ்மின், பழைய மாணவனும், பொலிஸ் பரிசோதகருமான ஏ.எப்.புவாத் மற்றும் சட்டத்தரணியும் யாழ். மாநகர சபையின் உறுப்பினருமான எம்.றமிஸ் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஓ)

## சிறுவர், மகளிர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வடமாகாண சிறுவர் அபிவிருத்தி மகளிர் அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறும்.

அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பளை, பூநகரி, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலர், மகளிர் அபிவிருத்தி அலுவலர், சிறு வர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர், உளவள துணையாளர், முன்பிள் ளைப் பராய அபிவிருத்தி அலுவலர் உட்பட 175 உத்தியோகத்தர்கள் அழைக் கப்பட்டுள்ளனர். நிகழ்வில் அமைச்சின் அலுவலர்களுக்கு கணினிகள், தளபாடங்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## மேலதிக மொழியைப் பயிலும் ஆசிரியர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேலதிக மொழிப் பாடநெறியைப் பயிலும் (சிங்களம்/ ஆங்கிலம்) ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளதால் இதில் பயி லும் அனைவரும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மத்திய கல்லூரியின் பிரதி அதிபரைப் பாடசாலையில் சந்திக்குமாறு கேட்கப்படுகின்றனர். (ஓ)


**வீடு வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் கோயில் வீதி, பொஸ்கோ பாடசாலை, யாழ் British Council ஆகியவற்றுக்கு அருகில் சகலவசதிகள் மற்றும் சகல வாகன தரிப்பிடவசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 530 0493 (41884) (4.6.3)

**வீடு விற்பனைக்கு**

கோண்டாவில் வீதி, இருபாலைச் சந்திக்கு அருகில் சகல நவீன வசதிகளுடன் 3 பரப்புப் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 500 0919 (ரிநீபன்)

**மணமகள் தேவை**

* 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய BSC Civil இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 77 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 15 பாவமுடைய சொந்தமாக நிறுவனம் வைத்திருக்கும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)
* 85 இல் பிறந்த 2இல் செவ்வாய் 37 பாவமுடைய MBBS டாக்டருக்கு டாக்டர், இஞ்சினியர் எக்கவுண்டன் மணமகள் தேவை.
* 76 இல் பிறந்த 8இல் செவ்வாய் 59 பாவமுடைய BSCஆசிரியருக்குப் படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 607 0862 (41888) (12.3.6)
கமலக்கண்ணன் திருமணசேவை,
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.

**வீடு வாடகைக்கு**

சகல வசதிகளுடன் கூடிய 5 பரப்புக் காணி வீட்டுடன் வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வாகனங்கள் விடவும் வசதியுண்டு.
தொடர்பு: 21,ரங்கா லேன், சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 078 392 8256 (சி/10871) (5.6.3)

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் செல்லும் வீதியில் ½ ஏக்கர் தென்னம் மேட்டுக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 845 4559, 077 778 0344, 077 310 1462






**காணிவிற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி-நல்லூர் வீதியில் 1¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(41783)(4.6.3) தொடர்புக்கு:077 712 0968

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி, பாண்டியன் தாழ்வு கொழும்புத் துறைறோட்டுக்கு அண்மையில் 6 பரப்பில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(41784)(4.6.3) தொடர்புக்கு:077 614 6434

**திருத்திக் கொடுக்கப்படும்**

சகல விதமான தையல் இயந்திரங்கள் உங்கள் வீடு, கடைகளில் வந்து திருத்திக் கொடுக்கப்படும். (41946)(7.6.3)
தொடர்பு : 077 848 6929, 077 618 0450

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம் கௌரவ கிறிஸ்தவ (R.C) குடும்பத்தைச் சேர்ந்த வயது 42, செவ்வாய்க் குற்றம் இல்லாத கணக்காளராகப் பணிபுரியும் நல்ல குணமுடைய மணமகனுக்கு கிறிஸ்தவ அல்லது இந்து குடும்பத்தைச் சேர்ந்த நல்ல குணமுடைய படித்த மணமகளைத் தேடுகின்றனர். (41929)
தொடர்பு : 077 722 2467 (7.6.3)

**காணி விற்பனைக்கு**

இல. 10, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, கச்சேரி ஆகிய இடங் களில் இருந்து 2 km தூரத்துக்குட்பட்டது.
தொடர்பு : 0766119691, 0776213966, 021 3214316 (41872)(10.6)

**காணி விற்பனைக்கு**

பாண்டியன்தாழ்வில்
2 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 771 9392 (41950) (7.6.3)

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Centre Jaffna**
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English with Grammar, சிங்களம்
Shorthand Typing இருமொழிகள் மூலமும்
ESOL, IELTS போன்ற வகுப்புகளுக்கு
ஆயத்தம் செய்துவிடல் ஆகிய வகுப்புகள்
நடைபெறுகின்றன.

ஆசிரியை: இ.லோகநாயகி
தொ.பே. 077 677 9340

**திருமறைக் கலாமன்றம்**
**கலைத்தூது அழகியல் கல்லூரி**

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2014ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதான பாடங்கள்**

* வாய்ப்பாட்டு * நடனம் (பரதம், கதகளி, மோகினி)
* வீணை * வயலின் * புல்லாங்குழல் * மிருதங்கம்
* ஓர்கன் (கீபோட்) * ட்றம் * ஒக்ரோபாட்
* சித்திரம் * நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

* கூத்து * கண்டிய நடனம் * யோகாசனம்
* அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
* பண்பாடு (கிறிஸ்தவக்கலைகள், சைவசித்தாந்தம்)

**துணைப் பாடம்**

* ஆங்கிலம்

இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து **14.01.2014 செவ்வாய்க் கிழமைக்கு** முன்பாக ஒப்படைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கும், தொடர்புகளுக்கும்:
அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி,
இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9419

**ஷஷ்டியப்த பூர்த்தி வைபவமும் நூல் வெளியீடும்**





இணுவில் மேற்கு, அளவோடை வீதி,
"ஸ்ரீநகரம்' இல்லத்தைச் சேர்ந்த
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா
(கோப்பாய் சிவம்)
ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி தம்பதிகளின்
ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் நிகழும் மங்கலகரமான விஜய வருஷம் 21 ஆம் நாள் நாளை (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் ஆலயத்தில் நடைபெறுவதை முன்னிட்டு

**மணிவிழா நூல் வெளியீடு**

இடம்: நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகர் ஆலய மண்டபம்
காலம்: நாளை (05.01. 2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணி
வெளியிடப்படும் நூல்: 'சிவானந்த விஜயம்'
இந்துவாக வாழ்வோம் – இந்துசமயக் களஞ்சியம்
ஆசியுரை : சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக்குருக்கள்
தலைமை : சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்
வெளியீட்டு வைப்பவர்: பிரம்மஸ்ரீ சி. சிவசரவணபவன் (சர்மா)
இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று
அனைவரும் கலந்துகொள்ளுமாறு பணிவன்போடு அழைக்கின்றோம்
செல்வன் சி. கீதப்பிரிய சர்மா, செல்வி சி. கீதஸ்ரீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச செயலக கலாசார விழா

யாழ்ப்பாணம், ஜன.4

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசாரவிழா 2013 எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக் கிழமை பி.ப.2 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் உள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஷ்ணராஜாவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் சாந்தினி சிவனேசனும் கலந்து கொள்வார்கள்.

மண்டபத்தில் சிதம்பர பத்தினி தி.பத்தினியம்மா அரங்கில் நிகழ்வுகள் இடம்பெறும்.

நிகழ்வில் சிறப்புரையை கலாசாரப் பேரவை நிர்வாக உறுப்பினர் சி.சிவதாசனும் தலைமையுரையை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனனும் நிகழ்த்துவார்கள்.

இசையரங்கில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி சுகன்யா அரவிந்தனின் இசை நிகழ்வும், "கலையாலும் உலகாளலாம்" என்ற தலைப்பில் சோ.பத்மநாதன் தலைமையில் கவியரங்கும் இடம்பெறும்.

தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கலைஞானச்சுடர் மலர் வெளியீடும், கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறும். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெறும். (ந-7)

## பொதுக் கூட்டம்

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலய பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சபையின் உபதலைவர் தே.இராகவன் தலைமையில் நெசவாளர் மண்டபத்தில் நடைபெறும். இந்தக் கூட்டத்துக்கு சகல பரிபாலன சபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ந)

## சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந் திரட்டு நூல் வெளியீடு

உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந் திரட்டு தேவபாகமும் மானிடபாகமும் என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பேராசிரியர் அழகையா துரைராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் ஆசியுரையை சிவப்பிரம ஸ்ரீ.ச.வைத்திய நாதக்குருக்களும், வாழ்த்துரைகளை பேராசிரியர் கி.விசாகரூபனும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் சு.கிருஸ்ணகுமாரும் நிகழ்த்துவர். வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இ.தில்லையம்பலம் ஆற்றுவார். (ந)

# கண்ணீர் அஞ்சலி



அல்வாய் வேல்விலந்தை முத்துமாரியம்மன் கோயில் அறங்காவல் சபைத் தலைவர் சின்னையா கணேசமூர்த்தி அவர்களின் தாயார்

திருமதி பொன்னம்மா சின்னையா

அவர்கள் கனடாவில் இறைபதம் எய்தியதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம்வல்ல இறைவியைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவ.சிவகுமாரக்குருக்கள் ஆலய பிரதமகுருக்கள்
அல்வாய் வேல்விலந்தை முத்துமாரியம்மன் கோயில்.

கலிகியங்காடு. (41885)(4.6.3)

# மரண அறிவித்தல்

திருமதி **பரமேஸ்வரி சதாசிவம்** (சின்னமேனை)
(புடைவைக்கடை தம்புத்துரையின் மனைவி)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சதாசிவம் 02.01.2014 அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி இரத்தினம், பரமலிங்கம், இராசலிங்கம், சின்னத்துரை மற்றும் கனகலிங்கம், செல்வநாயகம் ஆகியோரின் சகோதரியும், ஜீவானந்தன்(கனடா), சிவகாமசுந்தரி (சென்னை), ஜீவகாந்தி, ஜீவாகரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாயினி, காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் சண்முகேஸ்வரன்(பிரதி அதிபர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), சுதர்சினி ஆகியோரின் மாமியும், லக்ஸ்மி, அபிராமி, சாரங்கன், மகிந்தன், இனியாள், ஆரபி, கனிமொழி, அபானி, அஞ்ஜெனி, அர்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2014) சனிக்கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சண்முகேஸ்வரன் (மருமகன்)

இணுவில் கிழக்கு,
T.P: 021 492 1727
(41955) (4.6.3)

# ஊடகவியலாளருக்கு தனியான இடம்

கல்வி வலயங்களால் நடத்தப்படும் நிகழ்வுகளில் முதன்முறையாக ஊடகவியலாளர்களுக்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டதொரு ஆரம்ப நிகழ்வில் அதிபர்கள் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களுக்கென தனியான இடம் ஒதுக்கப்பட்டு ஆசனங்களும் வழங்கப்பட்டிருந்தன.

கல்வி வலயத்தின் இந்த நடவடிக்கை நல்லதொரு எடுத்துக் காட்டான ஆரம்பம் என ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். (ந-9)

# கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஏழாலை மத்தி, ஏழாலையைச் சேர்ந்த க.சகுந்தலாதேவி (557234870V), பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த கு.கிருபாகரன் (720803887V)ஆகியோரது அடையாள அட்டைகளும், வேறு ஆவணங்களும் யாழ். போதனா வைத்தியசாலையின் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி வைத்தியசாலை காரியாலயத்தில் ஆவணங் களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வைத்திய சாலைப் பணிப்பாளர் ப.பசுபதிபதி ராஜா அறிவித்துள்ளார். (ந-14)

♦♦♦

தவறவிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டைகள் உதயன் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

வள்ளுவர் புரம், தையிட்டி கிழக்கு, காங்கேசன் துறை என்ற முகவரியிடப்பட்டுள்ள கார்மேகம் பாக்கியராசா (840775020V) 10 ஆம் வட்டாரம் வீராமலை, புங்குடுதீவு என்ற முகவரியிடப்பட்டுள்ள பாலேந்திரராசசிங்கம் சரண்யா (946913014V) கலஹா தோட்டம் லிந்துல என்ற முகவரியிடப்பட்டுள்ள இராமையா சுரேஸ்குமார் (890433200V) சொய்சாபுர மொறட்டுவ என்ற முகவரி கொண்ட பரமேஸ்வரி ஸ்ரீதரன் (495262898V) ஆகியோருடைய அடையாள அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந் துள்ள 'உதயன்' பணிமனையில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (ஓ-14)

## சாவகச்சேரி சிவன் ஆலய கொடி நாளை

சாவகச்சேரி புராதன வாரியப்பர் சிவன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 14 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று தேர்த் திருவிழாவும் மறுநாள் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

பெருந் திருவிழா கிரியைகள் சிவஸ்ரீ கு.து. ஜெகதீஸ்வர குருக்கள் தலைமையில் இடம் பெறும். (ஓ-9)

# அஞ்சலி நிகழ்வும் இரங்கல் கூட்டமும்

உரும்பிராயைச் சேர்ந்தவரும், மிக நீண்ட காலமாக லண்டனில் வாழ்ந்து அண்மையில் அங்கேயே காலமானவரும் சிறந்த சமூக சேவையாளருமான பொன். தெய்வேந்திரம் அவர்களது அஞ்சலி நிகழ்வும் இரங்கல் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆதரவற்ற பிள்ளைகளை ஆதரித்துப் பராமரித்துக் கல்வியூட்ட உரும்பிராயில் கருணை இல்லத்தை நிறுவியமை, காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தை உருவாக்கி வழங்கியமை உட்பட வடக்கிலும் கிழக்கிலும் பல சமூக நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு அன்னார் பெரும் பங்களிப்பு வழங்கியிருந்தார்.

நிகழ்வில் பல சமயப் பெரியார்களும், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு அன்னாரை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஞ)

# குமார் பொன்னம்பலம் நினைவு தினம்

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 14 ஆவது நினைவு தினக் கூட்டம் வவுனியாவில் சிறப்பான முறையில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக வண பிதா இராயப்பு யோசப் கலந்து கொள்வார். "தமிழர் அரசியலும் சர்வதேச சமூகமும்" என்னும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் இங்கு உரை நிகழ்த்தவுள்ளார்.

மேற்படி நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவிருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்டச் செயலாளர் சி. கோபால கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (க-421)

# நெஞ்சை நெருடும் நினைவலைகள்



அமரர் S.ராஜா
(Retd. Govt. Servant)
உதிர்வு
04.01.1982

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாவின் 32 ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் பசுமையான நினைவுகளும் எம் அம்மாவின் கடந்த கால அகால மரண நீங்கா நினைவுகளும் ஆறுவதில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

78/3, Maevilla,
Manipay Road, Uduvil.

R.மகேந்திரன் (Retd. SALF)
R. இந்திரன், S. வசந்தி.

(41895)(2.6.3)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கந்தையா செல்வராசா

தோற்றம் 01.01.1956 — மறைவு 05.12.2013


கடந்த 05.12.2013 இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (04.01.2014) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

கோயிலாமனை,
கொடிகாமம்.
(41923)(12.6)

குடும்பத்தினர்.

# நீங்கா நினைவஞ்சலி



பூவுலகில் 25.12.1942
புகழுடலாக 28.12.2011

அமரர்
செல்லர் குணபாலசிங்கம்

திதி : வளர்பிறை சதுர்த்தி
(04.01.2014)

நேசத்துடனும் அன்புப் பாசத்துடனும்
ஒரு கூட்டுக் கிளியாக
எமை வளர்த்து ஆளாக்கி
நேர்வழியில் வாழவைத்த
எம் குடும்ப சூரியன்
எம் அன்புத் தெய்வத்தை
எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகிறோம்.

உரும்பிராய் மேற்கு.
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(41887) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையை நலிவடையச் செய்த பெருமை இந்த அரசுக்கே உரியது

## பல்கலை. ஆசிரிய சம்மேளனம் விமர்சனம்

கொழும்பு, ஜன.4

இந்த நாட்டின் கல்வித்துறையை வேறு எந்த அரசையும் விட மிக மோசமாக நலிவடையச் செய்த பெருமை இன்று பதவியிலுள்ள அரசுக்கே உரித்துடையதாகும் என்று பல்கலைக்கழகங்கள் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் விமர்சிக்கப்பட்டுள்ளது.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் திட்டம் கைவிடப்படவிருப்பது தொடர்பாக மேற்படி சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கை அதன் தலைவர் டாக்டர் நிர்மால் ரஞ்சித் தேவசிறியால் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கையில் காணப்படும் சில முக்கிய கருத்துக்கள் வருமாறு:-

முதல்படியாக, பொதுமக்களுக்கு மிக முக்கியமும், ஆழ்ந்த கவலைக்குரியதுமான கல்விசார் விடயங்களில் கல்வி அமைச்சர் தன்னிச்சையாகவும் திடீர் திடீர் என்றும் கொள்கை முடிவுகளை எடுத்து வெளியிடுகின்றார். அரசின் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் இது பெரும் பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. கல்வித் துறையில் மட்டுமல்ல ஏனையதுறைகளிலும் இதுவேநிலைமை. அமைச்சர்கள் திடீர் தீர்மானங்களை அறிவிக்கிறார்கள். அதைவிட வேகமாக தீர்மானங்கள் தலைகீழாக மாற்றப்பட்டு விடுகின்றன. அது போலவே 5 ஆம் தரப் புலமைப் பரிசில் தொடர்பான தீர்மானமும் மிக விரைவில் மாற்றி அமைக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. உறுதியான ஓர் அரச தீர்மானங்களை எடுக்கும் முறைமை இதுவன்று. மக்களோடும் யதார்த்த நிலைமைகளோடும் தொடர்பு இல்லாத ஆட்சியாளர்களால், அரசியல் மட்டத்தில் தமது இருப்பில் மட்டுமே அக்கறையுள்ளவர்களால் தான் இப்படிச் செய்யப்படும்.

இலங்கையில் நலிவடைந்துவரும் கல்வித் துறையின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசிலும் இன்று பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அதனால் அது பிள்ளைகளுக்குப் பெரும் உளவியல் பளுவாக மாறியுள்ளது. அத்துடன் புலமைப் பரிசில் திட்டத்தின் ஆரம்ப நோக்கம் நிறைவேற்றப்பட்டதாகவும் தெரியவில்லை. இருந்தாலும் அரசியல் அல்லது சமூகத் தொடர்புகள் காரணமாக சலுகைகளும் விருதுகளும் பெறுவதை விடுத்து திறமையால் மட்டுமே அவைகளைச் சாதிப்பதற்கான ஒருசில வாய்ப்புக்களில் இதுவும் ஒன்றாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புலமைப் பரிசில் திட்டம் இரத்துச் செய்யப்படுமானால் பாடசாலை அனுமதிகளில் இப்போது இருப்பதை விட அரசியல் வாதிகளின் தலையீடுகள் அதிகரித்துவிடும். அமைச்சர் குணவர்த்தனவின் தீர்மானத்தில் சிறுவர்களின் நலனை விட இந்த அம்சமே மேலோங்கியிருப்பதாக நாம் கருதுகின்றோம்.

இந்த ஆட்சியாளர்களின் கல்வி தொடர்பான தீர்மானங்கள், மக்களின் சமத்துவம், நீதி மற்றும் நல்லாட்சி தொடர்பான எந்த வித அக்கறையும் காட்டாமல் எடுக்கப்படுபவை என்பதை வெளிப்படுத்துகின்றன. எனவே அரசுக்கோ கல்வியமைச்சருக்கோ வேண்டுகோள் விடுப்பதை விடுத்து இந்த அபாயங்கள் குறித்து மக்களை விழிப்படையுமாறு கோரி நிற்கின்றோம். தங்கள் அபிலாசைகளை பிரதிநிதித்துவம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களே அவர்கள் செய்யும் காரியங்களுக்கெல்லாம் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும் கேட்டுநிற்கின்றோம் - என்றுள்ளது. (ப)

# ஒழுங்கமைக்கப்படாத காணி இலக்கங்கள்

## வறியவர்களுக்குக் கிடைக்கும் உதவிகள் திரும்பிப் போகும் அபாயம்

கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பகுதியில் காணிகளுக்கான இலக்கங்கள் ஒழுங்கமைப்பின்றி இருப்பதால் வறிய மக்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் கிடைக்காமல் போகும் அபாயம் காணப்படுவதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

அங்குள்ள காணிகளில் ஒழுங்கற்ற இலக்கங்கள் போடப்பட்டு வழங்கப்படும் வாழ்வாதார உதவிக்கான விண்ணப்பங்களைப் பார்வையிட வரும் அதிகாரிகள் காணி இலக்கங்கள் ஒழுங்கற்ற நிலையில் காணப்படுவதால் விண்ணப்பங்களைப் பரிசீலிக்க முடியாமல் திரும்பிச் செல்கின்றனர்.

இதனால் உதவிகோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை உரிய திணைக் களங்களுக்கு அனுப்ப முடியாமல் போய்விடுகிறது.

கிளிநொச்சி பிரதேச சபையினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வட்டக்கச்சியில் உள்ள அனைத்துக் காணிகளுக்கும் இலக்கங்களைப் பதிவு செய்து வழங்குமாறும் மக்கள் கோரியுள்ளனர். (ந-9)

# வேலணையில் கைப்பணிப் பயிற்சி

வேலணை கிழக்கு கிராம அலுவலர் இல. ஜே/14 பிரிவில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மகளிருக்கான தையல் கைப்பணிப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் ஆறு மாதங்களுக்கு தையல் கைப்பணிப் பயிற்சி நெறிகள் நடைபெறும். தொடர்ந்து முக ஒப்பனை, மனையியல், சிகை அலங்காரப் பயிற்சி நெறிகள் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ந-7)

## கண்ணீர் அஞ்சலி



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கே.கே.எஸ் வீதி, 3 ஆம் கட்டையடியை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான "ரதி மில்" உரிமையாளர்

அமரர் இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவி

திருமதி சிவபாக்கியம் இராசநாயகம் கனடாவில் காலமானார். அன்னாரின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எங்கள் மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.7, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

அமரரின் மூத்த மருமகன்
யோகராசாவின் சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி டி சேல்ஸ் சூசைப்பிள்ளை - தி.கு



இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டுவரும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி. டி. சேல்ஸ் சூசைப்பிள்ளை நேற்று (03.01.2014) வெள்ளிக்கிழமை இணைந்துவிட்டார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (04.01.2014) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
அருட் சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ்
மாகாணத்தலைவி


121 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

After O/Level's
சர்வதேசதரம் வாய்ந்த டிப்ளோமா கற்கைநெறிகள்
DiTEC INTERNATIONAL
Diploma in Information Technology
Duration : 3 months
Free Text Books
assured by edexcel
With an International Certification (Edexcel - UK)
FREE DVD with Role-play Videos
Diploma in English
DiE INTERNATIONAL
Duration : 3 months
Free Text Books
assured by edexcel



கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்
- 10 பாட டிப்ளோமாக்கள் உள்ளடங்கியது
- பாடப்புத்தகங்கள் இலவசம்
- அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
- ESOFT இன் 10 பாட டிப்ளோமாக்கள் சான்றிதழுடன் Edexcel UK, BCS-UK போன்ற பிரித்தானிய சான்றிதழ்களையும் பெறமுடியும்.

பிரித்தானியப் பட்டப்படிப்பின் முதல் வருடப் பட்டப்படிப்பிற்கு சமனான கற்கைநெறி
6
FREE Pendrive
Most popular IT Diploma in Sri Lanka Over 25,000 enrollments in 2012
International Recognized Diplomas are ONLY @ ESOFT
DiSE assured by edexcel INTERNATIONAL — Diploma In Software Engineering
DiCA assured by edexcel INTERNATIONAL — Diploma In Computerized Accounting
DiBM assured by edexcel INTERNATIONAL — Diploma In Business Management
DiWE assured by edexcel INTERNATIONAL — Diploma In Web Engineering
புதிய பிரிவுகள்
2014.01.06 காலை 9 : 00 மணி
பாடநெறிகள் தொடர்பாகமேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
077 990 56 11
The Sri Lanka's Largest IT, Business & English Education Network
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142 | 077 309 9 308
KLINOCHCHI BRANCH
01, Kanagapuram Rd, Kili | 021 228 5444
JAFFNA 2nd BRANCH
No.17/1, Brown Rd, Jaffna | 021 750 1120



HND in Computing & Systems Development
M.Sc. / MBA
Degree - Final Year
B.Eng. (Hons) in Software Engineering
B.Sc. (Hons) in Computing
HND in Computing & Systems Development
OL's / AL's / DiTEC
Duration 18-20 Months
-Equivalent to the 1st Years of an (UK) Degree
-Fastest way for successful employment
-Flexible Payment plan (No Hidden Cost)
- Study Full Time / Part Time
- Global Recognition
Final Year
LONDON metropolitan university
Duration : 01 Year
B.Eng .(Hons) in Software Engineering
B.Sc. (Hons) in Computing
For Register
SMS Your Details to
077 990 5611
Registration Closing Date
23rd JAN 2014
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel : 021 222 4142 | 021 750 1120
ESOFT Shaping Lives, Creating Futures.
HOTLINE : 077 309 9 308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனைப் பல்கலையில் பீ.ஏ.சித்திபெற்றோர்

*யாழ்.உயர் கலைக் கல்லூரியில் இருந்து*

யாழ்ப்பாணம், ஜன.4

பேராதனைப் பல்கலைக்கழக பீ.ஏ. பட்ட இறுதிப் பரீட்சை (வெளிவாரி 2012) முடிவுகள் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இந்த இறுதிப் பரீட்சைக்கு யாழ்ப்பாண உயர் கலைக் கல்லூரியிலிருந்து தோற்றி சித்திய டைந்துள்ள மாணவர்கள் விவரம் வருமாறு:-

ப.ஜனார்த்தனன் (இணுவில்), தெ.ரஜீவன் (மிருசுவில்), செ.லிங்கநாதன் (மானிப்பாய்), அ.ஜசிகரன் (கோண்டாவில்), சு.வரதராசா (கைதடி), செ.பகீரதகுமார் (ஏழாலை), லோ. ரஜீவன் (மானிப்பாய்), பொ.சசிரூபன் (புத்தூர்), இ.கருணாகரன் (யாழ்ப்பாணம்), வ.யசோ தரன் (கொடிகாமம்), ர.வாகீசன் (நீர்வேலி), சி.ரணீசன் (கொக்குவில்), அ.தினேஷ் (கொக் குவில்), த.தர்ஷிகன் (சங்கானை), நா.ஜெய காந்தன் (இளவாலை), வ.சசிகரன் (ஆனைக் கோட்டை)-

ர.ரூசீபன் (ஆனைக்கோட்டை), ஜெ.ஜெயதீஸ் வரன் (மானிப்பாய்), சி.ரவிசாந் (கரணவாய்), ம.கிருஸ்ணகுமார் (வல்வெட்டித்துறை), ச.ஜெசிந்தன் (காரைநகர்), சி.மேனகதீபன் (மானிப்பாய்), அ.மதன்ராஜ் (சாவகச்சேரி), சி.சிவறோசன் (சாவகச்சேரி), ம.சந்திரமோகன் (கரணவாய்), வ.சதீஸ்கரன் (கரவெட்டி), நா.துர்க்காலினி (கொக்குவில்), சி.தனுஷியா (கோண்டாவில்)-

கு.றினோயா (கோப்பாய்), பா.சுஜிதா (கோண்டாவில்),பு.தினேஸ்கௌரி (மானிப் பாய்), மு.சுபாஜினி (அச்சுவேலி), ஜெ.தர்மிதா (யாழ்ப்பாணம்), ந.சபிதா (பண்டத்தரிப்பு), த.சிந்துஜா (மானிப்பாய்), ப.தனரஞ்சினி (சுழிபுரம்), சி.விஜிதா (மானிப்பாய்), சி.சிவ தாரணி (மானிப்பாய்), த.சுகன்யா (கரவெட்டி), செ.சதினி (உடுப்பிட்டி), க.நித்தியா (கரவெட்டி), ம.ரஜிந்தா (உடுப்பிட்டி)-

சி.பிரதீபா (கரவெட்டி), சி.கிருஸ்ணவேணி (புலோலி), தி.வானிதி (புலோலி), ர.பிரதாயினி (நல்லூர்), ந.யாழினி (உரும்பிராய்), சோ.நிஷாந்தினி (யாழ்ப்பாணம்), ந.நதியா (புங்குடுதீவு), ஜீ.துஷ்யந்தி (கோண்டாவில்), அ.அமிர்தினி (யாழ்ப்பாணம்), அ.மயூரதி (நீர்வேலி), க.ராதிகா (யாழ்ப்பாணம்), சி.மனோகரி (யாழ்ப்பாணம்), ர.டிலானி (அல்வாய்), தி.அருணா (புலோலி), மா.தர்சிகா (கோண்டாவில்), ந.பிரபாவதி (கொக்குவில்), ஜெ.சுதர்சினி (மானிப்பாய்), க.கலோகேஸ்வரி (நயினாதீவு), வா.திரியாம்பிகை (நயினாதீவு), ப.சர்ஷினி (மிருசுவில்), க.சுகந்தினி (சாவ கச்சேரி), த.கவிதா(சாவகச்சேரி), எம்.செல் வரதி (வட்டுக்கோட்டை),தெ.ரூபிகா (கோண்டா வில்), சி.சிவஜிக்கா (உடுப்பிட்டி), த.கலைமகள் (சுன்னாகம்), ஸ்ரீ.ஸ்ரீவித்யா (கொடிகாமம்), த.சகிலா (ஆனைக்கோட்டை), கா.செலிசியா டெல் வின்(புதுக்குடியிருப்பு), கே.கான்சிருபி (யாழ்ப் பாணம்), எஸ்.கலைவாணி (கைதடி), ஜி.பசித்ரா (கைதடி), ரி.மஞ்சுளா (கொக்குவில்). (ஓ)

**பஸ் விற்பனைக்கு உண்டு**

நல்ல நிலையிலுள்ள லேலன் பலூன் பஸ் விற்பனைக்கு உண்டு.

வாகன இல : ND - XXXX

உற்பத்தி ஆண்டு: 2011

விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:

077 374 4930

(சி/10930)(2.6)

**வீடு விற்பனைக்குண்டு**

கரவெட்டி, சம்பந்தர் கடையடியில் அமைதியான சூழலில் சகல உட்கட்டு மான வசதிகளையும் கொண்ட அழ கான வீடு விற்பனைக்குண்டு. (சி/108320)(2.8)

தொடர்பு: செ.யோகேஸ்வரி. 077 004 7051

## மரண அறிவித்தல்



### ஆழ்வார் கந்தசமி

**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

காரைநகர் காமாட்சி கேணியடியைப் பிறப்பிடமாகவும் மூனாமலை லேன், சுதுமலை தெற்கு மானிப்பாயை வதிவிட மாகவும் கொண்ட ஆழ்வார் கந்தசாமி (ஓய்வு பெற்ற ஆசிரி யர்)கடந்த (01.01.2014) புதன்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஆழ்வார் தம்பதி யரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு.திருமதி. ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கண வரும், காலஞ் சென்றவர்களான ஏரம்பு, இராசையா (நோர்வே) மற்றும் புலேந்திரம் (தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும், வரதராசா, சாந்தி (சுவிஸ்), ஜீவராசா, நேசராஜா, ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிர்மலாதேவி, சண்முகரட்ணம் (சுவிஸ்), கிஷேர் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், விகாஷ், சம்சிக்கா, யசாந், சாந்துஜன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகைள் நாளை (05.01.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூனாமலை லேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (41966) (14.17)

தகவல்:
க. வரதராசா (மகன்)
077 6565826

## விவசாயியைச் சுற்றியது வெங்கிணாந்திப் பாம்பு

வெங்கிணாந்திப் பாம்பினால் சுற்றப்பட்டு உயிராபத்தை எதிர்கொள்ளவிருந்த விவசாயி ஒருவர் காப்பாற்றப்பட்ட சம்ப வம் பழைய முறிகண்டி கிரா மத்தில் இடம்பெற்றது.

பாலச்சந்திரன் ரஞ்சிதகுமார் (வயது-28) என் பவர் கடந்த 2 ஆம் திகதி நெல் வயலொன் றில் பயிர்களுக்கு கிருமிநா சினி தெளித்துக் கொண் டிருந்த போது வயலில் மறைந்திருந்த வெங் கிணாந்திப் பாம்பொன்று திடீரென அவரைச் சுற்றி வளைப்பதற்கு முயன்றது. இதனால் அச்சமடைந்த அந்த நபர் அவலக் குரல் எழுப்பி னார். இதனையடுத்து அயலிலுள்ள வயலில் நின்றவர்கள் ஓடிவந்து அவரைக் காப்பாற் றினர். பின்னர் அவர் மல்லாவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

பழைய முறிகண்டி ஆறுகள் நிறைந்ததொரு கிரா மமாகும். இங்கு சுமார் 36 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களின் முக்கிய தொழிலாக விவ சாயமே காணப் படுகின்றது.

மேலும் இந்தப் பகுதி யில் வெங்கிணாந் திப் பாம்புகள் அதிகள வில் நடமாடித் திரி வது வழக்கமென்பது குறிப்பிடத்தக்கது.

(க-18)

**காணி விற்பனைக்கு**

உடுவில் ஞானப்பிரகாசம் வீதியில் 2 பரப்புக் காணி மற்றும் அதே இடத்தில் அமைந்த வீட்டுடன் ஐந்து துண்டாகப் பிரிக்கப்பட்ட 10 பரப்புக் காணி உடன் விற்பனைக் குண்டு.

தொடர்பு : 077 868 9782 (சி/10927)(8)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வி

### பேரினியாள் சிவகுமாரன்



மலர்வு
04 . 10 . 2005

உதிர்வு
04 . 01 . 2010



ஈரிரண்டாண்டாய் இவ்வுலகில் நீ
இன்பங்கள் அள்ளித் தந்தாய்
இனியா இனியா என அழைத்திட நாம்
இன்முகம் காட்டி யெமை
இன்புலகில் ஏற்றிட்டாய்
பேரின்பம் புரிந்திட்டாய்
பேரினியாள் நீ எமக்கு

ஈரிரண்டாண்டாய் இவ்வுலகை விட்டு
எங்கம்மா சென்றாய் நீ
ஏங்கித் தவிக்கின்றோம் இங்குன்
இனிய முகம் தேடி
இராப் பகலாய் துடிக்கின்றோம்
உன் பிரிவால் நாமிங்கு

காலனும் பொறுக்கவில்லை
கைதவமும் பலிக்கவில்லை
வேலனை வேண்டியும்
வேணவா ஆயிற்று
வெந்துயர் கொண்டிங்கு
வேகின்றோம் நாமிங்கு
விரைந்தோடி வந்திடம்மா நீ
விரைந்தோடி வந்திடம்மா!

(41960)(10.6)

சிற்பத்தன்புலம்,
வவுணாவத்தை, தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
23.02.1951

விண்ணில்
02.01.2006

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர் திருமதி

### ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

திதி-(வளர்பிறை திருதியை) 04.01.2014

பாதம்பட்ட இடமெல்லாம் பார்த்து மனம் ஏங்குதம்மா!
கண்பார்க்கும் இடமெல்லாம் - உந்தன்
அழகு முகம் தெரியுதம்மா!
காட்டிநின்ற உன் அன்பு கைத்தடியாய்
வழி நெடுக வந்திடாதோ!
கானல் நீராய் எமையெல்லாம் கலங்கவைத்து
போனதென்ன?
எம் பாசம் கசந்ததுவோ ஏங்குதம்மா எங்கள் மனம்.
உன் அன்பு பாசத்தை சிந்தையிலே ரசித்தோமே!-
இன்று தனியே தவிக்கவிட்டு நீர் மட்டும் எமைப்பிரிந்த
மாயமென்ன?
உன் வதனம் காணாது எம் உள்ளம் வாடுதம்மா
இனி எங்கு காண்போமே
என்ன சொல்லி அழைப்போமே உனை!
வார்த்தை ஏதுமில்லை. எம் துயர் துடைக்க
தேற்றுவார் யாருமின்றி தேம்பி அழுகின்றோம்.
தேடுகின்றன விழியெல்லாம் உம் வதனம்
காணமுடியவில்லை.
ஈர விழிகளுடன் உறக்கம் தொலைத்த இரவுகளுடன்
உருகும் உம் இரு மழலைகளின் முகம் அறியா
மருமகள்மார் குரல் உங்களின் செவிகளில்
விழவில்லையோ
உங்கள் வரவினில் சாத்தியமில்லை என்றாலும்
மறுஜென்மம் உண்டென்பதை மனதார நம்புகிறோம்.
வரதவிநாயகன் அருளால்
மீண்டும் வருவீர்கள் எனக் காத்திருக்கும்

கணவர்: நா.தெட்சணாமூர்த்தி,
மகன்மார்: தெ.நிஷாகரன், தெ.நிஷாந்தன்
மருமகள்மார்: நிஷாகரன் மலர்மதி,
நிஷாந்தன் ஸ்ரீமகள்.
பேரப்பிள்ளைகள்: நி.ஜனனி,
நி. திருவரேஸ்வரன்,
நி. ஜர்ஷனன்.

145/3, [illegible]குளம் றோட்,
[illegible]ணம்.
T.P: 021 222 8169

(C41964)(10.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை கோல்லங்கலட்டி ஸ்ரீ விரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரண சபையினை மீள அமைப்பதற்கான பொதுக்கூட்டம்


காலம் : 19.01.2014 - ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப. 10.00 மணி
இடம் : ஆலய முன்றல்

மேற்படி பொதுக்கூட்டத்திற்கு ஆலய மகோற்சவ உபயகாரர்கள் ஏனைய திருவிழா உபயகாரர்கள் மற்றும் அடியவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

தற்காலிக புனருத்தாரண சபை.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 17 08 1940



இறப்பு 25 12 2011

திரு

## இராஜரட்ணம் கதிர்காமநாதன்

திதி : 04.01.2014

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே !

இப்பாரினில் எம்மை பரிதவிக்க விட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் அப்பாவே !

*உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் குடும்பத்தினர்*

42 - 2/2, Boswel Place, Colombo - 06

## மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 04

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் தரம் IV ற்கான பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை மற்றும் பயிற்சி வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளை தவறாது சமூகம் தருமாறு யாழ். மாவட்ட மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (த-23)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## 29 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்
## ஜனவரி மாதம் 10 ஆம் 11 ஆம் திகதி 2014

யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் 11 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோர்க்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளை பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் ஆவணங்கள் சமர்பித்தல் வேண்டும்.

* பட்டமளிப்பு வைபவத்தில் பங்கு பற்று வதற்கான பணம் செலுத்திய பற்றுச்சீட்டு.
* பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை
* புகைப்படம் மற்றும் DVD யினை பெறுவதற்காக ரூபா 250/= இனை மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளையில் (கணக்கு இலக்கம் - 162100160000880) வைப்புச் செய்த பற்றுச்சீட்டு.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 2014.01.07 | மு.ப. 09.00 - 12.00 | PhD, M.Phil, MED, PGDE, B.Sc (Nursing), MBBS, B.Sc |
| | பி.ப. 02.00 - 04.00 | M.A (Tamil), M.A(S.S), M.A(D.S), B.Sc (Pharmacy), B.A (Gen), BSMS M.A(Publ.Admi), B.Sc (Agri) B.Sc (Com.Sc), BSc(MLS), B.com |
| 2014.01.08 | மு.ப. 09.00 - 12.00 | B.A (Special), BFA(Art & Design) BFA (Dance), BFA (Music) |
| | பி.ப. 02.00 - 04.00 | BBA, LLB, MSC, B.A (Opt) |


மேலும் உயர்கல்வி அமைச்சினால் மேற்படி தினங்களில் விநியோகிக்கப்படும் வினாக் கொத்தினை பூரணப்படுத்தி கல்விக்கிளையில் பட்டமளிப்பு அங்கியை பெற்றுக் கொள்ள முன்னர் சமர்ப்பிக்கவும்.

**குறிப்பு :**
வவுனியா வளாக மாணவர்கள் தங்களுக்குரிய பட்டமளிப்பு அங்கிகளை வவுனியா வளாகத்தில் 07.01.2014 மற்றும் 08.01.2014 ஆகிய தினங்களில் முற்பகல் 10.00 தொடக்கம் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்

# மரண அறிவித்தல்

# மனுவேற்பிள்ளை மரியதாஸ் (குட்டி)



பழைய வேதக்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை மரியதாஸ் (குட்டி) நேற்று (03.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் மனுவேற்பிள்ளை -சுவக்கினாளம்மா தம்பதியரின் அன்பு மகனும், செபமாலை (ஆனந்தம்)- லூர்த்துமேரி (பாக்கியம்) தம்பதியரின் அன்பு மருமகனும், இருதயநாயகியின் அன்புக் கணவரும், அல்பிரேட், ஞானமணி, றீட்டம்மா, லூர்த்தம்மா, ராசநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தங்கமலரின் அன்பு மைத்துனரும், வரதமனோகரி (தீபா), செந்தமிழ்ச்செல்வன் (அப்பன்), கலைச்செல்வி, அருந்தவச்செல்வன் (திலீபன்), ராஜசெல்வன் (கஜன்), நிரஞ்சன், நியூட்டன், கயல்விழி, கலை யரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், வின்சன்ராஜ்குமார், மரிய மனோகரன், இராஜவதனி ஆகியோரின் அன்பு மாமனும், ராகினி, நிலோஜன், நிரூபன், விதுசா, அன்ரன்பிராங்கிளின் , அபிராமி, றேமியா, றெமோன், றேமியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.01.2014) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு சக்கோட்டை சவேரியார் ஆலயத்தில் திருப் பலி ஆராதனை நடைபெற்று பூதவுடல் , நல்லடக்கத் துக்காக பழைய வேதக்கோயிலடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

T.P:- 076 6843291 (41966) (14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப் பரீட்சை நிறுத்தப்பட மாட்டாது

## அரசு மீண்டும் திட்டவட்டம்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை முடிவெடுக்கவில்லை என்றும், அது தொடர்ந்தும் நடைபெறும் என்றும் அரசு நேற்று திட்ட வட்டமாக அறிவித்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல் ஊடகத்துறை அமைச்சில் நடை பெற்றது.

கேள்விநேரத்தின்போது, 2016 ஆம் ஆண்டுடன் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை இரத்துச் செய்யப்படும் என வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் அமைச்சர் கெஹலியவிடம் ஊடக வியலாளர்கள் சரமாரியாக கேள்விக் கணை களைத் தொடுத்தனர்.

கே: 2016 ஆம் அண்டுடன் புலமைப்பரிசில் பரீட்சை இரத்துச் செய்யபடுமா?

ப: இது தொடர்பில் பல்வேறு கருத்துகள் எழுந்தன. இரத்துச் செய்யப்பட வேண்டும் என சிலதரப்பினர் கூறினர். அழுத்தங்களை குறைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. கல்வி சேவை ஆணைக்குழு முன் வைத்த பரிந்துரைகுளுக் கமையவே கல்வி அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கே:அப்படியானால் பரீட்சை இரத்துச் செய்யப்படுமா?

ப: கருத்துகள் எழுந்துள்ளன.

கே: அமைச்சரவையில் இது தொடர்பில் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளதா?

ப: இல்லை.

கே: இன்று ( நேற்று) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் பேசப் பட்டதா?

ப: ஆம், கல்வி தொடர்பில் அமைச்சரவையில் தொடர்ச்சியாகப் பேசப்படும்.

கே: அமைச்சரே..... நேரடியாக சொல்லுங்கள் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை இரத்துச் செய்யப்படுமா? இல்லையா?

அதை தொடர்ந்தும் நடத்த வேண்டும் என்ற நிலைப் பாட்டில்தான் அரசு இருக்கின்றது.

அப்படியானால், எதிர்காலத்தில் நீக்கப்படுமா?

இல்லை. ஆனால், பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கு அழுத்தங்கள் ஏற்படாதவகை யில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம். எதுஎப்படியிருந்த போதிலும் இது தொடர்பில் அமைச்சரவைதான் இறுதி முடிவை எடுக்கும். (த-சி)

# உள்ளூராட்சிச் சட்டத் திருத்தம் ஆராய்ந்து வருகின்றது அரசு

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

உள்ளூராட்சிச் சபை சட்ட வரையில் திருத்தம் கொண்டு வருவது சம்பந்தமாக அரசு ஆராய்ந்து வருகின்றது என நேற்று தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல, அரசமைப்பு என்பது கல்லால் செதுக்கப்பட்ட ஆவணம்அல்லவென்றும் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்றது.

கேள்விநேரத்தின்போது, உள்ளூராட்சி சபை சட்ட வரைவில் திருத்தம் மேற்கொள்வதற்கு அரசு தயாராகி வருவதாக கூறப்படுகின்றது. இவ்வாறு சட்டவரைவில் திருத்தம் கொண்டுவரப்படுமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. ஆனால், இது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப் படவில்லை. அது பேச்சு மட்டத்திலேயே இருக்கின்றது என்றார். (த-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கைத்

என்று கூறினார்.

தமிழக மீனவர் பிரச்சினை பற்றிப் பேசிய பிரதமர், நாங்கள் பல தடவைகள் இலங்கை அரசுடன் பேசியிருக்கிறோம்' என்று கூறினார்.

இப்போது வடக்கு இலங்கையில் தமிழர்களே அரசு அமைத்துள்ளார்கள். எனவே இலங்கையிலுள்ள தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் ஒன்றாக அமர்ந்து பேசி இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும்' என்றும் மன்மோகன் சிங் குறிப்பிட்டார்.

வடக்கு-இலங்கைத் தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் பேசுவதே இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைக ளையும் தீர்ப்பதற்கு இருக்கின்ற 'ஒரே வழி' என்றும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார். (த-400)

### மண்டையோடு

கப்பட்டதுடன் அவற்றுடன் சில தடயப் பொருள்களும் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்று மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளின் மண்டையோடுகள் சிலவற்றின் மேல் பகுதியில் துவாரங்கள் காணப்படுகின்றன.

இந்தப் புதைகுழியில் மேலும் பல எலும்புக் கூடுகள் காணப்படலாம் என்ற நிலையில் அப்பகுதி அகலமாகத் தோண்டப்படவுள்ளது. புதைகுழியை தோண்டும் பணிகள் இன்று சனிக்கிழமை காலை மன்னார் நீதிவான் முன்னிலையில் இடம்பெறும்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யிடம் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் நீதிவான் நேற்று உத்தரவிட்டார். (த-400-56)

### ஜெனிவாவில்

அரசு நேற்று அறிவித்தது.

உலக நாடுகளின் ஆதரவு தமக்கும் இருக்கின்றது என்றும், போர் தொடர்ந்திருந்தால் இன்று ஜெனிவா கதையே இருந்திருக்காது என்றும் அரசு சுட்டிக் காட்டியது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல் ஊடகத் துறை அமைச்சில் நடைபெற்றது.

கேள்விநேரத்தின்போது, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் இம்முறையும் பிரேரணை எதுவும் கொண்டுவரப்படுமா? அவ்வாறு கொண்டு வரப்பட்டால் அரசின் இராஜதந்திர நடவடிக்கைகள் எவ்வாறு அமையும்? ஜெனிவா தொடரை எதிர்கொள்வதற்கு அரசின் தயார்படுத் தல்கள் எந்த மட்டத்தில் இருக்கின்றன? என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையி லேயே அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக் வெல மேற்கண்டவாறுதெரிவித்தார்.

"ஜெனிவா தொடரில் எழும் சவால்களை எதிர்கொள்வதற்கு அரசு தயாராகி வருகின்றது. இம்முறையும் எமக்கு எதிராக பெரும் சவால்கள் காணப்படுகின்றன. எனினும், இவற்றை எதிர் கொள்வதற்காக நாம் இறுதிவரை போராடுவோம். சூடான்போன்றதொருநிலைமை இங்கு உருவாகும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கூறுகின்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு போரை முடிவுக்கு கொண்டு வந்த தால்தான் இவர்களால் இவ்வாறு பேசக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக போர் தொடர்ந்திருந்தால் ஜெனிவாக் கதையே இருந்திருக்காது. அரசு ஆயிரம் வேலைத் திட்டங்களை செய்தாலும் அதிலுள்ள ஒரு சில குறைகள்ளயே பெரிது படுத்தி பேசப்படுகின்றனன. இலங்கை அரசுக்கு சர்வ தேசத்தின் ஆதரவு இல்லாமலில்லை. ஜெனிவாவில் எதிர்த் தரப்புக்கு 35 என்றால் எமக்கு 30 என்ற நிலை காணப்படுகின்றது. உலக நாடு களின் ஆதரவு எமக்கும் இருக்கின்றது" என்றும் அமைச்சர் கூறினார். (த-சி)

### வடக்கு

ளுக்கும் முன்பாக தாதியர்கள் ஒன்று கூடி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் தாதியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாக சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் பி.சிவயோகம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்குவரும் நோயாளர்களை உரிய வகையில் பராமரிக்க முடியாத நிலையே தற்போது தொடர்ந்து கொண்டிருக்கிறது. தாதிய உத்தியோகத்தர் கடும் வேலைச் சுமை காரணமாக உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் களைப்படைந்து விடுவர். அந்த நேரங்களில் தாதியர்கள் நோயாளர்கள் மீதும் சினம் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க தாதிய உத்தியோகத்தர்களை போதியளவு நியமிக்க வேண்டும்.

தாதியர் தங்குவதற்கு தங்குமிட வசதிகள் கூட போதியதாக இல்லை. அதனால் தூர உள்ள இடங்களில்போய் தங்க வேண்டிய நிலை உள்ளது.

இங்கு சில சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் பல சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆனால் இவற்றுக்கு தாதியர்கள் பற்றாக்குறை கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தென்பகுதியில் ஒரு கடமை நேரத்தில் 8 பேர் வரை பணி புரிய இங்கு கடமை நேரத்தில் 2 பேரே பணிபுரிகின்றனர். தாதியவளம் எமக்கு உரிய முறையில் பங்கிடப்படவில்லை.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு நியமனம் செய்யப்பட்ட 70 தாதியர்களில் 11 பேர் திரும்ப அழைக்கப்பட்டுள் ளமையால் 59 பேரே இங்கு பணி புரிய நியமிக்கப் பட்டுள்ளனர். ஆனால்போதனா வைத்தியசாலையிலிருந்து இடமாற்ற அடிப்படையில் 47 பேர் வெளியேறவுள்ளனர். இதன்படி பார்த்தால் 12 பேரே நியமனம் பெறுவர். தற்போது 47 பேரில் 17 பேர் உடனடியாக இடமாற்றம் பெறுகின்றனர் - என்றார். (த-7)

### மூன்றாவது

கோப்பாய் அக்கரைப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற 48 குடும்பங்களுக்கான பொருள்கள் மற்றும் உபகர ணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் உட்பட அவரது உறுப்பினர்கள் போர்க் காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவுக்கே ஒத்துழைப்பு வழங்கினார்கள். அவ்வாறு ஒத்துழைப்பு வழங்கும் போது பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தார் என்ற ஞாபகம்சம்பந்தனுக்கு வரவில்லை. எனவே நாம் இந்த பகுதியை ஒன்றிணைந்து உயர்த்த வேண்டுமானால் நாங்களும் நீங்களும் ஒன்று சேரவேண்டும்.

நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மக்கள் தங்களுக்கு விருப்பமான வர்களுக்கு வாக்களித்தமை எங்களுக்குச் சந்தோசம். அத்தோடு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து உறுப்பினர்களை ஆட்சியில் அமர்த்தினார்கள். அதுகுறித்தும் நாங்கள் சந்தோசப்படுகின்றோம்.

தற்போது வடக்கு மாகாண முதலமைச்சராக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் கடமையாற்றுகிறார். அவரை நாங்கள் மதிக்கின்றோம் அவருக்கு நாங்கள் கௌரவமளிக்கின்றோம். மாகாண சபையின் அதிகாரங்கள் எவை என்பது பற்றி அவர் அறிந்திருப்பார் என்று நான் நினைக்கிறேன்.

ஒரு மாட்டு வண்டியிலே ஒரு எருமை மாட்டையும் ஒரு கடா ஆட்டையும் கட்டினால் அவை சேர்ந்து நன்றாகப் பயணிக்க முடியாது. இது போன்றல்லாது மத்திய அரசும் மாகாண சபையும் சேர்ந்து செயற்பட்டால் மட்டுமே அபிவிருத் தியை அடையமுடியும் என்றார். (த-21)

### வலி.வடக்கு

நலன்புரி நிலையங்களிலும் தங்கியுள்ள மக்களின் மீளக் குடியமர்வு தொடர்பில் அமைச்சரிடம் பிரதேச செயலர்கள் சுட்டிக்காட்டினர். பலாலி விமான நிலையம், காங்கேசன் துறைத் துறைமுகம் ஆகிய இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், மீளக்குடியேற்றம் தொடர்பில் என்னால் எந்த உறுதிப்பாடும் வழங்க முடியாது. மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்பது உண்மை. ஆனால் அதுபற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் முடிவு செய்வார்.

மீளக்குடியமர்வு எப்பொழுது இடம்பெறுகிறதோ அப்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அதுவரை நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்குத் தேவையான வசதி களை செய்துகொடுக்க முடியும் - என்றார். (த-4-5)

### தேர்தலின்

கமாகக் கூறியுள்ளார்.

அத்துடன், 2014 ஆம் ஆண்டில் புதிதாக எந்தவொரு கட்சியும் பதிவு செய்யப்பட மாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று வெள்ளிக்கிழமை தேர்தல் செயலகத்தில் நடைபெற்றது. மேல் மற்றும் தென் மாகாண சபைகள் இன்னும் சில நாள்களில் கலைக்கப்படவுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் செயற்பாடுகள், தேருநர் இடாப்பு, அரசியல் கட்சிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட மேலும்பல முக்கிய விடயங்கள் தொடர்பிலும் இச்சந்திப் பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

குறிப்பாக வேட்புமனுத் தாக்கலின் போது வேட்பாளர்கள் தேசிய அடையாள அட்டையில் -பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர்களையே வேட்புமனுவில் குறிப்பிடவேண்டும். இதற்கு மாறாக அகரவரிசைக்கேற்ப பெயர் முன்வரிசையில் இருக்கவேண்டும் என்பதற்காக பெயர் மாற்றங்கள் இடம்பெற்றிருந்தால் வேட்புமனுக்கல் நிராகரிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, தேர்தல் ஆணையாளருக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்றும், வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தேர்தல் ஆணையாளரின் பணிப்புரைகளையும் மீறி இராணுவப் புலனாய் வாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர் என்றும் இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தேர்தல் ஆணையரிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த அவர், இதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இராணுவ வன்முறைகள் தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பு என்னிடம் முறையிட்டபோது அது தொடர்பில் அச்சந்தர்ப்பத்தில் நான் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியுடன் கலந்துரையாடினேன். எனினும், இராணுவத்தின் வன்முறையைத் தடுப்பதற்கான அதிகாரம் எனக்கு வழங்கப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

காலை 10 மணிமுதல் மதியம் 1 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ. சுமந்திரன், வடமாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன், வீ. ஆனந்தசங்கரி ஆகியோரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜோன் அமரதுங்கவும் ஜே.வி. பியின் சார்பில் ரில்வின்சில்வாவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் ஹசனலியும் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் அ.லோரன்ஸ், ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் நிசாந்த ஸ்ரீ வர்ண சிங்கவும், ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் மனோ கணேசன், உதவிப் பொதுச்செயலாளர் சண் .குகவரதன் ஆகியோரும், ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலர் சிறிதுங்க ஜயசூரியவும், ஈ.பி.டி.பியின் சார்பில் அதன் ஊடகப் பேச்சாளர் சி.தவராசாவும் கலந்துகொண்ட னர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் இரு பிரதி நிதிகளும் இதில் பங்கேற்றிருந்தனர். (த-சி)

### போக்குவரத்துப்

அது தொடர்பில் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு பதியப்படுகிறது. அதனை பொலிஸார் தனிச் சிங்கள மொழியில் எழுதுவதனால் பலர் அதை விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் சிரமப்படுகின்றனர். பொலிஸார் பத்திரத்தில் என்ன குற்றச்சாட்டை எழுதுகின்றனர் என்பது கூடத் தெரியாத நிலையில் வாகனச் சாரதிகள் திண்டாடுகின்றனர். அந்தப் பத்திரத்தைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றால் தண்டப்பணம் அறவிடும் பொருட்டு வழங்கப்படும் துண்டிற் கூடத் தனிச் சிங்கள மொழியிலேயே எழுதப்படுகிறது.

இந்தச் சிக்கல் நிலை பல வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று செய்தியாளர்களால் இந்தச் சந்திப்பில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் பொறுப்பதிகாரி சமன்சிகேரா, வீதியில் சம்பவ இடத்தில் மீறப்படும் விதிமுறை தொடர்பில் சாரதிகளுக்கு புரியும் மொழியில் கூறுவதற்கு தாம் நடவடிக்கை எடுப்போம். அத்துடன் போக்குவரத்துப் பிரிவில் தமிழ் பொலிஸாரை அதிகளவில் நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

கடந்தவாரம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இங்கு சில இடங்களில், பொலிஸ் நிலையங்கள், தற்காலிக பொலிஸ் அரண்கள் அமைக்கப்பட வேண்டும் என்று பிரதேச செயலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. அது தொடர்பாக அவரிடம் கேட்ட போது,

ஒரு பிரதேசத்தில் உள்ள சனத்தொகையைக் கவனத்தில் கொண்டே அவற்றை அமைக்க முடியும். அதற்காகப் பிரதிப் பொலிஸ் மா அதிபரால் குழு ஒன்று நியமிக்கப்பட்டு ஆராயப்படுகின்றது. பொலிஸ் மா அதிபரின் பரிந்துரையின் படி அது செயற்படுத்தப்படும் என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்தார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் ஸ்ரீ காமாட்சி சுவீகரித்தது கிண்ணத்தை




யாழ்ப்பாணம், ஜன.4
கொம்மாந்தறை விளையாட்டுக்கழகம் நடத்திய 11 பேர் பங்கு கொள்ளும் 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொம்மாந்தறை விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்ற இறுதி யாட்டத்தில் கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

"–"

ஆட்டநாயகனாக கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரர் அயன் தெரிவானார்.

முதல் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்கினை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அயன் 44 ஓட்டங்களையும், ஜெயசீலன் 36 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் சேந்திரன் 4 இலக்கினையும், அனுசயந்தன், ஜெனி ஆகியோர் தலா 2 இலக்கினையும் வீழ்த்தினார்கள்.

111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கர வெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்கினை இழந்து 89 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் ராம் 24 ஓட்டங்களையும், துசியந்தன் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி சார்பில் நிஷா 4 இலக்கினையும் அருண் 2 இலக்கினையும், கஜி. சிந்து ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினார்கள்.

ஆட்டநாயகனாக கொக்குவில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழக அணி வீரர் அயன் தெரிவானார்.

இதே அணியைச் சேர்ந்த ஜெயறூபன் தொடர் ஆட்ட நாயகனாக தெரிவானார். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.4
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.



இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நியூபைட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம்.ஜன.4
அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருவிழாவை முன்னிட்டு மின்னொளி யில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி நிலா ஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.



இரவு 7.30 மணிக்கு கல்வளை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (த-23)

## கோல் காப்பாளர்கள் பயிற்சி திருமலையில்

திருகோணமலை.ஜன.4
திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் பாடசாலை, விளையாட்டுக் கழகங் களின் உதைபந்தாட்டக் கோல் காப்பாளர்களுக்கான பயிற்சிமுகாம் எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை திருகோண மலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கோல் காப்பாளர்களுக்கான பயிற்சிகளை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் கோல் காப்பாளர்களுக்கான பயிற்றுநர் சந்திரசிறி வழங்கவுள்ளார். (த-23)

## நெல்லியடி செலான் வங்கியின் உதைபந்தாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன.4
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெல்லியடி செலான் வங்கி நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், வதிரி டயமன்ஸ் விளையாட்டு கழக மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள் ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் 30 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## அரையிறுதியாட்டங்கள் அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.4
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாண சமர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரை இறுதியாட்டங்கள் எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் மின் னொளியில் இடம்பெறவுள்ளன.

அரை இறுதியாட்டங்களில் வெற்றிபெறும் அணி கள் 14ஆம் திகதி மின்னொளியில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (த-23)



## பாரதி, கல்வளை, பிரதீப் அணிகள் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.4
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருவிழாவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

முதலாவது ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.



3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் அராலி மாவத்தை யுத் 'பி' அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆனைக் கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## பற்றீசியன்ஸ் வி.கவை வென்றது ஜொலிஸ்ரார்

வலி .வடக்கு, ஜன .4
யாழ்ப்பாணம் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ் . மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான 20:20 கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் இரண்டு இலக்குகளால் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகமும், யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 09 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

ரியூடர் 38 ஓட்டங்களையும், சிந்துஜன் 20 ஓட்டங்களையும், அஜித் 18 ஓட்டங்களையும், நோபேட் 16 ஓட்டங்களையும், சுபநேசன் 14 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதி ரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரசன்னா ஒரு பந்துப் பரிமாற்றம் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும், சைலேஸ்வரன் அருண், மணிவண்ணன் முறையே 10, 26, 31 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினார்கள்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 08 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

அருண் 3 ஆறுகள், 5 நான்குகள் அடங்கலாக 50 ஓட்டங்களையும், சைலேஸ்வரன் 24 ஓட்டங்களையும், சோபன் 18 ஓட்டங்களையும், வாமணன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 8 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜீவன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் நிதர்சன், கிளின்ரன், மொரிசன், அஜித் முறையே 8 .16, 22 ,26 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டர்சன் சாதனையும் ஒருநாள் தகர்க்கப்படும்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி யின் நட்சத்திர வீரர் அப்ரிடி 1996இல் இலங்கைக்கு எதிராக 37 பந்துகளில் சதம் அடித்து சாதனை படைத்திருந்தார். அவ ருடைய 17 ஆண்டுகாலச் சாத னையை மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து வீரர் கோரே அண் டர்சன் முறியடித்தார். கோரே அண்டர்சன் 36 பந்தில் சதம் அடித்து மிரட்டியுள்ளார். இது குறித்து அப்ரிடி தெரிவிக்கையில்,

அண்டர்சனின் பெயரை இதற்கு முன்பு நான் கேள்விப்பட்ட தில்லை. எனது உறவினர் ஒரு வர் வந்து உங்கள் சாதனை முறியடிக்கப்பட்டு விட்டதாகக் கூறினார். புத்தாண்டில் எனக்கு வந்த முதல் செய்தி இது தான். ஆனால் இது மிகப்பெரிய சாதனை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். அண்டர்சன் எல்லாப் பாராட்டுகளுக்கும் தகுதியானவர். 36 பந்துகளில் சதம் அடிப்பதற்கு கடுமையான முயற்சி தேவை.

சாதனைகள் எல்லாமே முறியடிக் கப்படக்கூடியவை தான். எனது சாதனையும் ஒரு நாள் தகர்க்கப்ப டும் என்பது தெரியும். ஆனால் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் வரை எனது சாதனை தொடர்ந்து நிலைக்க வேண்டும் என்று விரும்பினேன். இனிச் சாதனைப் பட்டியலில் அண்டர்சனின் பெயர் தான் வரும். 20-20 கிரிக்கெட்டின் அவதாரத்தால், எதிர்காலத்தில் இந்தச் சாதனைக்கும் ஒரு நாள் முற்றுப்புள்ளி வைக் கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன்.

எனது சாதனையை கெய்ல் அல்லது டேவிட் வோர்னர் முறியடிப்பார்கள் என எதிர்பார்த்தேன். ஆனால் புதிய வீரர் ஒரு வர் இச்சாதனையை முடிவுக்குக் கொண்டு வருவார் என்று ஒரு போதும் எதிர்பார்க்க வில்லை. இச்சாதனையை விரைவில் ஒரு பாகிஸ்தான் வீரர் முறியடிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்-என்றார். (த)

# சிறப்பாகச் செயல்படுவோம்




நியூசிலாந்து தொடரில் சிறப்பாகச் செயல்பட முடியும் என நம் பிக்கை வெளியிட்டுள்ளார் இந்திய அணியின் வீரர் வருண் ஆரோன்.

தென்னாபிரிக்கா சுற்றுப்பய ணத்தை முடித்த கையோடு இந் திய அணி நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டு ஐந்து ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது.

இதற்கான அணியில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இளம் வேகப்பந்து வீச்சாளர் வருண் ஆரோன் இடம் பெற்றுள்ளார். முதுகுப்பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து குணமடைந்த இவர், ரஞ்சி கிண்ணத் தொடரில், ஜார்க்கண்ட் அணிக்காக விளையாடி வருகிறார்.

இது குறித்துக் கூறுகையில், அணியில் மீண்டும் இடம்பிடித்தது மகிழ்ச்சியாக உள்ளது என்றும், நியூசிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமானவை என்பதால், சிறப்பாக செயல்பட முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (த)

# மற்றொரு உலக சாதனை



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில், நியூசிலாந்து வீரர் கோரி அண்டர்சன் 36 பந்தில் சதம் அடித்து உலக சாதனை படைத்தார். நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி ஐந்து போட்டி கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங் கேற்கிறது. முதல் போட்டியில் மேற் கிந்தியத் தீவுகள் அணி வென்றது, இரண்டாவது போட்டி மழையால் ரத்தானது. இரு அணிகள் மோதும் மூன் றாவது போட்டி குயிண்ஸ்டவுனில் நடந்தது. மழை குறுக்கிட்ட காரணத்தி னால் போட்டி, 21 பந்துப்பரிமாற்றங் களாகக் குறைக்கப்பட்டது.

இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணி யின் வீரர் அண்டர்சன் 36 பந்தில் சதம் அடித்து உலக சாதனை படைத்தார். அதி வேக சதம் மட்டுமின்றி மேலும் சில சாத னைகளையும்நியூசிலாந்து படைத்துள்ளது.

அதிக சிக்சர்

அண்டர்சன் 14 சிக்சர் அடித்ததன் மூலம், ஒரே போட்டியில் அதிக சிக்சர் அடித்த வீரர்கள் வரிசையில் 3ஆம் இடத்தைப் பிடித்தார். முதல் இடத்தில் இந்தியாவின் ரோகித் சர்மாவும்(16 சிக்சர்), இரண்டாம் இடத்தில் ஆஸ்திரேலியா வின் வொட் சனும்(15 சிக்சர்) உள்ளனர்.

அண்டர்சன் 14, ரைடர் 5, மெக்கல்லம் 3 என நியூசிலாந்து அணி இந்தப் போட்டியில் மட்டும் 22 சிக்சர் விளாசியுள்ளது. ஒரே போட்டியில் ஓர் அணி அடித்த அதிகபட்ச சிக்சர் இதுவே. இதுவும் ஓர் உலக சாதனை தான். இதற்கு முன் இந்தியா, கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 19 சிக்சர் விளாசியது. அது 50 ஓவர் போட் டியில் நியூசிலாந்து அடித்திருப்பது வெறும் 21 ஓவரில் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# நீக்கப்படுகிறார் மலிங்க?




இலங்கைக் கிரிக்கெட் அணியிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவரது அண்மைக்காலப் பெறுபேறுகள் சிறப்பாக அமையாததன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் சபையின் மூத்த அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து புதிய வரு டத்தில் அதிகளவிலான மாற்றங்களை ஏற்படுத்து வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்ப டுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்துப் பாகிஸ்தானுக் கெதிராக இலங்கை அணி 2-3 என்ற கணக்கில் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரைத் தோற்ற பின்பு, முழுமையான திற மைகளை வெளிப்படுத்தாத சிரேஷ்ட வீரர்க ளைக் கொண்டு போட்டிகளை வெற்றி கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக லசித் மலிங்க இலங்கை அணியி லிருந்து நீக்கப்படலாம் எனவும் தெரிவிக் கப்படு கிறது.

லசித் மலிங்க, திஸர பெரேரா இருவரும் போதுமான அளவு அர்ப்பணிப்பை வெளிப் படுத்துவ தில்லை எனவும், லசித் மலிங்கவின் உடற்தகுதி தொடர்பான பிரச்சினைகளும் காணப்படுவ தாகவும், அதன் காரணமாக உடற்தகுதிப் பயிற்சிகளிலும் லசித் மலிங்க பங்குபற்றுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெற்றுவரும் பிக் பாஷ் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கான அனுமதியை திஸர பெரேரா கோரியிருந்ததாகவும், ஆனால் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[illegible]தவிர, இலங்கையின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளர் மார்வன் அத்தப்பத்து, [illegible]ப்புப் பயிற்றுவிப்பாளர் றுவான் கல்பகே ஆகியோரின் பதவிகளும் ஆபத்திலுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (த)

# ஓய்வு பெறுவாரா சேவாக்?



சர்வதேச போட்டிகளில் வாய்ப்புக் கிடைக் காமல் தவிக்கும் சேவாக், உள்ளூர்ப் போட் டிகளில் தொடர்ந் தும் சொதப்பி வருகிறார். இந்திய அணியின் அதிரடி ஆரம்ப வீரர் சேவாக் டெஸ்ட் (319 ஓட்டங் கள்), ஒரு நாள் (219ஓட்டங்கள்) போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்த இந்திய வீரர் இவர் தான். மோசமான துடுப்பாட்டம் காரண மாக, அவர் கடந்த 2013, மார்ச் முதல் அணியில் இருந்து நீக் கப்பட்டார்.

இந்நிலையில் 2013-2014 ரஞ்சி பருவ காலத்தில் பங்கேற்றார். மொத்தம் கள மிறங்கிய 13 இன்னிங்ஸுகளில் 234 ஓட்டங் களை மட்டும் தான் எடுத்தார். டில்லி அணியில் ஒன்று முதல் 6ஆவது இடம் வரை எனத் துடுப்பாட்டத்தில் மாறி மாறிக் களமிறங்கியும் பயன் கிடைக்க வில்லை.

